கந்தன் புகழ்

KANTAN PUKAL

முதல் பாகம்

பொருளே புகழ்தனில் போதம்—அருளில்,
பெருமை யடிக்குமாம் யாப்பு

மதலைச் சொல்.

CONNEMARA PUBLIC LIBRARY
12 DEC 1955
MADRAS

பொருள் அடக்கம்

12 DEC 1955

	முன்னுரை.	
	முகவுரை.	
	முதல் பாகம்	... 1
	கணபதி துதி	... 2
	சரஸ்வதி வணக்கம்	... 2
1.	தோத்திரங்கள்	... 3
2.	பக்திப் பிதற்றல்	... 6
3.	வைராக்கியப் பதங்கள்	... 16
4.	அறுவினை அறுக	... 24
5.	ஞானப் பெருக்கு	... 27
6.	தலத்தாமரைகள்	... 34
7.	உனது அலது எனதோ	... 36
8.	யோக நிதி	... 40
	இரண்டாம் பாகம்	... 41
1.	தோத்திரங்கள்	... 42
2.	பக்திப் பிதற்றல்	... 46
3.	வைராக்கியப் பதங்கள்	... 59
4.	ஞானப் பெருக்கு	... 70
5.	தலத்தாமரைகள்	... 80
6.	தனது அலது எனதோ	... 82
7.	யோகம்	... 85
8.	பொது	... 89
	மூன்றும் பாகம்—அக்ஷரக் கோவை	... 104
	நான்காம் பாகம்—அஞ்சல் திரட்டு	... 107
	ஐந்தாம் பாகம்—கீர்த்தனங்கள்	... 109
	ஆறும் பாகம்—சுத்தரக் குறள்	... 129
1.	நீதி நெறி	... 130
2.	மனம்	... 131
3.	பக்தி	... 132
4.	வைராக்கியம்	... 134
5.	யோகம்	... 137
6.	ஞானம்	... 140
	பஜனை	... 143
	மங்களப் பேறு	... 151

...ARA PUBLIC LIBRARY
1? DEC 1955
MADRAS

கந்தன் புகழ்.

கணபதி துதி.

1 2 3 4
கணனே பேரியா கரியா மதியா

6 5 7
கணமே அருளா கா.

1. கணபதியே. 2. மூத்தவனே. 3. யானை உருவனே. 4. உயர் மதியோனே. 5. அருளுடையவனே. 6. இப்பொழுதே. 7. இன்னல் வராது காப்பாய்.

52044

சரஸ்வதி வணக்கம்.

1 2 5 4
அறிவே யுருவே யருளே துதியை

6 3 7
சிறிதா கலையே பெருமை.

1, 2: அறிவே உருவானவளே. 3. கலை உருவான சரஸ்வதியே. 4. கந்தன் புகழாம் துதியை 5. இயற்ற அருள் புரிவாய். 6, 7: உன் பெருமைச்சக்தி சிறியதா, தாழ்ந்ததா!

DEC 1955
ADRA

கந்தன் புகழ்.

முன்னுரை.

முன்னுரைதான் எழுதுவோர் யாருமிலை, தமிழை
முன்னறியாப் பேதையாமிப் பாவிக்கு நின்னருளே
முன்னிலையா நிற்கவரை யப்படுமி தற்கே
முன்னுரைநின் னுறெழுத்தே என்சரவ ணபவா!

செல்க பெயரே!
செல்க புகழே!
சென்று பரவுக!
நின்று நிலவுக!

தூயர் திருவடியைத் துய்த்திடவே தெம்பளிக்கும் தோழா!
மாயன் மருகனே மருண்டோர்க்கு மயக்கொழிக்கு முருகா!
பேயன் படிப்பில்லாப் பேதையனைப் புகழவேநீ விடுத்து
ஞாயமா நடுத்தெருவில் நிறுத்துவதும் நாதாகு காகா!

ஐயன் பதில்.

முன்பினற்ற[1] என்றற்[2] குறையுந்தா[3] னேதுசொல்[4]
முன்பினிலா[5] விப்புகழ்வே[6] று[7]!

'சரவணபவ'

1, 2. நிராகார வஸ்துவான, எனக்கு (கந்தனுக்கு) 3, 4: விளக்குஞ் சொல் எது; அனிர்வசனீயனல்லவா யான் உண்மையில். 5, 6: முன்னுரை, தலைப் பாகமான முன் சொல் இல்லாத என் (கந்தனுடைய) புகழும். 7, என்னை விட்டும் வேறாகுமா? நானும் என் பெயர் புகழும் ஒன்றே. எனவே புகழிற்கு முன்னுரை எழுதுவது அசாத்தியம்.

12 DEC 1955
MADRAS

கந்தன் புகழ்

சுந்தரம்.

முகவுரை

இப்புகழில் அடங்கியவை கவியல்ல. இயற்றியவன் கவிராயனுமல்லை. கம்பனு, காளமேகனு—வெறும் வம்பனே! கந்தன் கலைஞனைப் பிடித்தால் கவியாகப் பொழிவான். ஆயின் உண்பவனைப் பிடிக்கவே வெறும் உளமமுதாகவே விண்டான். அவன் அருளிய மொழியை யாப்பிற்கென ஏன் சிதைப்பான் இவன்? கலையற்ற குடும்பன், இவனுக்குக் கல்வி ஏது? இதில் யாப்பிருந்தால், இவனறியாது முருகன், கற்றோர் சாந்திக்காக இணைத்திருக்க வேண்டும். யாப்பின் வாசனையே முகராதவன்! அதன் பெருமையை எங்கறிவான்?

சொற்பிழை இருந்தால் இவனுடையது. அருள் பிழை இராது. இதில் புகழ் கண்டிடில் கந்தனது எனத் துதியுங்கள்! பிழையும் புகழும் ஏந்தி என் செய்வது?

கிட்டை கலைத்து மொத்திப் புடைத்து வரை என்றான் அவன். வரைந்தான் இவன். பக்திக்கு எடுப்பு, முக்திக்கு எடுப்பு, என அறிவோர், துதிப்போர், பெறுவார் குகனின் அருளை. இதற்குப் பெயர் கொடுத்த இவனை மறந்து, அரும் துதி கொடுத்த அவனை நினைந்து மனம் உருகுங்கள், அருள் அடையுங்கள்!

ஆக்கியோன்.

இன்சொல் மேவியவள் இகமழி வனிதை,
வன்சொல் வழங்குவளே வளம்இளம்,[1] அகல,
நன்சொல், நலனளியாள் விலைமகள், அறிநீ
என்சொல் லில்லையிது, எற்றுவோர்[2] பொன்சொல்!

1. வளமை, செல்வாக்கு, யௌவனம். 2. கந்தனைத் தொழு தேற்றும் பெரியோர்.

விண்ணொளி வானவர் சேனைத் தலைவா
கண்ணொளி[1] கருமணி போலரும் பொருளே
எண்ணெழுத் திலாயெனை எற்றுவாய் சமாதி
பண்பவி, பிறப்பறும் யோகம் பற்ற.

1. கண்ணிற்குள் ஒளிந்திருக்கும்.

இதுதான் அம்மழலை

மழலையகல மாறியசொல்

பொருளே புகழினில் போதம், அருள்இல்
பெருமை யடிக்குமாம் யாப்பு

CONNEMARA ... 12 DEC 1958 MADRAS

1. தோத்திரங்கள்

1. வருவாய் கணமே குகனே.

முத்தைப் பழிக்கும் பல்லும், புன்முறுவல்
முகமும், தெளிந்த தேனருவிக்
கருணைக் கண்களும், பரந்த நெற்றியில்
பஸ்ம முலர்ந்த கோடும்,
கோவணமும், தளர்ந்த சிறுமேனி யும்,கார்
மேகவண் ணமுமாய் வந்தாய்;
கனவோ நினைவோ யெனக்கலங்க ஓடிஒளிந்
தாய்;கட்டி முத்தம் கொடுக்க
பாலா, உன்கட் டழகை யெட்டிக்களித்
திருக்கு முன்னே, கரைந்து
மறைந்து சென்ருய்; அழகோ அமரா ?
வருவாய் கணமே குகனே!

2. கலியில் காக்கும் கந்தன்.

கட்டழகைக்[1] கடிமணம் புரிந்த கலியில்
கந்தனுய்க் காக்கும் குகனே!
நின்கரு ணைகிட் டியபின் னெட்டுவதற்
கேது முளதோ, மட்டற்ற
அமுதே, துறவில் துலங்கும் தேடற்
கெட்டாத் தவமே! தேனும்
தினையும் தின்ற திருவுளத் தென்பே!
பேசரிய பண்பே! பரனும்
பிடித்தகுருவே! சித்த அலையைச் சிதறடிக்கும்
சத்தே!செத் தசெகத்தைச் சிவமாக்கும்
செங்கரும்பே! பணிந்தேன், பகர்ந்தேன், பிரியேன்,
பிறவேனிற வேனிருப்[2] பேனிறைவா.

1. வள்ளியை.
2. பிறப்பிறப்பற் றிருப்பேன் உன்னையடைந்து.

3. காண வேண்ட ஏதுமுளதோ?

அகந்தை அழியக் கண்டேன், ஆறுமுக
வடிவைக் கண்டேன்; உலக
மொழியக் கண்டேன், உலக ளந்தான்[1]
மருகன் கண்டேன்; பாசம்
அறவுங் கண்டேன், பார்வதியாள் மகனைக்
கண்டேன், காமம் எரியக்
கண்டேன், கார்மேகக் குகனைக் கண்டேன்;
மோகம் உதிரக் கண்டேன்;
மயிலேறும் மதனைக் கண்டேன்! கண்டேன்!!
இனிக்கண்டு களித்து, விரும்பி
வேண்ட ஏதுமுளதோ, வேலா, வேலு
மயிலா! கருத்தே! எழுத்தே![2]

---

1. வாமனவதாரம் எடுத்த பெருமாள்.
2. ஆறெழுத்தானே, சரவணபவா.

---

4. அமரரும் அறியாச் சுகம்.

அமரர் அறியாச் சுகமாம் குமரன்
குகனின் குணமே,
அகந்தை[1] அறியாப் பொருளாம் அவனகமே[2]
அறியும் பெருமை,
அழகன்[3] அணையும் அருளாம் முருகன்
அறமே அறியும்
அறிவாம், பெரியோன்[3] விடுத்த பொறியாம்,
பிரணவன் பரத்தை
அளிக்கும் ஒளியாம், பெரியார் பிடிக்கும்
புறமாம்[4] கந்தன்
பெரிதாய்ப் புகழும் பெயராம், விழிக்கும்,[5]
வழியை விளக்காய்
கருணா! விதியால் விழிக்கும் எனக்கே,
மதியோர்[6] மதிக்கும்
மதியே! உனைத்துதியால் பிடித்தேன் பொருளே![7]

---

1. அகந்தை கொண்டோரால் அறியப் படாத.
2. இதயத்தில் அறியப்படும் கீர்த்திப் பொருளாம்.
3. பரமசிவன்.
4. புறத்தில், வெளிக்கண்களுக்குப் புலப்படும்.
5. அறிவிற்கு விழிக்கும்.
6. நல்மதி உள்ளவர்கள்.
7. பரம்பொருளே.

5. துன்பங்களகற்றிடுவான்.

கந்தன் மாபெரியான், கருணை வள்ளல்,
உள்ளப் பெருக்கில்
ஊற்றாய் ஊறிடு மாமவன் கருணை,
வெள்ளப் பெருக்காய்,
வினைவந்து அமிழ்த்துங் கால்மற வாது
மரக்கலமாய் வந்தருள்வான்;
வெந்தமனம் ஆற்றி வேலவனாய் ஓங்கி
நின்று துதிக்கத்
தந்திடுவான்; துன்பங் களகற் றிடுவான்,
பாசம் பறக்கடிக்கும்
பார்வதியாள் பாலனருள், மோசம் போகாதீர்,
போற்றிடுவீர் பேரன்பை.

---

6. உடல் மறந்து நில்.

மனமழிக்கும் மலையான் மணியன்,
புரமெரித்த புலித்தோ லுடையான்
குமரன், புவியளந்து பலிபுதைத்தோன்
மருகன், கனத்துயர்ந்த கூர்முலையோர்
உறவறுக் கும்உமை யாள்தனயன்,
எனதென் றேசித் திரிவோ ரகந்தை
யொடுக்கித் தவிர்க்கும் இனமகற்றி
இதயத்தடை பொடிக்கும் முருகன்,
தனதென்றில் லாதுறந்த தூ யசித்தர்சோ
தித்திருஅரு ளன்,சினமறுந் தும்வெளித்
துறவில்லோர்க் கருளான் என்றேங்
காய்நெஞ்சே, வருவான் கந்தன்,
துதிபொழிந் துஉடல் மறந்துநில்.

---

2. பக்திப் பிதற்றல்

7. எரிப்பாய் மனதை

திரிபுர மெரித்த திரிசூலன், ரதியின்
    மதனை எரித்தான்
நின்தந்தை, அண்டம் தகிக்கு மனலைக்
    கண்ணு யுடையோன்
முக்கண்ணன், விடுத்த பொறியில் பிறந்தும்
    கந்தா! என்மனதை
எரிக்கும் தணலும் உனக்கே னில்லை?
    பொய்கை பொறியைத்
தணிக்க இழந்தையோ! பாசம், ஆசை
    ஈரம் அகன்றஇம்
மனதாம் செத்தை, சிறிதோர் பொறியைப்
    பெரிதோர்சினத் தால்விடுக,
அனலால் அழிய, நீயழிக் காப்பழியும்
    கழிய, வினையும்
பழுக்கா தொழியச், சித்தம் சிவமாகச்
    சத்தாய்க்[1]கிடப்பேன்வேலா!

---

1. ஆன்மப்பொருளாய்.

---

8. மனமழிக்கா விந்தை!

ஒழியா மனந்தா னழியா மதமா
    யடங்கா விதியாய்
வதைக்க, முருகா! உனையணுக, உளமுருக,
    வினையறு காதியலுவ
துளதோ! தனமே, தலமே, புகழே
    பொழிய எளிதில்,
அளிக்கும் இளையா, மனமே[1] ஒழியப்
    பணிந்தால் பிரியனே,
மதியா தொளிந்தே[2] திரிவோய் விளக்கேன்[3]
    விந்தை, நினக்கரிதோ,
அலபெரிதோ, இது அழகோ, வேலிலையோ[4],
    மொழியேன் மயிலா!

---

1. மனத்தைக் கொல்லு எனவேண்டினால்.
2. கவனிக்காது, கோரிக்கையை நடத்தாது, காணாது, திரிகிறவனே.
3. இந்த ஆச்சர்யத்திற்குக் காரணமென்ன?
4. துஷ்டர்களை சம்ஹரித்த சக்தி இலையோ.

9. இருளை அழித்த ஐயன்.

கந்தன் மாமலையான் கலக்கம் கழிக்கக்
　　'கந்தா கந்தா' என்றுள
முருகிக் கதற, 'வந்தேன் வந்தேனென்'
　　றருளால் உருவெடுத் தருள,
வினையும் வலியும் விடியற் பனிபோல்
　　விலக, விழிக்க[1], உலகும்
துலங்கா தொழிய, கனவோ நினைவோ
　　வென்றிருக்க, ஏழை இருளை
அழித்தான் ஐயன், துதித்தும் வாரா
　　இத்தூய மலர்,அகல[2] விடுத்தும்
'அகலே' னென்றுள முருக்க, உழைப்பின்றி[3]
　　ஒழித்தானெனை, விழியேனிப்
பாழுலகில், புதைந்தேன் நின்திரு வடியில்
　　பாலா! பிறவேனினி இறவேன்!

---

1. அறிவில் விழிக்க.
2. வேண்டாமென்று மறக்க முயன்றும்.
3. செயலியற்ற அவசியமின்றி.

---

10. வினை எரிய.

பிணிவிலகப் புவியகலப் பணிபெருகத் துயரொழியத்
　　துதிபொழிவீர், திருமால்
மருகன்தினம் பெறுவீர், தண்டம் கொண்ட
　　தண்டபாணி அடைய
அழுவீர், பணிவீர், பெயர்புகழைத் தொழுவீர்,
　　உளமுருகக் கரைவீர்,
எழுவீர், அனுதினமும் அருணனெழ[1] அருணகிரி
　　அடிபுகழும்[2] அருட்குகனை
அடைவீர், வழிவிழியீர்[3], விதிபழியீர், வினைஎரிய,
　　இதயகுகை இருமுருகன்,
கனனிளையன், பெருமலையன், வருவான்[4].

---

1. சூரிய உதயமானதும்.
2. அருணகிரி இயற்றிய திருப்புகழ் துதிக்கும்.
3. கலக்கும் உலகில் வழி தெரியாது விழிக்காதீர்.
4. இவ்வாறு செய்ய, ஊழ்வினை எரியப் பிரசன்னமாவான்

11. எனை யாண்டருளே!

பெண்ணும் பொன்னும் பேதை மனதைப்
பறிகொள்ள, விண்ணும்
வீரமும் விரைந்து விளங்கா[1] தொழிய,
கண்ணும் கருத்தும்
மண்ணில் கலங்கி நிற்க, விழிப்பும்[2]
வாக்கும் அழியும்
பொருளில்அயர்ந்[3] தேயழிய, உளமும் உயர்வும்
உலர்ந்தே[4] இழிய,
என்றும்[5] இல்லா வினையை என்செய்தேன்,
எனதலறும் ஒலியும்
முருகன் செவியில் படாது சிதறப்,
பட்டேன் போதும்,
போதும், சுட்டேன் வினையை, சுகத்திலி
ருத்தியெனை யாண்டருளே!

---

1. மனதிற்கெட்டாவிதமாய் மறைய.
2. அறிவும்.
3. புலன்களைத் திருப்திசெய்யும் விஷயங்களில் ஈடுபட்டு.
4. காய்ந்த தரைபோல்.
5. யாரும், எப்பொழுதும் செய்யாத கொடிய.

---

12. மலையப்பன் சொந்தப்பன்.

கந்தப்பன் என்னப்பன் காத்து நிற்க,
பெத்தப்பன் பெரியவனோ?
அந்தப்பன் இந்தப்பன் வந்தப்பன் வழிகாட்டி
வாழ்த்துவனோ? சிறும்வினை
சிதரோட சிற்றப்பன் சிறந்தவனோ? பெரியப்பன்
பெற்றெடுத்த பேரறிஞன்
முருகன்புன் முறுவல்முகம் கொண்டுஉளமீ தூரும்வரை
எந்தப்பன் வந்தென்னபயன்?
குமரப்பனு டன்கூடி இதயகுகை இனித்து
நிற்பாய்! மந்தப்பா!
மலையப்பன் சொந்தப்பன்! நமனப்பன் நகைக்குமுன்
நாடுவாய் நலமே!

13. விரைந்து அருள் மணியா.

சவமாய்க் கண்டேன் ஜெகத்தை சிவமே!
சலியாதிருத் தல்அருள்வாய்,
பிரியா திருத்தல் பயின்றேன் பரமேஇனி,
பரம்பிடியா திருத்தல்
பிழையே, வினையும் அழியக் கண்டே
னிறைவா! யினியும் விழியா
திருத்தல் மதியோ? சுருதியே யுருவாய்
விளங்கும் சிவனார் விடுத்த
சிதறும் பொறியால் பிறந்தாய்! பழியா திருக்க
பரத்தில் மகிழ்ந்து
மறைய விரைந்துஅருள் வாய்மணியா! மலைமேல
மரும்மயில்வா கனனே!

---

14. மறைவாய் வருவாய் பணிய.

முருகா, முருகா, உருகா துள மேலமர,
உருவாய் சிறிதா
யழகாய் வடிவாய் எழுக, மெழுகா
யுருக சிறியா!
ஒளிபோ லொளிந்தாய், மறைவாய் விரைவில்
வருவாய் பணிய,
கணநா யகனின் இளையா, பெரியா,
ப்ரணவா, அகண்ட
அருளா யுணநா னறிய, இறைவா,
இரங்கு, முதலின்
மகனே, கடியக் காப்பாய்க் கவர்ந்து
குமரா குகனே!

---

15. உனைப் பிடியாப் பிறவி பதரே.

அருணகிரி யானழைப் பிற்கிசைந் தாயிறைவா
கந்தா! அடியே
னலறச் செவிடாய் மறத்தல் தகுமோ?
அந்தோ! மதியா

வுளமாய் முருகா, அமைதல் இறைவா
அழகோ? பரமே
நினையா மனதைப் படைத்தாய் ப்ரணவா,
துதியாலுரு காதுளமும்,
துடியா [1] தடியாய் [2] திரிய, [3] விதியேல் [4]
பெருமாள் மருகா,
உனைப்பிடி யாப்பிற விபதரே பரமா
வருவாய் கடுககுகனே!

---

1. உனைப்பற்றுவதற்குத் துடிக்காத,
2. உணர்ச்சியற்ற தடிபோல்,
3. அவித்தையில் வாழ.
4. இடம் கொடாதே, விதிக்காதே.

---

16. உளமே லுனையே அறிய.

இகழ்ந்தா லிழிவே னிறைவா,
புகழ்ந்தால் பிறவேன் பரமா!
பணிந்தா லடைவேன் ப்ரணவா,
பவமாம் பிணியில் பிணைந்தால்
படுவேன் பொருளே, தவமேதிட
மாய்தொடுக்கத் தருவா [1] யருளே,
இடமேயறி [2] யாதிருந்தேன் மயிலா,
உளத்தில்உனை யேதெரியா தலைந்தேன்
இனிமேலுற வைக்கணமும் மறவேன்,
மலையா, பிரியா நிலையை
யறிவில் அருள்வாய், பெரியா!

---

1. சுகத்தைத் தருவாய்.
2. நீ இருக்குமிடத்தை அறியாதிருந்தேன்.

---

17. நுன் துதி மட்டமா?

அத்துவிதம் கிட்டா மட்ட நிலையி
லெட்டுவதென் [1] முருகா!
கிட்டியதால் நுன்துதி மட்டமா [2] என்ன?
வெட்டரிய [3] வினையை

---

1. எத்தைப்பிடித்து உய்வது?
2. பக்திமார்க்கம் தாழ்ந்ததா?
3. வெட்டித்தகர்க்க அரிதான.

நீவெட்டி யெறிந்த[4] பின்னர், சத்துவமாய்[5]
நிற்க,சித் தம்தெளிந்[6]
தெழவே, பகர்தற்கரி[7] யஜோதி[8] நகரா[9]
திருந்தறிய, வெட்ட
வெளியாய் வீசி டுமே,நின் னுருவழிந்[10]
தபர நிலே,
உவந்த ளித்திடு வாய்உரு வறியும்[11]
நின்பெயர் புகழை!

---

4. பக்தியின் பலனுக நீ வினையை துண்டித்த பிறகு.
5. சுத்தச் சத்துவமாய் மாறவே.
6. பரிசுத்தமாம் சித்தம் வாசனைகளின் கலக்கமின்றி, பரம் பொருளை நோக்கி நிற்கவே.
7. சொல்லிற்கடங்காத.
8. ஜோதியை ஆன்மாவை.
9. அசையா தமரும் சமாதியில் பிரத்தியக்ஷமாய்க் காண.
10. நிர்க்குண, நிராகார, அகண்டப்ரம்ம வஸ்துவாக நீ காணப் படுவாய்.
11. ஆகையினுலே, சாரூப பக்திக்காதாரமான நின் நாமத்தையும் நின் கீர்த்தியையும் அறியும் மனனத்தையும், உவந்து கொடுப்பாய் (ப்ரேம பக்தி கிட்டி, முற்ற, அதன் பிற்பயனுய் அத்துவித நிலையையும் எட்டமுடியும்:—என்பது பொருள்.)

18. நின் புகழ் மறவாது!

நின்னரும் திருப்புகழ் வெறும்[1] புகழாமோ?
கந்தாநின் கரைகாணுக்
கருணை வெள்ளம் ஒடுங்கி ஒளிவது
முளதோ? புகழ்பற்றிக்
கருணையில் தோய்ந்தபின் கலங்கு வதென்றுள
தோ? தவ மறியான்
துதிதெரி யானிவன் நின்புகழ் பெரிதெனப்
புகுந்தான், 'அபயம்'
என்றருளுக்[2] கோலமிட்டான், தஞ்சமென்ற சிலம்பின்[3]
துஞ்சொலி திருமுன்
திரிந்தோடி தடந்தனில்[4] தாங்கியோன்[5] மருகா
என்கெஞ்சொலி கேளாத
செவியா, நீமறந்தும் நின்புகழ் மறவா
தென்றே திரிந்தேன்கா!

---

1. பயனற்ற. 2. என்று நின் அருளுக்கு. 3. யானையின்.
4. தடாகத்தில். 5. காத்தவனுகிய திருமால்.

19. புகழ்ந்து நிறையா அரும்புகழ்.

கலைமகள் களைத்தா ளருண கிரியா
னிளைத்தான், நின்னரும்
புகழ்பொழிந்தே, ஆதிசேஷன் உரைக்க மறுத்தான்
'அறவே,' இயலாதென்
றிரைந்தான், இறைவா, இவரியற்றி நிறையாப்
புகழை, முருகா,
கற்காப் பாவிநான் கதறத்தகு மோ? பணியத்
தெரியும்,வரை யத்தெரியேன்,
உனையடை யத்தெரியும் பிரியத் தெரியேன்,
உருகத் தெரியும்,
உனைமறக்கத் தெரியாளனை இரக்கப்[1] படைத்தாய்.
பழிக்கத் தெரியா
துணை உவக்கத் தெரிந்தேன், பொறுப்பாய் பிழையை,
குமரா குகனே!

---

1. பிறரிடம் கற்ருேரிடம் இலக்கணப் பிச்சை கேட்க.

---

20. வினையற்ற ஜோதியருளே.

என்செயலால் ஆவது ஏதுமுளதோ ஏவேலா,
நின்மாயை மயக்கி,
மருந்திட் டயர்த்திடில், மனம்மா ளாது
கொழுந்துவிட் டெரியவே,
நான்மிதவா துஅமிழ்தலும் என்மீது குற்றமோ?
நின்முக்குணம் மூடிமூவுல
கைக்கவர்ந்திட, சத்குணம் சிறந்த சக்தியின்
சக்தனுய்,[1] சிரித்துச் சிதைத்து
நின்றிடும்சித்தனைக்[2] காணுதே, உன்னை சித்தத்தில்
கோவித்து நிந்தித்து நில்லாது,
பூஜித்துப் புலம்புவது முளதோ? பாமரன்
பேதையன் தாபத்தால் படுவதேன்?
கந்தா, பேசாமல் படுவதை விடுத்து அருள்வாய்,
மாசற்ற மனதினில்
மகிழ்வுற்று விளங்கிடும், வினையற்ற[3] ஜோதியருளே!

---

1. மகனுய். 2. சித்தனை முருகனை உன்னை.
3, வினையற்றது பரம்ஜோதி, வினையுற்ற ஜோதி ஜீவாத்மா.

21. கருணையின் காப்பு.

வேண்டா மிப்பழி கந்தா! வேண்டேன்
இவ்விதி வேலா! 'பாரில்
நின்புகழ் பற்றிய பாமரன் புதைந்தான்
பொன்னால், எரிந்தான் பெண்ணால்,
மண்ணில் புதைகுழி[1] இதே,எனக் குறிக்கும்கதி
யேஇயல, கந்தன்பார்த் துநின்றான்'
என்றபழி ஏனோ? பஞ்சம் வதைத்தாலும்,
பாரம் நினதெனு மவ்வை
வாக்கும் பொய்யாமோ? பொய்யா மொழியா
வதைக்கும் பஞ்சமும் எரிக்கும்
காமமும் வேறோமோ, நின்கருணைக் காப்பிற்கு,
விளையாட்டல் லகந்தா, விரைந்துவா
வேண்டாம் இப்பழி இறந்தேன் இறைவாகா!

---

1. பெண்ணால் கெட்டு கடைசியில் மண்ணில் புதைக்கப்பட்ட குழி இதோ.

---

22. வினைவலுத்து வேல்இளைத்ததா?

ஏவேலா எங்கு நின்வேல்? அண்டம்
அடங்கவிண் ணும்பதற
வீசும்வேல் எங்கே? எங்கே என்வினைக்கு
பயந்தோடி ஒளிந்ததா?
பதுமனைச் சிதைத்து மழுங்கி மறைந்ததா?
அலபுகுந்த சக்தியும்
பிரிந்து சென்றதா? எஃகுக் குச்சியாய்
ஏமாந்து நிற்பதா?
மலையில் சிலையாய் நடிக்கத் தருணமா
இது? நீபடைக் காவினையை
நான்பிடித் தேனோ? பகராய் பரமா!
வினைவலுத்ததா, வேல்இளைத்ததா?
ஏதழிந்தும் அழியாது நின்வேலென அறிவேன்;
வீசுவேலை வினையெரிக்க!

23 எனதேன்றேதுளதோ

மேனகை புணர்ந்தழித்த மன்னன் மாமுனி
முன்சினந்து விரைந்து
அடுத்துத் தொடுத்து விடுத்த பாணம்
விழுங்கவசிஷ் டர்ஊன்றிய
தண்டம், வீரம் தனதெனத்திரிந் துஇரைந்தால்
தகுமோ கந்தா,
சக்தியகன் றுநின்புகழ் சக்திபிரிந் தபின்வேலென
வெறும் குச்சிக்குப்
பேரு முளதோ? இவனொரு தண்டம்[1] வீணே
வீழ்த்தும் வீரம்புகழ்
பொழியும் சக்தி, பார்மதிக்கும் பேரொலி,
தண்டனிட்ட தண்டத்தின்
நின்பண் டமல்லால், பிரம்ம ரிஷியகன்ற
பிரம்மதண்டம் பெரிதாமோ,
மொழியேன் முருகா! எனதென்றே துளதோ,இனி?

---

1. வீணன்.

---

24. விதி வெல்லும் துதி

கந்தன்புகழ் பொழிந்துவெல்வீர் மானிடரே! விழியீரா?
மார்க்கண்டன் துதிக்கிணங்கி,
காலனைக் குத்திவீழ்த்த விலையா? விதியை
வென்றவலி துதியே!
அழியச் சித்தம் கொண்ட அருணகிரியான்
அண்ணுமலை யினடியில்
வீழ்ந்து சிதருது, புகழ்பொழியத் தாங்கியது
துதிவலுவிற் கல்லால்வே
றெதற்கு? இலங் கைக்கோமான் சினந்து கிரியை
ஆட்டக்கிரிஜா பதியும்பதி
யப்புதைக்க, விழிபிதுங்கும் தவமன்னன், சாமகானத்
துதிபிடித் தெழுந்தான்,
கந்தாநின் துதிபிடித்தேன், பார்ப்போ மினிவிதி
வந்துவீழ்த் துவதை!

25. இதய முடிச்சறுக.

வினையறு கக்கந்தா, விழித்தல ருள்வாய்,
மண்ணறுக, பெண்ணறுகப்
பொன்னறுகக் கொடும்பா சமறுகப், பரமா,
விடுத்தருள்வாய் வேலை,
மதியறுக மண்ணில் புதையாமல் துதித்தெழவே
விதிப்பாய் வேல்மயிலா,
ஏதறுந் தாலென்ன கந்தையா, இதயமுடிச்
சறுக்காது பிறப்பறுமோ,
பழுத்துக் கதிரறுந்த[1] சக்கையாம் வினையறுந்த
வீணனிவன்,[2] துன்பறுந்த
தூயஇன்ப நிலையருள்வாய், இதயகுகை இறைவா, இனி
வேண்டுவ தேதுமிலை!

---

1. வினைபழுத்து அனுபவித்து, பின் அனுபவிக்க ஏதுமில்லாத.
2. உலகப் பொருளில் பிணைந்து விளையாட உபயோகமற்றவன்.

3. வைராக்கியப் பதங்கள்

---

26. மாசற்றயோக சுகம்.

சுகம்சாந் தமேமட் டற்ற எல்லையாம்
வாழ்வினில் சக்திவேலா,
பற்றவகை[1] தெரியாது படுகிறார் பேதையர்காண்,
பற்றவே பொருளையும்
பணியைப் பற்றுடன்[2] இயற்றுவார், பதராமிதன்
பலன்,பத றுதாம்இவர்[3]
மனம்; பெற்றபின் சுற்றமும் சூழ்ந்து நிற்க,
அற்றபின்எட் டியும்பாரா
தொழிந்திடுவர், பெண்ணில் சுகமெனப் பேயாய்த்
திரிந்தபின் பொருளழிய,
இச்சுகம் பெருநோயும் தந்திடும், என்மக்கள்
என்மனைவி, என்றேங்கவே,
கண்கள் முன்காலனும் தனதென் றழித்திழுப்பான்
வினையின்றி[4] நினைவறும்[5]
மாசற்ற யோகமே பேச்சற்ற சாந்தசுகமாம்,
அறுவினை[6] அகற்றி,
மதியதை அழித்துப் பிறக்கும் மறுவினை[7]
ஒழித்த மருகோனே

---

1. சுகம் சாந்தத்தை பிடிக்கும் வழி.
2. உலகப் பொருளைப் பெற, ஆசையுடன் செயலியற்றுகிறார்.
3. ஆசைச் செயல் கருக்குழி ஆழ்த்துமென்று நடுங்கமாட்டார்.
4. பாசச் செயலின்றி. 5. எண்ணங்கள் எண்ணுமல் நிற்கும்.
6. காமக்ரோத முதலிய ஆறுவகைத் திக்குணம்.
7. ஆசை தூண்டும் பணி.

---

27. வினையழிக்கும் வேல் மயிலன்.

வறுமை விரட்ட, வல்நெஞ்சே, பெருமை
உருட்டுவரைப் பணியாதே
அருமை திரட்டு, வல்நெஞ்சே, முருகன்
அகவல்திரட்டு அறிவாயோ,

ஒருமை[1] விரட்டும், வல்நெஞ்சே, மருகன்[2]
அடையாதிருத் தலறியாயோ
சிறுமை[3] வரட்டும், வல்நெஞ்சே,உண்மைஉரு
உறவின்[4] வலுவாலே,
மடியக்கன[5] வுகாணுதே வல்நெஞ்சே, குமரன்
துதியைப்[6] பிடியாயோ
கடியக்கொடுப் பான்நன்நிலை யை,வல்நெஞ்சே, வினையை
அழிப்பான் வேல்மயிலன்.

---

1. மனம் குவிந்தநிலையை (ஒருமையை)
2. திருமால் மருகனை.
3. உலகத்தில் தாழ்ந்தநிலை.
4. கடவுள் சாரூப, சாமீபத்தின்.
5. இறப்புண்டென்று பயப்படாது.
6. துதி பிடித்தால், தான் உடலல்ல இறப்பற்ற ஆத்மா என்றுணர்த்தும்.

---

28. உனை விடாதிருத்தலே போதும்.

உடலுடைந் தாலென்ன உமையா,
உளமுவந்தால் போதும்;
மனமழிந் தாலென்ன மணியா,
சுகம்கிடைத் தால்போதும்,
இனம்இழிந் தாலென்ன இறைவா,
குணம்கழிந்[1] தால்போதும்;
பணமிழந் தாலென்ன ப்ரணவா,
பரம்மிகுந் தால்போதும்;
குலம்குறைந் தாலென்ன குமரா,
மலமகன்றால் போதும்;
மணம்மறந்[2] தாலென்ன பாலா,
புகழ்பகர்ந்[3] தால்போதும்;
வனம்வெறுத்[4] தாலென்ன வேலா,
வினைவிடுத் தால்போதும்;
இழித்தலும் பழித்தலும்எனக் கேதுமில்லை,
உனைவிடாதிருத் தலேபோதும்.

---

1. சத்துவ ரஜ தமோகுணங்கள். 2. கலியாணம். 3. துதி சொன்னால். 4. காட்டிற்குத் துறவியாக ஏகாமல் வீட்டிலிருந்தாலென்ன,

29. பக்திக்கே கிட்டும் பாலா

கல்லும் கரையக் கதறக், கந்தா,
காவியே துக்கு? குணம்
உருக உணர ஊரெதற்கு? பாரை
மறந்து பேரைப்
பொழியப், பட்டாடை எதற்கு? விளங்கா
வினையை வதைக்க
விருது ஏதுக்கு? ஆட்டமும் ஓட்டமும்
*ஓய்ந்தயர ருத்ராக்ஷம்
எதற்கு—எதற்கு—எதற்கிவை யெல்லாம்?
உன்னருளைப்பிடிப்
பதற்கு யாதிருந்தும் எட்டாப் பக்திக்கே
கிட்டும் பாலா!
எல்லாம் விட்டுன்னைத் தொட்டுக் கிடக்க
அருள்வாய் வேலா!

---

*தனித்து யோகம் இயற்ற.

---

30. முத்தி முதலில் மூழ்க.

அறுத்து,[1] அருவருத்து,[2] அலையொழித்து[3]
அன்பராம் அடியாரை
அடிபணிந்து, வெறுத்து,[4] வினைவித்தை[5]
வேதத்தழ[6] லில்வேக
வைத்து, முளைக்கரிதா யழித்து,மோன[7]
முத்திமுதலில் மூழ்கி
மீளாதிருத்[8] தலருள்வாய்! மறைவொழிக்கும்[9]
முருகா வருவாய்!

---

1. பாசத்தை அறுத்து.
2. போகத்தில் அருவருத்து.
3. எண்ணங்கள் ஆகிய அலையை யொழித்து.
4. உலகை வெறுத்து.
5. பிறப்புக்காரண வினை விதையை.
6. ஞான நெருப்பில்.
7. பிறப்பிற்கிடமாகாது அழித்து.
8. பரத்தில் கலத்தல்.
9. அஞ்ஞானத் திரையை விலக்கும்.

31. அருளே வடிவாய் வருவாய்!

வெறுப்பைப் புளிப்பை மறுப்பை
    யுலகில் கசப்பை
யளிப்பாய் கந்தா! கடம்பன்
    களிக்கும் குமரா!
பொறுப்பையறுத் துவிடுவித் தருள்வாய்
    மணியா? பிரணவப்
பொருளாய்ப் புவியில் உணர்ந்தே,
    இகமும் பிடியா
திருக்க, இறைவா! ஜெகமும்
    வேண்டேன் உறவே;
அறமேயறி[1] வாயறிவே[2] யறமாய்,
    அருளே வடிவாய்,
பிறவா வழியாய், விரைவாய் வருவாய்,
    புனிதா மலையா.

---

1. அறம்புரிதலே அறிவடைதலாக.
2. அறிவடைவதாலே அறம்புரிதலென (பலன்பெற).

32. கரையற்ற காணுக் கருமம்

உடுத்தி[1] யுருட்டி[2] யவிழ்த்து,[3]
    உயர்வொழித்து,
விரட்டும் வீணிவரைப்[4] பற்றிப்[5]
    பிதற்றி[6]ப்பறி
கொடுத்துப்[7], பாரும்[8] பரமும்[9]
    பறந்தொழிய,
உழலும் ஊழ்வினையும் ஒழியாத்
    துயரும்உலர்த்தி[10]
ஒழிக்கக், கரையற்ற[11] காணுக்[12]
    கருமத்தில்[13]
கலந்தேனே, கருணைமொழி யாய்,குமரா
    குகனே!

---

1. உடுத்தி = கவருமுடையுடுத்தி, 2. யுருட்டி = விழியுருட்டி, 3. அவிழ்த்து = உடலை விளக்கி, 4. வீணிவரை = காமினியை, மாதரை, 5. பற்றி = அவர் பரமாகி, 6. பிதற்றி = புத்தியிழிவாய்ப் புகழ்ந்து, 7. பறிகொடுத்து = தனம் மனையிழந்து, 8. பாரும் = இகவாழ்க்கையும், 9. பரமும் = பக்தியும், 10. உலர்த்தியொழிக்க = வரட்சியால் க்ஷீணிப்பிக்க, 11. கரையற்ற = அளவு கடந்த, 12. காணு = புத்திக்கெட்டாத, 13. கருமத்தில் = வினையில்.

33. இனிச்சேய்வதும் ஏதுமுளதோ.

ஆண்டியே! அண்டினேன், ஆடினேன், பாடினேன்
வேண்டினேன், எனையாண்
டருள்வாய்! பார்புகழ் தோண்டியை வேண்டாது
விண்டெறிந்தேன்! மக்கள்
மனைமண்டியும் அருள்தாக விக்கலை யொழிக்காது[1]
நான்விட்டு நின்றேன்,
இல்லாளும் வென்றிழுத்து இகத்தினில் இருத்தாது,
எந்நாளும் அகன்றுநின்றேன்;
அண்டமே[2] தந்தாலும், அகந்தை யாலடையுமாம்
பிறப்பையும் வேண்டவில்லை;
கோவணம்[3] குச்சியும் குறைந்திருக் குமிவ்வாண்டி,
இனிச்செய்வதும் ஏதுமுளதோ?
சொல்லாண்டியே! ஆட்கொண்டு ஆளாதா லயத்திலயர்ந்
திடும்பழநியாண் டிமலையா?

---

1. ஒழிக்காது என்றறிந்து. 2. அகிலப்பொருளெல்லாம் கொடுத்தாலும். 3. தண்டபாணி கொண்ட கோவணம் குச்சிகூட இல்லாத, இந்த சாது.

---

34. சரவணபவ, சரவணபவ.

ராகம்—ராகமாலிகை. தாளம்—ரூபகம்

*அறு சுவை யறு, ஒரு சுவை பிடி,
(அது) துதி சுவை யறி, சர வண பவ
இக இசை யறு, மறு இசை பிடி,
(அது) துதி இசை யறி, சர வண பவ
பவ சுக மறு, பெரு சுகம் அடை
(அது) துதி சுக மறி, சர வண பவ
உட லழ கழி, உள வழ குறு,
(அது) துதி யழ குணர், சர வண பவ
பிற வினை யறு, மறு வினை விடு,
(அது) துதி யென அறி, சர வண பவ
பல வழி யொழி, ஒரு வழி நட,
(அது) துதி வழி யறி, சர வண பவ
சர வண பவ, சர வண பவ,
(அது) துதி பிடி யெழு, சர வண பவ

---

*தாளத்துடன் பாட (அது) என்ற அசையை விலக்கிக் கொள்ளவும்.

35. வேல்லும் வழி

வெறுத்து,[1] விழித்து,[2] வேள்வியில்[3]
வீழ்ந்து,[4] வள்ளல்
வெள்ளம் உள்ளப் பெருக்கில்
உருஜ[5] ழிக்க;
கல்லும் கரையக் கதற
வெல்லும்[6] வழியை
விளக்கியருள், வெள்ளியங் கிரியான்
குமரா! வருவாய்
ஒளியோ டுருவா யிறைவா
பரனே குகனே.

---

1. போகசுகத்தை வெறுத்து.
2. உண்மைப் பேரின்ப சுகத்திற்கு விழித்து.
3. தியாகத்தில், துறவில் ஈடுபட்டு.
4. கருணை.
5. நாமரூப ஜெகத்தை அகற்ற.
6. பவ வினையை வெல்லும்.

---

36. உளத்தில் ஒட்டாது.

விட்டதும் தொட்டதும் தெரியாது,[1]
வீணுலகைப்
பற்றுது[2] தொட்டுக் கட்டியவள்[3]
கூத்தைக்கணப்
பொழுதும் கருதாது, பெற்றதின்[4]
பிதற்றலைப்
பெரிதும் பாராது, உற்றதும்[5]
அற்றதும்[6]
உளத்தில் ஒட்டாது,[7] நிற்க[8] உவந்
தருள்வாய்,
கதாதரன் மருகா! குகனே!
குமரா!

---

1. உலகப்பொருள்களை ஆசை கொண்டு இவன் தொட்டிருப்பவனோ, விட்டிருப்பவனோ என்று பிறர் அறிய இயலாது. 2. தாமரை இலைநீர்த் துளிபோல் உலகின்மேல் வாழ்ந்து. 3. மனையாள். 4. குழந்தைகளின். 5. சேகரித்ததும், பெற்றதும். 6. இழந்ததும் தோற்றதும். 7. மனதில் மாறுதலை உண்டாக்காது. 8. ஜீவிக்க, வாழ.

37. சிறுசுகமடைந்து மாண்டேன்.

இகசுகத்திற் கழாது, இறைவா!
நின்திருவடி பெருசுகத்திற் கேங்கித்
தயங்க லருள்வாய்; உலகந்திரள்
சுகம்பொரு ளாமோ! அய்யா? நின்
உறவுகணசு கத்[1]திற்கி டுளதோ?
அழிசுகம்[2] அருளாமோ[3] அமரா!
அரும்பரசுகம் தந்திடு வாய்;தன
சுகமனே சுகசிறு சுக,மடைந்து
மாண்டேன் மருகா, வினையுற
வின்பிறப் பாலே,[4] படியேன்[5]
இனிஅருளே, படரா மிகசுகக்கே.[6]

---

1. ஒருகணம் குமரனுடன் குலாவுவதால் கிட்டும் சுகத்திற்கு.
2. ஐம்புலன்கள் சுகம் (தந்தால்).
3. நின் அருளுக்கு ஈடாகுமா.
4. ஊழ்வினையின் நெருக்கத்தால், காரணத்தால், பிறந்தபின்.
5. அடிமையாக மாட்டேன்.
6. சுகத்திற்கே.

---

38. கானல் தோற்றம் கலிசுகம்.

பொன்னும் பெரிதாம் திருவடிதாம்
புவியில், முருகன்;
வீணுய்வே றில்,விளங் காதழியீர்,
மண்ணும் பெண்ணும்
புதைக்கும்பா ழுகழில்.படுத்
தும்மனதைப் பொடித்துப்,பர
மும்தருவான் பெரியான்கந் தன்,கள்ளம்
கபடும்கலக் கம்கழித்து,
சிவனின் குருவாம், குகனைக்கடி
யப்பெறுவீர் குகையில்,[1]
காணல்எளி தாம்முருகன் கானல்தோற்
றம்கலிசுகம், துதிசுகம்பெரி
தேபற்ற, உளம்உருகிக் கதறக்
குமரன்வரு வான்கணமே.

---

1. இதயகுகையில்.

39. மனமுருக மனமறுக.

மனமுருக மனமறுக மதிஉயர
　　பிணிவிலக வினையறுக
மயிலெழுக குகன்வருகத் துயரொழியக்
　　கண்டு, ஊனெழுகும்
மலம்கழியும் துளைபதிந்து நாறுடலும்
　　பதரெனவே வெறுத்துக்
காமமுறும் கோபம்வரும் லோபமுறும்
　　மோகமெழும் மதமாடும்
மனதொழித்துப், பிரிவொழிய,[1] ஒருமையுற[2]
　　ஒருபொழு தும்வினை
புரியாது[3] செயலழிய, சுகம்பெருகி[4]
　　நிற்றலருள் வாய்முருகா
வனமோடி, விழிபிதுங்கி அஞ்சலென்
　　றலறிய கஜபதியைக்,
காத்தோன் மருகா, உளமுருகிக்
　　கொடுப்பாய் உனதுடலை,
உனதுயி ரைப்பர நிலையை,
　　எனதறிவை[5] எரித்தே.

---

1. ஜீவப்ரம்மப்பிரிவு ஒழிய. 2. பிரம்மத்தில் ஐக்கிய மடைய. 3. கர்ம சந்நியாசம் ஏற்பட. 4. சச்சிதானந்த சுக அகண்டாகாரத்தில் 5. சிற்றறிவை.

4. *அறுவினை அறுக

40 காமம் அழிய

காமவெறிக், காட்டுத்தீ யாய்,கொழுந்
திட்டெரியுங் கால்,குமரா
கதிஏதுள தோ? முக்குணம்[1] படைத்த
முருகா, விசாரித்து[2]
விலக்க வலியுளதோ? ஓடிஒளிந்
தொழிக்கத்தகுமோ? வாதித்து[3]
வெல்லஉளதோ? உற்று-உணர்ந்திடில்
மாயைவிடுத் தமருகா,
நீ நின்மா யைஅழித்து நீக்கிக்கருணை
வெள்ளப்பெருக் காலணைத்
தலல்லால், என்செயலே துமுளதோ?
மறுத்தாலழி வேனித்திக்கு,
விதியாயிக் கதியைப்பது மனையுமாட்கொண்
டஅருளே,அசு ரனல்லன்யான்,
அழிப்பாயிப் பாவித்தி யைபன்னிரு
கையாபழ நிமாமலையா.

*காமக்குரோதாதி
1. சத்துவ ரஜ தமோகுணங்கள்—சிருஷ்டிகாரணத்தை.
2. 'நான் மனமல்ல, ஆத்மா' என்று.
3. 'இது கெடுதல், நலன் கொடாது' என்று.

41. வேண்டேன் இச்சினம்.

அனலாமழ[1] கைச்சிறைபிடித் தனலாலழிந்
தஇலங்கை மாமன்னன்,
முன் அரும்தவ மகந்தைதூண் டஅடங்காச்
சினத்தால்பர மன்கிரியைப்
பிடித்தாட்டிப் புதைந்தான்கந் தாஅவன்மீண்
டதுதிவலிவு[2] மன்றோ?,
வேலாகா லம்கரையக் கடும்தவம்புரிந்
தராஜரிஷி[3] வசிஷ்டனிடம்,

1. தெய்வத்தணலாகிய சீதாபிராட்டியை.
2. சாமகானத்துதி.
3. விஸ்வாமித்திரன்.

வாதம்தொடுத் துச்சினந்து, சூர்யகுலத்
திலகஞ்[1] சீர்குலேத்து,
தோற்றுத் தவமழிந்து, மயங்கித் தவித்
தார்போல்தாழ்ந் தோர், சினம்
கொண்டுசிதைந் தால்நின் கருணையில்
கலக்கக் கதியுளதோ?
குமரா, வேண்டேனிச் சினம்கா!

4. அரிச்சந்திரனை.

---

42. தனப்பேய்

பகராப் பண்பென்று பணத்தைப்
பற்றிப்பார் மீதுபுசியா
துறங்கி, பணியும்பிடி யாது,கூட்டிக்
கழித்துக்குவித் துக்கலங்கி,
இராப்பகலாய்க் காத்துத்தொட் டுமுகந்து
மூச்செறிந்து, காலன்
கிட்ட,வீறிட் டுக்கதறக்,கால் துட்டும்கூட்
டிச்செல்லா துகாத்தவன்
கழியக்,கந் தா,மிகுந்தவன் மிதமின்றி
மதமாயழிக் கச்,சேர்த்தவன்
சிதைந்துசெல் லும்காட் சியைக்கண்டும்
பணப்பாசம் பிடித்தலேயேன்!
பரமா! பொடித்தழிப் பாய்,வழிக்
குதவாத்தனப் பேயை!

---

43. மோகமழிய

பாரைமயக் கும்மோகம், பஸ்மா
சுரனைஎரித் தமோகம்,
மனைமக்களென் றிழுக்கும் மோகம்,
பெயர்புக ழில்புதைக்கும்
மோகம்,கண் கட்டிவாய்திற வாதிழிக்கும்
மோகம், அசுரரை[1]
வென்ற மோகம், பெண்மோகம்,
பொன்மோகம், பதவிமோகம்

1. மகாவிஷ்ணு மோஹினியாக அமிர்தத்தைப் பங்கிடுங்கால்.

மதியழிக்கும் மாருட்டமோ கத்தில்உரு
கேன்மருகா? மோகத்தா
லழியாருள ரோ? அதை இழி யாருளரோ,
நின்புகழ் அரும்துதியில்
மோகித்து, மீளாதிருத் தி, மீட்டருள்[2]
வாய்மயிலா மலையா.

---

2. பிறப்பிறப்பிலிருந்து மீட்டருள்வாய்.

---

44. மதமற்ற மதி.

மதம்கொண்ட மதியீனரை மதியாது
திரியவிதிப் பாய்மயிலா,
மதம்மிகுந்த மத்தகஜமும் இவர்க்கிடா
கா, பெற்ற மதம்உற்ற
மதம், பருத் தமதம், உண்டமதம்
கண்டமதம், பேர்மதம்,
பாரில்புகழ் மதம், எம் மதமும்உன்
சம்மதமோ? சக்திவேலா,
சலித்துச்சிதைக் கும்சிந்தைக் கடங்கே
னென்ற அழியாமதம்
கொண்டேவிழிக் கும்மதமல் லால், வேறெம்
மதமும்வேண் டேன்கந்தா.

---

45. பொறுமைத்தீ.

பிறர்வாழப் பாரார், தண் டனிட்டார்
தலையில்தீ இடுவர், தா
மிழியப்பிற ருயரச்சகி யார், பாரில்
பொறுமை வஞ்சனைபூண்
டபெருமூச்செறி யும், மத்சர மானிடராம்
ஏன்படைத்தாய் இவரை?
இவர் இருக்கும் இடமெல்லாம் பாதாளத்
தீயாய்ப் புகைந்திடுமாம்
மதன ழிந்தநீத்[1] தணிந்தும், இவ ரனல்
இடைவிடாக் கனலாய்க்
கருக்குமாம், கலக்குமாம் உலகை;
அழிவாரிவர் அறிவேன்
ஆறுமுகா, விழியா திவர்முகம்
நின்முகம் பார்த்தகண்.

---

1. சிவனின் முக்கண் தீ.

5. ஞானப் பெருக்கு.

---

46. வேண்டுவது பரமா புவியா?

மட்டற்ற வெட்ட வெளியாய்ப், பற்றற்ற
சுட்ட நிலையாய்,
எட்டற் கிட்டா ஏகமாய், அளவற்ற
அகண்டா காரமாய்,
இணையற்ற வேக சுகமாய், வேரற்றே
அழிந்த மனதாய்,
வேண்ட, விளக்கும் வேலா! நிகரற்ற
நிராகார, சின்மயா
னந்த சித்துருவைக் கேளாது அமர
நிலையும் விரும்புவரோ?
வேள்விமறந் துமண்ணில், பெண்ணும் பொன்னும்
பேரும்பத மும்பிறவியும்
பெறப்புகழும் பேதை மையினை, என்சொல்லுவேன்,
வடிவழகா! இவர்நின்திரு
வடிகாணத் திடமற்ற உளத்தவ ரேகாண்!
வேண்டேன் இத்தகைய
மடநெஞ் சை,மயி லா! அறு வகைத்தீ
யணைக்கும் ஆறுமுகா!

---

47. எனை அழித்தான்.

இறுக்கிமூட இருப்பதில்லை, விழித்தெழுந்தால்
விளங்குவதில் லை,அகண்ட
அறிவில்அறிந் ததில்லை,பின் எங்குளதோ
சம்சாரம், யார்சுமையோ
இப்பாரம்? தோளிலில்லை, தோவிலில்லை,
தோன்றுவதில்லை, மனதிலில்லை,
மட்டவெளியில் எட்டுவதில்லை, மற்றெங்கே
எங்கே? எங்குமில்லை;
கனவோ,கன வின்கலக்கமோ, சத்தாய்ச்
சிவமாய்நிற் கச்,சவமாய்க்

கண்டுமருண் டேனோ?சிவ னேநீநா
    னென்றிடையே, தடைகாணு
திருத்தியநின் மகனுமவ னே,எனை அழித்
    தான்மயில் வாகனனே!

---

48. ஓடெடுத்தோடியதா லென்ன?

ஓடெடுத்தோ டியதாலென் ன,உழலும்
    ஊழ்வினை யும்உமை
விடுமோ,மனத் தில்மாயை மடிந்தபின்,
    காடோவீ டோகடைத்
தெருவோ, கலக்கமேது மில்லாவிடத்
    துஏகமாய் நிற்க,
தலமேனோ? திடமுடையீர்! அருள்வான்அழ
    கேசனிறை வன்குமரன்!

---

49. ஒளியைப் பிடியா விந்தை

மொட்டை யடித்துமுக் காடிட்டுப்,
    பிச்சை யோடேந்தி,
முழங்கால் மடித்து, மரத்தடியே
    மருண்டேன் முருகா!
உளமுருகா துணையடை யாதுள
    மழியா துலகைத்
தொடர்ந்து துரத்துதையோ![1] வெளியில்[2]
    விடுத்து வீணாய்[3]
யர்ந்தும், ஒளியைப்பிடி யாதிருத்த
    லென்ன விந்தை!
இதற்கென் செய்வேன்? இளையா!சளை
    யாமனமும் அழியாத்
திடமும் அருள்வாய்; அருளேயுரு
    வாய்துறவே பெரிதாய்த்துலங்
குமணியா! படியாமன தைப்பொடியாய்
    உடைப்பாய் குகனே!

---

1. மனது சதியடிக்கின்றது. 2. புறத்துறவு பூண்டும். 3. செயலை விடுத்து நின்றும்.

50. அறிவில் அழித்ததிறம்

ஐயனென் றழைக்குமுன்
ஐயனு யானிற்க,[1]
பையவா வென்னுமுன்
பிரிவழிந்து யானயர,[2]
மெய்யைப்[3] பொய்யாக்கி
மெய்யொழித்த[4] மெய்யா,[5]
வையகத்தில் வீணுக்கி[6]
விழித்துயர்த்தி[7] ஐய,
ஆட்கொண்டா[8] யறிவில்[9]
அழித்த மருகோனே,
அடைக்கலம் அடைக்கலம்
அடைக்கலம் அமரா.

---

1. அழைத்த 'அஹம்' பாவம் மறைய.
2. சமாதியிலயர.
3. உடலழியுமென் றுணர்த்தி அதைப் பொய்யாக்கி.
4. உடல் மேலிருந்த பாசத்தை அழித்த.
5. உண்மைப் பொருளே.
6. உலகச் செயலின்பங்களுக்கு உதவாத வீணனுக்கி.
7. பரத்திற்கு விழிக்கச் செய்து, அதற்கு உயர்த்திய.
8. தன்னுடன் சேர்த்துக்கொண்டாய்.
9, பேரறிவில் பிணைத்த.

---

51. ஒளிமேல் விழியாதிழிதலொழி

பிணத்தைப்[1] பிடித்துப் பிரியாப்பண்
பென்று பிணைந்து
பருகி,பெரிதா யுளத்தில் விளங்கும்
ஒளிமேல் விழியா
திழிந்து, வீணில்வீவா தவீணை[2]
விரட்டா[3] தறிவில்

---

1. உயிர்ப் பிணமாய் அழியும், சிறுசுகமளிக்கும் பெண்டு மக்களுடன் கூடிச் சுகித்து.

2. வீணனவற்றை.

3. அறியாமையை, வெறும் ஏட்டுத்திறத்தைப் புறக்கணியாது, புத்தியில் கரட்டு வாதங்களைப் புரட்டி, வார்த்தைகள் தொடுத்து.

உருட்டித்தொடுத் தே,யடுத்துத் தகர்க்கும்
துயரில்[4] துலங்[5] காதடங்கி,
திடமா யிருத்தும்[6] தட மேயில்லா[7]
திடமேவிளங்[8] காபடமே[9]
துலங்காபர மேல்படியா[10] துழலும்பழி
யையொழிப்பாய் குகனே!

---

4. ஒன்றின்பின் ஒன்ருய், இன்பத்தைத் தகர்க்கும் பிறப்பிறப்புத் துயரில்.
5. காரணம் அறியாது ஈடுபட்டு.
6. வழுவாது ஆனந்தத்தில் நிலைக்கச் செய்யும்
7. குறி, அடையாளம் ஏதுமில்லாத.
8. இடம் இதுதான் என்று குறிப்பற்ற எங்கும் நிறைந்த.
9. ரூபமற்ற நிராகார.
10. பரத்தில் ஈடுபடாது.

---

52. என்றடங்கு மிப்புலன்கள்

ஆடினேன், பாடினேன், அலறினேன்,
அடங்காத ஐம்புலன்கள்,
அட்டகாசமாய் துள்ளுதே,முருகா,மந்திரம்
தந்திரம் ஏதுமுளதோ?
சக்திவேலா உன்சக்திக் கழியாதுஎன்
மனம்,புலன்களில் பாய்ந்துஓடி
பொருள்களில் கலக்குதே, கரைகுதே,
என்றடங்கு மிப்புலன்கள்,
என்ருழியுமிவ் வாசை? வீணே வித்துவேகமாய்
அனைத்தையும்[1] ழிப்பதைஉயி
ரற்றசிலை யாய்க்காக்கா துநிற்றலருளோ,
பழனிமா மலையா.

---

1. அறம், இன்பம், வீடு.

---

53. கரையற்ற ஆழிகடக்க.

ஞானத்திற் காப்பலருன் னையாசிக்க,
ஞானபண்டிதா! பக்திவேண்டும் பலரும்,
உனைவிரைந்து பற்றக்,கர்மத் தைநாடி
சுத்தசித்தம் சித்திக்க,கந் தனுயுன்னைக்

கோர,சமா திகதியில் சத்தாய்அயர்
வோர்,சத் குருவாய்ச் சரணடைய,
ஏதும்விரும் பாஇப்பா விளதற்கென்
றுணர்வே னுன்னே, ஏதுமறியேன்,
ஏதுமறியா[1] ஏகாந்த மோனமே
போதும், வேலையா! பலவற்றை
பற்றுவதாய், பற்ருது, வாதம்விவா
தமுருட்டும் வீரரை நாடாது,
பகரொணு நிலையைநா டிநின்றேன்
அளவற்ற கருணையால் கரையற்ற[2]
ஆழியைக் கடக்க வருள்வாய்.

---

1. இரண்டறியா அத்வைத சகஜநிலையே.
2. பிறப்பாழி.

---

54. எழுவாய் எழுத்தே.

எழுவாய் எழுவாய் எழுத்தே!
பாசம்அறுப் பாய்பழுத்தே;[1]
ஆறுருருவாய் வந்தாய், ஆறு
முகத்தில் பிறந்தாய்,
சரவணப் பொய்கை யிலிருந்தாய்,
சரவணபவன் னுளமாய்,
ஓரோர் முகத்திற் கொன்ருய்,
ஆறுமுகத் திற்காருய்,
அழிக்கும் அனலாம் ஆறும்,
அவைஎறிக்கும் தியும்ஆருய்,
சரத்தை அழிக்கும் சத்தே,
அக்ஷரமாய் விளங்கும்
ஆறே,ஒளி வாய்நுழைந்தான் கந்தன்,அவ
னுடனேபுகுந் தாய்பெயரே,
மறைவாய்த் தனியாயுருகப் பெறுவீர்,
சரவணபவ சரவணபவ.

---

1. நாமத்தின் ஜெபம்முத்தி.

55. பகராவொளியாம்

அறிவாம், அரியதில் சிறிதாம்,[1]
பெரியதில்[2] பெரிதாம், ஆறிருள்[3]
அழிவாம், குணங்களும் இழிவாம்,[4]
வேதமே[5] வழியாம், பேரெதும்[6]
இலேயாம், பரமாம், சுகமாம்,
சிவமாம்; பிரமமாம், தவமிகைத்[7]
தெளிவாம், தொலேவாம், அருகாம்,
பகரா வொளியாம்,[8] பெருமாள்
மருகா விரைவில் அருள்வாய்.[9]

---

1. அணுவினுள் அணுவாகவும்.
2, மகத்திற்கும் பெரிதாயும்.
3. காமக்ரோத வாசனேகளற்றதாயும்.
4. முக்குணங்கள் இல்லாதும்.
5. வேதத்தில் கூறிய வழியால் பற்றத்தக்கதாயும்.
6. எந்தப் பெயராலும் குறிக்கப் படாததாய்.
7. தீவிர தவத்தால், சமாதியில். தெளிவாயுணரக் கூடியதும்.
8. சொல்லற் கெட்டா ஜோதியாயும்.
9. அந்தநிலேயை, ப்ரம்மத்தை மருகா அளிப்பாய்

---

56. ஏக உறவிருந்தால்?

புரமெரிந் தாலென்ன, மதனழிந்
தாலென்ன, ஆழிபொங்கி
அகிலமழிந் தாலென்ன, அண்டசரா
சரங்கள் பொடிந்துதிர்ந்
தாலென்ன, திரிமூர்த்தங்கள் அமூர்த்
தங்களானு லென்னகந்தா!
மானம்;மணம், உறவுகழிந் துவஞ்சக
நெஞ்சம்வெட் டவெளியாளு
லென்ன?நின் ரூபாரூப நினேவின்றி,
அகண்டாகா ரக்கருணே
யுறவுவெள்ளம் பருகிஆழ்ந்த, ஏதுஏதா
யிற்றென்று ஏங்காது,

ஷண்முகா! நீநானென் றிடையே[1]
தடைகா ணுதேக
உறவிருந் தால்,பழு தாமோ?[2]
பகராய் பரமா!

1. நீ நானென்று பிரிவு காணுது.

2. நஷ்டமாகுமா, எது அழிந்தாலும் இழந்தாலும் சிந்தையில்லே.

---

57. அருள் ஆழி இதில் அமிழ்ந்திடுவீர்!

கந்தன் மாபெரியான், மலேயான்,
மருகன்,கரு ணைவெள்ளப்
பெருக்காம்,இது முளேக்கரிதா யழித்திடு
மாம்வினேப் பயிரை;
வழிக்குதவா தனக்கொடி யைவாட்டிடு
மாம் அருள் தணலில்; கதி[1]
அழிக்கும்கா மக்காரிரு ளில்ஜோதித்
துறவாய் திறந்திடுமாம்
நல்வழியைப்; பெற்ருரிக் கருணைப்பெரு
வழியைப் பற்றிடுவர்.
பாடுபட்டும்[2] பரம்விழியார் பற்றுவதும்
அரிதாம், பேர்பெற்றும்[3]
உலகில்பற் ருதார்,பிற பற்றியதாற்[4]
பயனென்? ஆரவாரித்
தலேமோதும் அருள்ஆழி இதில்அமிழ்ந்
திடுவீர் பெரியவரே.

1. நற்கதி அழிக்கும்.

2. உலகில் கஷ்டப்பட்டும், இதைவெறுத்துப் பரத்தைப்பெற உணர்ச்சி கொள்ளாதவர்.

3. கீர்த்தி அடைந்தும், உண்மைப் பொருளேப் பற்ருவிடில்

4. மற்றவைகளேப் பிடித்தென்ன பயன்?

---

6. தலத்தாமரைகள்

58. கருணைக்குன்றம்.

திருக்குன்றம் திருப்பரங் குன்றம்,
வினைக்குன்றம் கரைக்கும் குன்றம்,
மனக்குன்றம் அழிக்கும் குன்றம்,
குறைக்குன்றம் விலக்கும் குன்றம்,
குணக்குன்றம்,[1] கந்தன் குன்றம்,
பணிக்குன் றம்[2] பெரும் குன்றம்,
பெருமாள்மரு கன்குன்றம் அவன்வாழ்
குன்றம்நினைத் துளமுரு கும்குன்றம்,
மலைக்குன்றம் மலையான்ஆ ளும்குன்றம்,
எக்குன்றமும றியாப்பாபக் குன்றம்[3]ஒழிப்பாய்
களித்திருக்கப் பெறுவேன்கரு ணைக்குன்றம்!

1. நற்குணங்கள் நிறைந்த குன்றம்.
2. திருப்பணிகளுக்கிடமான குன்றம்.
3. இப்புனிதக் குன்றங்களைத் தரிசித்துப் பலன் பெருமையால் பாபம் ஒரு குன்றம்போல் நிற்கின்றது, அதனை

59. பழநிவாழ் திருவழகன்.

தேனொழுகும் திருவடியான் திருமால்
மருகன், பாலொழுகும்
பரும்குன் றத்தான்திரு மாமலையன்,
திருநீறுதி ருந்திருமேனி
தண்டத்தான், தண்டபாணி, உளமுருகும்
பிறைவதனத்[1] தான் உமையாள்
தனயன்,பா மரரைக்காக் கும்பன்னிரு
கையன்,புர மெரித்தோன்கும
ரன்,பிரணவ வடிவுருவன், சிவகுருஞான
பண்டிதன், பஞ்சாமிர்தம்
தோய்ந்தபரந் தமார்புடை யோன்,பழநி
வாழ்திருஅழ கன்,பரத்தை
விரைந்தளிக்கும் பரஞ்சோதித் திருஅருளே!
போற்றி, போற்றி.

1. முழுமதிபோன்ற

60. திருத்தணிகை குறித்த அருள்

கார்த்திகையாம் கார்த்திகையா! காவடியாம்
    நின்புகழ்சேர் திருவடிக்கு,
மஞ்சளூறு சாகரமாம், மலையேறும்
    மானிடராம், கெஞ்சிக்கெஞ்சிக்
கூவிவரும் கந்தன்திருப் பெயரொலியாம்,
    ஆடியாம்ஆ டிப்பாடும்
பாமரராம், பக்தகோடிக ளாம்,கோடித்
    துக்கோரிக் கைகொடுப்பவ
ராம், பால்பொங் கும்,பாம்பழித்
    தபலவகைப் பொருள்செலுத்
தும்,எண்ணுக் கடங்காத் திருத்தணிகை
    குறித்தஅருள் வெள்ளப்
பெருக்காம், வேலாபா லாமயிலா
    எனக்குதித்துக் களிக்காதே,
தனித்திருக்கும்[1] சித்தம்சுக மாமோ?
    சுப்பிரமணி யாநீசொல்.

1. சோம்பலில் நிற்கும்.

---

61. தூளி வலிவு
(திருப்பழநி)

மன்முடி வென்றிடக் கந்தா என்னிடம்
    வீரமிலையா? நின்பாத தூளி
இலையா, தூளியின்தூ நிலமறந் தனையோ?
    அன்றக லிகையை ஆளாக்கி
அதுவிலக் கவிலையா? பார்த்தனின் சாரதியும்
    தூளியைப் பூஜிக்க விலையா?
விறிட் டெழுந்திடில் வினைபட் டெரிந்திடும்
    வீணரையும் வாழ்த்திடும் தூளி
வலிவே! நின்புகழ் குறைவுற்றகன் றிடும்மதியும்
    மதியா தவமதித் திருந்திடில்,
தூளிக்கப யமென்றடைந்து வெல்வேன்,ஆள்வை
    யாஅழிப்பை யாபழநி மாமலையா.

---

7. உனது அலது எனதோ?

---

62. இலக்கணம் இயலாது, என் இறைவா

கம்பனும் அமைப்பிற் கிசைந்தான்[1]
அம்பிகாபதி யும்அழகிற் கிசைந்தான்[2]
ஔவையும் நீதிக் கிசைந்தாள்[3]
ஒட்டக்கூத் தனும்ரெட்டித் துநின்றான்,
எதற்கிசைந் தேன்யான்[4] முருகாநீ
உவந்தளிக் கும்மொழிக் கல்லால்
மோனையெ துகைஅறிவே னோ,மோன
முத்திமுதலுக் காமுக்கும் இம்மூடன்
இலக்கண இடுக் கணுடன் சுழலஎங்குச்
செல்வேன், மங்கிமறை யும்மனதை
அழிப்பதல் லால்,பின்னுமி துகொழிந்திட்
டெரியக்கோ ருவெனோ, நின்மதியை
என்சொல்வேன், கந்தா! கச டறக்கற்றார்
விட்டுப்பே தைநின்னடி யில்படிந்துறங்
கும்பாமர னைப்பிடித்தா யேநின்துதிக்கு,
ஏட்டுச்சுமை தாங்கிஇர வேன்இறைவா,
பேரறிவாய் விளங்கும்பழ நிமாமலையா!

---

1. இலக்கண அமைப்பை மீறவில்லை.
2. சிங்கார ரசமாய்ப் பாடினான்.
3. தர்ம சாஸ்திரம் புகட்டி வரைந்தாள்.
4. எப்பெருமை விளங்கத் துதிகள் வரைகிறேன்.

---

63. கரைக்கும் கருணை

மெழுகாயிள கும்இதயம் மதியா
தொழுக, சமாதி
கதியும்சிறி தாயுருக, ஈசன்சதி
யாலுலகில் உழலும்
மாந்தர் மருவஅறியா துளமும்
உருகப் பெரிதாய்ப்

பரசாதனை யும்பயிலும் பொழுதும்
இழிவா யறிவில்
உணர, அறியாதலை யும்அனல்
மேலல றும்பலரும்
கரைசேர் வரையும், பரம்பால்
செல்லா மனதை,
யெனக்கேன் படைத்தாய்! பெரியா?
இதுஉனதா எனதா?[1]

1. பலர் கஷ்டத்திற்கிரங்குவது உனதியல்பா எனதா?

---

64. பித்தன் துதியே

சக்தி ஏதுளதோ, இத்துதியில் சக்திவேலா!
வெல்சக்தி சொல்சக்தி
யில்லையென் பருக்கென் சொல்வேன்? ஐயனே!
பக்தியே யுக்தியாய்ப்
பிடித்த வரையா தரிக்கும் பாலா!நின்
முக்திவேல், உற்பத்தியை[1]
சக்தி யால்சிதைத் தபின்வெற் றியாயுன்
நிழலில் வீழ்ந்து
றங்கிப் பித்தனாய் வாய்திறந் துபிதற்றி
யான்நிற்கவே, கற்றபேர்
பெற்றபேர், பேரறி வைப்பற்று து,புளித்துப்
புலம்பிடில், குற்றமாய்க்
குழம்ப வேண்டேன், பொய்கையில் பிரண
வனைப்பற் றற்ற
பாமரர் பாலனாய் எழுந்திடும் மாசற்ற
மாணிக்க வருளே.

1. பிறப்பை.

---

65. புகழாதிருந்தும் புகுந்தாய்

காலம் கரையக் கடுந்தவ
மியற்றிக் காணக் கிட்டாக்
கந்தா!புவி அனல்ஓலம் பதைக்கப்
பாவி பெயர்புகழா திருந்தும்,

புகுந்தாய் முருகா! கிட்டாக்
கருணை பற்றற் கெட்டாப்
பரனே! நீபக்தர் பதறிமட்டாய்
திட்டும் மதிக்கும் அருள்வோய்!
மயிலா! கெட்டேன் கொடுவினை
தொட்டுப் பட்டேன் புவியில்,
பாலா! விட் டேனுபார் உன்னை, இனி
இறக்கும் இன்பம் தொட்டேனே
சொல்,சொல் லற்கிட்டா ஜோதி
சுட்டுச் சிதைத்த
சுந்தரனை, விட்டுத் தட்டாது
அடுத்தே, ஆட்கொள்வாய் அமரா!

---

66. நின்துரும்பாய் நிற்க

ஞானதேசிகா! என்றும் நின்துரும்பாய்
நிற்க இயல்வாய், வேறேதும்
வேண்டேன், மக்கள் நின்னருளை
என்மகிமை யென்றேங் காது விளக்
கியருள்வாய், சித்த மகிழ்ந்த
சுத்தனென் றெய்து
சக்திகள் பலவென் றுரைத்து,
படுத்தும் பாட்டை அடிமையான்
சொல்வதென் கொலோ? இல்லாதிடத்
திருப்பதாய் எமாந்து இடைவிடா
துறுத்துதல் தகுமோ? சித்திகள்
விரும்பி எனைப்பற்றிடும் சத்திலா
பித்தரை, மொத்தியே விலக்கி
யருள்வாய், மோனத்திலாழ்த் திஞானத்தில்
வீழ்த்திடும் வீரமா மணியா!

---

67. பிளவு துலங்காப் பரம்

அழிவாயுரு[1] வேஅரனின் மகனே
எழுவாயறி வாய்!இதயக்
குகையில் இருப்பாய்சுக மாய்!நாமம்
ரூபம்நில யாநிலையில்,

---

1. மூர்த்தி ரூபக்கடவுள் அம்சம் மறைய அறிவாயுள்ளோனே!

உனேயேபிரியா வழியாய்ப் பரமாய்ப்
பிணையச்,சிவ னும்சதியும்
கண்ணன்,கஜன் கலையும் கரையாதறிந்[2]
துகழிய,[3] விழிக்க,[4]
வினையுமறுக்க, குருவை குகனேயருள,
பிரணவமீறிச்[5] சத்துச்சித்
துச்சிவமா யிருக்கப்பிறந் தேனறிவே,
பிரிவாலுரு[6] கும்பதமும்
வேண்டேன் பிளவே துலங்கா[7]
பரமருள்வாய் பரனே.

---

2. மூர்த்தியாக சாக்ஷாத்காரம் பெற்று.
3. பின் ஜென்மங்கள் கழிய.
4. அத்வைத வாசனை பெற.
5. ப்ரணவத்தைக் கடந்த ப்ரம்ம நிலைக்கெட்டி.
6. ப்ரேம பக்தியும் வேண்டேன்.
7. ஞானத்தை.

அகண்ட ஆத்மாவில் சலியாது நிலைத்திருத்தலே பரபக்தி. பிரிவற்று இதில் ''அஹம்'' அழிந்து அதாக நிற்பதே ஞானம். ப்ரேம பக்தி முற்ற அதன் ஒப்பற்ற உன்னத உயர்வான ஞானம் சித்திக்கும் அந்த ஞானத்தையே வேண்டுவ தித்துதி.

8. யோக நீதி

68. நினைவை அழித்து நிறுத்து.

குருவே குகனே குணமே[1] கடிய
ஒழிக ஒளியாக்
கவலை அழிக, முருகா முருகா,
முருகா பரமும்
அறியாப் பழியை பலரே அறிய
புதைக்க அருள்வாய்,
தருணம் தருவாய் தரைமேல் பிறவா
நிலையைக் கொடுப்பாய்,
நிலையாதிறங்கும் நினைவை யழித்து[2]
நிறுத்திக் காப்பாய்

---

1. முக்குணங்கள்.
2. சமாதியில்

69. காணாது காண் ஜகத்தீரே.

வாய் அபயம் கூவ
உளம்உல கைநாடப்
பாசம் பிடித்தெரிய
மலத்தால் மனம்மதி
அழிந்து மன்றாட
சரணம் எனக்கூவக்
கந்தன் கிருபைக்
கிரணம் காணாது
உடல்மறந் துவத்தே
அயர[1] அடைவீர்.

---

1. தியான சமாதி செய்ய.

70. தெளியாயோ மனமே.

அழியாயோ மனமே ஆழ்ந்து
பிடியாயோ குகனை,
படியாயோ மனமேமணிந் துபகராயோ
புகழை. நினையாயோ,
மனமேநிலைத் துஅடையா யோ அவனுரு
வம், தெளியா[1] யோமனமே
தெரிந்து பற்றாயோ ஆறெழுத்தை,
காணாயோ அவனைக்
கண்டு களியாயோ அவனழகில்,
கருணையா மவன்இதயம்
கரையாயோ அதில் எளிதில், நீ அழியப்[2]
பெறுவேனே பரசுகத்தை.

---

1. யோகத்தால்,எண்ணங்கள் தடுத்து மனம் ஒருமைப்படு.
2. ஆன்மதரிசனத்திற்கு, அழுக்கடைந்த மனமே சூடி. இது சாக, ஜோதி விளங்கும்.



கந்தன் புகழ்

இரண்டாம் பாகம்

CONNEMARA PUBLIC LI...
12 DEC 1956
MADRAS

அருட் பாடம் உயர[1]

என்னப்பன் என்னம்மை எம்பிரா னென்சைவச்

சின்னப்பன் தாள்பெறப் பற்று.

---

1. உயருங்கால்.

1. தோத்திரங்கள்

---

71. வினைகரைக்கும் தவப்பயனே!

அருளாழிக் கரைவீசும் ஆனந்தப் பெருங்காற்றே
பேரறிவில் வினைசுட்டு ஓரறிவில் ஊன்றுயர்வே,
பொருளழித்தே இருளொழிக்கும் பேரகண்ட ஒரொளியே
விளக்கவழி விளங்காவி னைகரைக்கும் தவப்பயனே
கருவழித்துக்[1] குருவளித்துக் கொடியகுழி மீட்டருளும்
கருணைக்குன் றேதுதிக்கத் தெவிட்டாத்தென் பளிதேனே
மருகாவோ முருகாவோ மாரனுதைத் தோன்குமரா,
சிவகுருவே சேவற்கொடி யாய்சரணம் அபயமளி.

---

1. கருக்குழியில் (கர்ப்பத்தில்) புகுத்தாது.

---

72. சதிஉமை சக்திக் குமரா!

அன்புச் சுனைஅளிக்கும் அபயா
இன்னற் குளிரகற்றும் குகனே
இன்பக்[1] களிகொடுக்கும் பரமே
துன்பச் சுமைகுறைக்கும் தூயா
தேவர்க் குவெற்றிதந்த அருளே
அடிதொட் டுத்[2]துதிக்கும் மணியா
குன்றும்[3] குறைதனையொ ழிக்கும்
கோலா கலனே, கணபதி
தந்தைசதிஉமையின் குமரா
என்றும்[4] பிரியாதே எங்கும்
நிற்கும் பேரறிவில் பிணைத்தே
அருண கிரியருளா எனைக்கா.

---

1. பேரின்ப.
2. தொட்டுத் துதிக்கப்படும் திருவடி கொண்ட மணியா.
3. குறைகள் திரண்ட குன்றம்.
4. எங்கும் நிற்கும் பேரறிவில் என்றும் பிரியாது பிணைத்து.

73. தோந்திக்கணனிளையனும்

தொந்திக்கண னிளையனும், தந்தைக் கருளிய
சிவகுரு குகனும், தக்கன் குண்டம்
குதித்த தயாபரி[1] தனயனும்,

குந்திக் குமரன்[2] கூவப் பரமளித்த[3]
கண்ணன் மருகனும், தாரகன் கொன்றேன்
இன்ன லழிகுமரன், வேலன்

சிந்தை களிக்கும் சிற்றுரு வனும்,சே
வல்கொடி பறக்கும் தேவர் சேனைக்
கதிபதி யனும்,பொறியா லிணைந்த

கந்தனும் விந்தையாய்க் காப்பனும், வினைபொடிப்
பனும்,திரு வடிகொடுப் பனும்மறத் தலிவனை
மதியீ னமாமே, மக்களே!

---

1. தக்ஷன் அவமதிக்க அவன் குண்டத்தில் குதித்த சக்தியின்.
2. காண்டீவன்.
3. பாரத யுத்தத்தில் கலங்கிக் கூவ, பகவத்கீதோபதேச விச்வ ரூப தரிசனத்தால் பரமளித்த.

---

74. கந்தன் முருகன்

கந்தன், முருகன், காதல் கடிமணம் புரிந்த
வள்ளிக் கிழவன், புவியில் பையப்புகும் மெய்யன்,
எந்தன் ஐயன், குமரன், எளியோர் வேண்டித்
துதிக்கவிரும் பிக்கொடுக்கும் வள்ளல் பெருமாள் மருகன்,
உந்தன் குறையொழிப்பான் வந்தன்பன் ஊதித்தொலைப்பான்
உளமறுக் கும்பா சப்பதரை, கேளா திருந்தும்
தந்தான் கடத்தற் கரியபிறவித் திரைகடக் கத்திரு
வடி,பரத் தைக்கே ளுங்கள் இதயத் துதிபிடித்து.

---

75. தூயன், மாயன் நேயன்

தூயன், மாயன், நேயன், தேன்திணை
தின்றவாயன், ஆயர்குலத் துதித்து ராஜசூய
சபையில் சிசுபாலன் வதைத்தோன் மருகன்,

பேயர் விரும்பாச் சிற்றின்பர் வெறுக்கும்[1]
புவியில் பேய்க்கரும்பன், காயகல்பம் தேடும்
குருடர் கிட்டாக் குன்றன், ஜால

மாய அரக்கன் சூரன் பொடித்த
மயிலன், ஆயலோட்டும் கோதை மீட்ட
காதல் கிழவன், எரிகண்ணன் ஹரனின்

சேயன், ஆறெழுத்தி லயர்த்தி சேவை
தந்த முருகன், ஒன்றிரண் டல்லாது,
ஆறறிவை அடக்கும் சித்தன், அடைவீர்.

---

1. புவியில் சிற்றின்பத்தைப் பற்றியவர் வெறுக்கும்.

---

76. ஒளியே சரணம்

அருளார்[1] மிகையே சரணம், பொருளார்
அகலே[2] சரணம், சடையான் சிவனார்
மகனே சரணம்,

இருளின்[3] அழிவே சரணம், தனதை
ஈன்றோர்க் கருளும் பொருளே சரணம்,
ஒளியே சரணம்,

கருடன் ஜோதிச் சுமையின் மருகா
கந்தா, அழியும் உடலின் பாசக்
கழிவே சரணம்,

மருளார்[4] இதயத் துறவின் உருவே
மயிலா சரணம், வினையும் எரியக்
காப்பாய் சரணம்.

---

1. அருளுள்ளோரிடத்து (மிகை) அதிகமாக இருப்பது இவனே, இகம் பற்றியவை குறைவாம்.

2. பொருளுள்ளோர் விரும்பாது அகற்றி, ஒதுக்குவது இவனே.

3. அவித்தை இருளை அழிப்பவனே.

4. இக இன்பப்பொருள்களைக் கண்டு (மருளாத) கலங்காதவர்.

77. புறம்காண உருக்கோள்

விணைபொடிக்கும் மாசற்ற விந்தைப் பொருளே
தனையழித்துத்[1] தித்திக் கமிழும் கற்கண்டே
மணியா, உமைமறக்க[2] பொய்கைச்

சுனைபிறந்த அருட்ஜோதிச் சுடரே, காலனு
தைத்துக் காத்தசூலன் குகனே, வேலை
விடுத்துச் சூரன் சிதைத்தே

எனையாட் கொண்ட எம்பெரு மானே
பத்துத்தரம் பிறந்து தர்மம் தலைகாத்த
பெருமாள் மருகனே, பேரறிவே,

தினைதின்னக் கிழம்பூண்ட, தீரர்[3] சேனைத்
தலைவா, மதியற்ற எனைவிடுக்க, மானிட
உருக்கொண்டு, புறம்காண[4] வருவாய்.

---

1. தன்னை, 'தான்' என்ற அகந்தையை
2. சிவனின் ஸ்கலிதம் அறியாது புறக்கணிக்க, ஆகாய கங்கை தாங்கிப் பொய்கையில் பிறந்த. 3. தேவர்.
4. யோகத்தில் உனை உளத்தில் காணமுடியாதவர் புறக் கண்களால் கண்டு உய்ய, தரிசனம் கொடுக்க.

---

78. கார்த்திகேயன்

தொந்திக் கணனிளை யனும்,சக் திச்சிவன் தனயனும்
பார்க்கப் பள்ளிச் சிறுவனும், வள்ளித் தினைவன

சுந்தரக் கிழவனும், பொய்கைப் பிரணவனும், சுத்தர்
சித்த அன்பனும், அமரனும், அமரர்க் கிறைவனும்,

கந்தனும், பக்தர் உள்ளக் கள்வனும், கார்மேக
வண்ணனும், சேவல் கொடிகொண்ட சேனைத் தலைவனும்,

வந்தருள் மலையனும், மயிலனும், வானவர் வேலனும்,
அருகனும்,[1] மருகனும், ஆறிருள்[2] அழிப்பனும், கார்த்திகேயன்.

---

1. பூஜைக்கு, பக்திக்கு உகந்தவனும்.
2. காமக்ரோத லோபமாதி அறுவகை இருளை.

2. பக்திப் பிதற்றல்.

---

79. பிறவா வரத்தைப் பெற்றேன்

கரும்பு தின்னக் கூலிகொடுப் பதுளதோ,
கந்தா, நின்திரு வடித்தே னைப்பருகார்—பதராம்,

விரும்பிப் பிடித்தொழு கார்நின் வேலை,
விழும்பாசம் பிடித்துப் படுவார் புவியில்—சதமே,

அரும்புதை யல்நின் னருளாம், உன்புகழ்
அமுதைப் புசியார், வினைப்பசியால் எரிவார்—சுருண்டு,

இருமு ருகா,நீ இதயம் ஊன்ற,
இருளாம் இகத்தில்படா து,பிறவா வரத்தைப்—பெற்றேன்.

---

80. திருவடி எட்டாதோ சொல்

உளமுருகிக் கரைந்தழுக உளமுருகா திருப்ப
தழகோ, மதனெரித்து மலையான் மகளணைந்து
புரமெரியக் கண்டு, முடிவிரித் தாடிய
முக்கண்ணன் குமரா.

வளமழிந்த செம்புல்தரை வலிவுற் றிறுகும்,
வினைபட் டழியும் ஏழைக் கிரங்கா
கல்நெஞ்சோ நின்பூஇத யம்உமையாள் தனையா
பட்டழிந்தோர் பதறொலி,

தளமுடைந்தும், பொடித்துத் தவிடாய் கதிரவ
னொளிபட்டு, இமயப் பனிமலை கரையப்
புலித்தோ லுடையான் முடிநங்கை, வெள்ளப்
பெருக்காய்க் கரைபுரண்டு,

வளமிகுத்துப் பவவினை வெல்லக் கண்டும்,
அருளாய்க் கரையாது, யோக மெட்டார்க்
கில்லையென் றுல்இது கிட்டார், துதிபற்றத்
திருவடிஎட் டாதோசொல்.

81. உன்னை விட்டகலா ஒளியாய்க் கா

என்னிடத் தேதுமில்லை,[1] என்னைவிட் டகலாது
என்னிடத் தேதோ உளதாய்த், தொடர்ந்திடும்
பேதை பக்தர்,[2]
உன்னிடத்தே உளதென்று அறிந்து, பின்பற்றப்
பன்னிரு கையா, அறிஞர்க்[3] கள்ளிக்
கொடுப்பது போல்அருளை,
தன்னிடத் தில்லை யென்றி[4] ரைந்தும்
தம்பீ, துதித்திடும் நல்லார்க் கும்,நற்செய
லூட்டி,நல னளித்துப்,
பொன்னிடத் தேவிளங் கும்பே ரொளியும்,
பொன்னை விட்டக[5] லாதே, எனைஉன்னை
விட்டகலா[6] ஒளியாய்க்கா.[7]

---

1. என்னிடம் சித்திகள் சக்திகள் ஏதுமில்லை. 2. பக்தருக்கும். 3. நீயே சக்தன் சித்தன் என்று தெரிந்த உன்னையே தொழும் அறிந்தவர்கட்கு, 4. என்னிடத்தில் மகிமை ஏதுமில்லை யென்று கெஞ்சிச்சொல்லியும், கேளாது, என்னை அண்டி விரும்பிப் புகழ்ந் திடும். 5, எவ்வாறு பொன்னும் அதன் ஒளியும், ஒன்றைவிட் டொன்று பிரித்தல், பிரிந்து நிலைத்தல் இயலாதோ.

6. அதே மாதிரி, நான்உன்னை விட்டுப் பிரிக்கமுடியா. 7. ஜோதி யாக, என்னை நிறுத்திக்கா.

---

82. ஒற்றைக்கால் தூக்கி எழுந்தாட

ஒற்றைக் கால்தூக்கி, ஓலமிட்டார் வினைபொடிக்க
தத்தோம் தகிர்தோ மென்றோங் கியதிருக்
கூத்திற் கிடிதவு லடிக்க,ஈ ரேழுலகம் எழுந்தாட

மெத்தை விரிப்பாய் மெட்டிற் கசையா
தமர, தும்புரு நாரதரட் டதிக்கர்
கூடிநிற்க, அடிஇணைத்தா டசிவகாமி வழிதெரியா களிமயக்க,

---

1. வழிதெரியாது, சிவனின் திருக் கூத்தை கண்ட ஆனந்தம் (களி) புத்தியை மயக்க.

வித்தை மறந்து விளக்கத் தெரியா[2]
வாணிவிழிக் க,காலனுதைத் துக்காத்த காலைத்
தூக்கிஆடிய பொன்னம் பலத்தான் பொறியில் பிறந்தகந்தா

சொத்திழந்து[3] நின்னருட் சொத்தில் விழித்திருக்கும்,
பித்தன்[4] களிக்கப், பிறைமுடி[5] யோன்போல்,
இதயச் சிற்றம் பலத்தே, கூத்தாடி நில்கந்தா.

---

2. வாணி, கூத்தின் அழகை விளக்குவதற்கு வித்தையும் மறந்து வழி தெரியாது பிரமிக்க
3. உலகச் சொத்தின் பாசம் இழந்து.
4. பக்தன். 5. சிவனைப்போல.

---

83. திரிபுரமெரித்தாட

திரிபுரமெ ரித்தாடத், திரிசூலன் திருநகைகொண் டாட,முடி
நங்கைகங்கை குலுங்கத் திரிசடை விரித்து ஆடப்,
பெரிதாம் அருட்புதையல் பறிகொடுத்தார் பதட்டம் அழித்தாடப்,
பதிதொட்டுச் சதிசிவகா மியாடப் புலித்தோ லணிந்த
எரிகண்விழியான்ஈசன் வாகனம், எழுந்தாடத்தொந்திபருத்
தகரிமு கத்தோன்தும் பிக்கைவீ சியாடக் கண்டும்,
நரிபரியாக் கியநாகா பரணன் நற்குமரா, என்னிதயச்
சிற்றம் பலத்தேஆ டாதிருத்த லழகோ, அமரா

---

84. காலா—-சொல்லாதோடிப்போ

வினைபொடிந் தழியுமுன்,[1]வீ றிட்ட லற[2] விரைந்தோடி
வந்தகாலா, காலகண்டன் காலா லுதைத்துக்—காத்துப்,
பனைபோலுன் னைவீழ்த்தி, பதறியபக் தன்மார்க்
கண்டன், மீட்ட மகிமை மறந்தகந்தை[3]—கொண்டாய்,
எனையாளும் வள்ளல், எனதய்யன் வேலன்
முக்கண்ணன் குமரன், முருகன், சிவகுரு—வாயுயர்ந்த,
சேனையமரர்க்[4] கதிபதியான், செத்தைபோ லரக்கரெரித்[5]
தவேல்வீசு முன்,சொல் லிடாதோடிப் போ,பிடி—யாதே.

---

1. அருளால் வினை பொடியாகி அழிவதற்குள்ளாக. 2. விறிட்டலறச் செய்யும் பயங்கரமான. 3. பக்தனையணுகி உயிரழிக்கக்கூடாதென்ற பாடத்தை, மற்றும்நின் பதவி அகந்தையால் மறந்தாய்.
4. அமரர் சேனைக்கதிபதியான்,
5. அரக்கரை, செத்தையை எளிதாய் சாம்பலாக்குவதுபோல் எரித்த வேலை.

85. சோதனையின்றிக்கா

உலகில் அலைந்தழிந்து உனதருள் பெறுவ
தல்லால், பிரிதோர் வழியும் பெரிதாய்க்
காணேன், சிற்றின்பச் செருக்கழியக் காத்திருக்கும்

உலகளந்தோன் மருகா, உயிர்பதறப் பட்டுச்,
சோகவன மலைந்து, தாபம் தணலாய்த்
தகிக்கப், போதுமிப் பாழுலக மெனவெறுத்து,

மலர்ந்திதயம்,[1] பேரின்ப மாளிகை இருந்தக்
கதருர், அறியார்,[2] தூய பாஞ்சாலி
துணியவிழ்தல் கண்டும், இருகை குவியார்[3]

புலம்பலுக்[4] கபயம் பெறு,ரென்ற கன்னெஞ்சன்[5]
மருகா, அருணகிரி அழியப் பார்த்து[6]
நின்ருய், பேரழகோ,[7] எனைச்சோதனை[8] யின்றிக்கா.

1. இதயத்தில் அருளாம் உருவிற்கு விழித்து.
2. கந்தனை அறியார்.
3. தன்முயற்சி முற்றிலும் துறந்து ஈசனை நம்பி தஞ்சமடையாதவர்.
4. வருந்தி அழைத்தாலும்.
5. கிருஷ்ணன், பெருமாள்.
6. ஞான உதயத்திற்கு முன்பு, அருணகிரி சிற்றின்பத்தில் ஈடுபட்டு அழிவதைப் பார்த்து, உடனே காக்காது சோதித்து.
7. கருணை மூர்த்தமான உனக்கு இது அழகாகுமா, அடுக்குமா.
8. சோதனை தாங்கி வெல்லச் சக்தி இல்லை, சோதிக்காது காப்பாய்.

86. இதயக் குன்றின்மேல் எழுவாய்

குன்றின்மேல் வாழும் குமரா, நின்கருணைக்
குன்றம் குன்ருதிருத் தலருள்வாய், தொந்திக்கரி
முகத்தோனிளை யா,இதயக்

குன்றின்மேல் எழுவாய், கும்பிட்டழிக் காவினை
பெருத்த உளக்குன்றம், பிடித்த நின்திருவடி[1]
பாரத்தால் பொடியக்,கற்

1. பக்தியால் பிடித்த நின்திருவடியின்.

குன்றின்மேல் அயர்ந்தால்நீ குகனே, காமக்கலி
சுகமழித்தால் தவிர்ப்பார் எவரோ, துதித்தருளால்
பரம்பிடியா துயர்ந்தபவக்

குன்றின்மேல் பதைத்துக் கூவக்கொடுத் தாயபயம்,
உன்வேலும் உடைத்துத் தகர்க்கப் பிழைத்தே,
பேரின்பக் கடலிலே.

---

87. அருளாழி மரக்கலமே

மறத்தற் கரிய மாசற்ற அருளாழி
மரக்கலமே, மருகா, மறத்தலறியேன், உனைமறந்தால்—
வினைக்கழிவேன்,

சிறந்த தித்திக்கும் செங்கரும்பே, உருவெல்லாம்
உளமருட்டும் ஒப்பற்ற இனிப்பே வாழ்வென்ற—
கனவைத்

துறவென்ற விழிப்பால் தொலைக்கும் தூயபொருளே,
சித்தர் சித்திக்குள் புகுந்த சத்தே,—
துதிபிடித்தும்

அறம்மிகுத்தும் அழிவற்ற அறிவாய் ஆனந்தப்
பெருக்காய் ஆழ்த்தாது நின்றால், என்செய்வேன்—
எவர்க்குரைப்பேன்.

---

88. வேலெதற்கு மயிலெதற்கு

வினைக்கழிவதா ஏவேலா வினைக்கா அழிவது?
இதற்கா துதிபிடித் தேன்குரு அடுத்தேன்,—
பவமிழித்தேன்?

வினையால் மீளாது வீழ்ந்திருக்க நீபார்த்து
நின்றால், வேலெதற்கு மயிலெதற்குச் சேவல்—
கொடிஎதற்கு?

பனைபோ லுயர்ந்தகற் பாரைமேல் வாழ்வெதற்கு,
எனதன்னை வள்ளியின் சேர்க்கை எதற்கு?—
குகனசுரர்

அனைவர் பொடித் தானென்ற ஆண்மை எதற்கு?
சவிகல்பம் நிருவிகல்ப மாழ்ந்தாது டம்பமேனோ—
அருள்வாய்!

---

89. உளமிருப்பான் பார்

அங்கிருப்பான், எங்கிருப்பான், ஆறிக்கரை[1] யில்வீற்
றிருப்பான், வினைக்குறை பொடிக்கும் குன்றில்—
வேல்தரித்துத்[2]

தங்கிருப்பான், மயிலிருப்பான்,[3] தேவர் வணங்கும்
சேவல்கொடி பிடித்திருப்பான் தேனருந் தித்தினைப்—
புனத்தில்

மங்கியிருப்[4] பான்வள்ளி மருளக் கிழவன்
வேஷம்கொண் டிருப்பான் எங்கோடித் திரிந்தும்கா—
ணுக்கந்தன்,

இங்கிருப்பான்,[5] குழலூதி இசைமயக்கும்[6] மாயன்
மருகன்,[7] இடம்விட்டுத் தேடாதே உளமிருப்—
பான்பார்.

1. திருச்செந்தூரில். 2. பழனியில். 3. மயில் வாகனமேறிக் காண்பான். 4. ஒளிந்திருப்பான். 5. மானிட சரீரத்தினுள். 6. இசையால் மயக்கும். 7. மருகனை

---

90. ஓரெழுத்தா அபயம்

பத்தும் பெற்று, பாரத்தால் பதறி,
காக்கும் வழிக்கலைந்து குருபெற்றும், மூச்சழிந்து
குகைநிற்[1] கும்காலம்,

1. நிராகார சமாதியில் நிற்கும்.

Q26:417x

சுத்தும் சிந்தையால் சுகமும் கிட்டாது,
பரம்எட்டும் வழியே[2] குறுக்கிட்ட கூர்வி
ஊக்கென் செய்வேன்,

சத்தும்சித் தும்சேர்ந்த சச்சிதானந் தஷண்முகா,
பாரம் விட்டுப் பணிந்து காவிதொட்டுத்
துறந்த தூயர்போல்,

சொத்தும் கழித்துச் சோறும் மறந்து
சுத்தனுய்நிற் றலருள்வாய் ஆறெழுத்து[3] திரண்ட
ஓரெழுத்தா[4] அபயம்.

---

2. பாதையில். 3. சரவணபவ. 4. பிரணவா.

---

91. வேல்வீசி அழிப்பான்

வஞ்சிப்போர் மனதில் வாழான்,கெஞ் சிக்கூவி
வள்ளிப் பெருமான்[1] கொஞ்சிக் குலாவக்
கூடிடு வன்குகை இதயம்,[2]

நெஞ்சில் சிந்தை அழிக்க ஆறெழுத்தை
நேசித்துப் புகுத்திடுவான் வெல்லற்கரி தாமறு
வகைத்தியை வேல்வீசி அழிப்பான்,

அஞ்சலென் றடிபணியக் குன்றம்வாழ் கோமளன்,
ஆதாரம்[3] அடங்கிய அன்னை குண்டலி
எழுப்புவான் யோகத்தால், கண்டீரோ

தஞ்சமளிக் கும்திருவடி யானை அன்புச்சுனைத்
தயாபரனை, அரனை ஆதரித்து, அறியானைக்
காக்கும், அருளே போற்றி.

---

1. வள்ளி பெருமானைக் கெஞ்சிக் கூவிக் கொஞ்சிக் குலாவ.
2. இதய குகையில். 3. மூலாதாரச் சக்கரத்தில்.

---

92. செஞ்சடையாட

செஞ்சடையா டச்,சிதைக்கும் சிற்றின்பம் பொடிக்கச்
சிரித்தாடச், சேவற் கொடியருட் காற்றில்
பறந்தாட, வேலசைந் தாடவும், முருகன்

நெஞ்சடைக்கும் துன்பம் தொலேத்தாட, ஞான
நெருப்பாட, வாயிற்காப் போரிருவர்[1] காக்க
உடலெடுத்த[2] பெருமாள் மருகன் உவந்தாட,

அஞ்சலென்ருேர் விணயறுக்க அருஞ்செம் பொன்மேனி
அலேயொளி மயக்க மயிலுடன் குதித்தாட,
ஒருசிர மாட,இரு விழியாட,மூ விரலுயர்த்தி

நெஞ்சில் இருவிரல் மடித்தாட நால்திசையில்
நேர்த்தியாய் ஆடப்புலன் களேந்தழித்தா டஆறெழுத்[3]
திதயம் பதித்தாட வந்தாஞ றெழுத்தானே[4].

---

1. ஜெயவிஜயாளென்ற வைகுண்ட த்வாரபாலர்களேக் காக்க.
2. உலகில் அவ்தரித்த. 3. சரவணபவ. 4. பிரணவரூபன்.

---

93. அபயக்குடை பிடித்தான்

அபயக் குடைபிடித்தான், ஆறிருள்மழை தடுத்தான்,
இதயத்தடை அழித்தான், பேரருள் ஒளிவிடுத்—தான்பாசக்

கபமொழித்தான் பலமாய்க் கதறத் திறனளித்தான்,
பாபச்சுமை கரைத்தான், பார்வதியாள் குமரன்,—தேவர்க்

கபயக்கொடை கொடுத்தான், கந்தன் அரக்கர்
குலமெரித்து, இன்னற்பனி கழித்தான், இறந்தோர்மன—
முவக்கவையன்

அபயக்குறி இசைந்தான், ஆறுதல் வேண்டுவோர்க்
குவந்தருளளித் தான்,ஆறெழுத் தால்பிற வாழிக்கணே[1]—
கொடுத்தானே.

---

1. பிறவாழிக்கு அணே—ஆறெழுத்தால் அணேகட்டிப் பிறப்புச் சாகரத்தைத் தாண்ட வழி செய்தான்.

94. குன்றின்மேல் நின்ருன்

குன்றின்மேல் நின்ருன், கழிபிடித்தான், கோவணம்
பூண்டு கூவியழைத் தான்முருகன், இவனைப்
பின்பற் ருதென்செய் வேன்,பாவக்

குன்றின்மேல் நின்ருன், குதித்துப்பொடித் தேனென்
றிறைந்தான், பேரின்பப் பாசக் கயிறுவிடுத்
துக்கட்டி இழுத்தா லென்செய்வேன்,

குன்றின்மேல் ஏறுபவக் குறைகள் பின்பற்ரு
தெனப்பறை யறைந்தான், துறவுக் கதிபதியான்
தண்டபாணி, சொக்குப் பொடிவீசி,

குன்றின்மேல் நில்லென்ருல் குகனைத் தடுக்க,
வலியுளதோ, காணுங்கள் ஒருதரம், மாயக்
கள்ள னிவன்,மயக் கிடுவானே.

---

95. எங்கே பெண்ணுருவம்?

பாலன்உருக் கொண்டான், பவமொழிக்கும் அருள்திரட்டு,
சேவற்கொடி பிடித்தான் தேவர் சேனைக்கதி
பதியன், இதயத்துற வளித்தான்,

வேலன், வள்ளியைக் கிழவனுய் வென்றசூலன்
பொற்குமரன், சூன்யம்[1] போலழிந்து நின்ருன்,
துதிக்கக்குதித் தான்பாலன் கந்தன்,

காலன் வெருண்டோடக் காலம் கரைந்தும்,
அழியா அமரநிலை அளித்தானை யன்,ஓலமிட்
டோர்உண ராதுதுன்பச் சுமையெரிப்பான்

கோலன், குன்றில்வாழ் குன்ருவழகன், வெட்டவெ
ளியாய்நிற்க, கோதையா[2] யவன்மருவ, உள்ளம்
உருகுதையே எங்கே பெண்ணுருவம்!

---

1. நிராகாரமாக ரூபத்தைக் கரைத்து.
2. பெண்வடிவெடுத்து அவனை மருவ.

96. கட்டிக்கா

சத்துச்சித் தாமவனைச் சங்கடப் பிறவிஅறுக்
கப்பிடிப்பீர், பத்துச் சிரத்தோன் புகுதவே
இதயப்[1] பரமளித்தோன் மருகன்,

சொத்துப் பித்துச் சொக்கா தழித்து,
தத்துப்பித் தென்றன்பால் துதிக்க,வற் றிக்குறையா
தித்திப்பரு ளும்வள்ளல் முருகன்,

சித்தர்சித் தத்திறமாம் சக்திக் குமரன்
பத்துப்பெற் றும்பித்தம் சிதையா[2] தொற்றிக்[3]
கொள்துற வுக்கழி[4] கந்தன்,

மத்தைச்சுற் றிக்கடைய மாமலை[5] வாசுகி,
பற்றித் தகிக்கும் ஆலம் கக்கப்பற்
றித்தின்றோன் பாலா, கட்டிக்கா!

1. தன்னிதயத்தில் முக்தித்தலம் அளித்த ராமனாய் வந்த பெருமாள் மருகன்.
2. சம்சாரப் பித்தம் சிதைக்காது.
3. ஒற்றிக்கொள்ள.
4. துறவுக்கழியாம்.
5. மாமலை (மேரு) மத்தைச் (வாசுகியால்) சுற்றிக்கடைய.

---

97. கரையாத உளமுனக்கேது

பத்துச் சிரத்தோன் பதறாத நெஞ்சுடையோன்,[1]
தொடாதன மழகைப்[2] பற்றித் தூக்கிச்
சென்றான் தென்னிலங்கை, கந்தா,

சுத்திச் சிதைக்கும் சுடுபேய்கள் காவல்[3]
வைத்துத் தத்தித் திரியும் வானரத்திற்[4]
கனல்சுற்றிப் பற்றாது[5] விசுமனல்,

1. இராவணன் 2. சீதாபிராட்டியை (பதிவிரதைத்தணல் வீசும் அழகியை) 3. அசோக வனவாசம். 4. அனுமான் வாலுக்குப் பந்தம் சுத்தி. 5. அன்னை ஜானகியின் கருணையால் வாலில் தீ பிடிக்காது.

சுத்திச் சுட்[6]டெரிக்கப், பிறசொத்தைத் திரும்பளிக்க,
மொத்திய சுத்தன்[7] துரத்தி, சேதுக்கணை[8]
கட்ட, ஆழித்திரை கடக்கஜால

வித்தை பலவிடுத்தும்[9] வீரருடன் தோற்றழிந்த,
அவனையும் ஆதரித்த[10] பெருமாள் மருகா,
கரையாத உளமுனைக் கேதுகா.

---

6. இலங்கையைக் கொளுத்த. 7. பிறர் சொத்தான ஜானகியைத் திருப்பிக் கொடுக்க வற்புறுத்திய விபீஷணனை. 8. கோதண்டபாணி சேதுக்கணைகட்ட. 9. மாயசக்தி உபயோகித்துப் போர் புரிந்தும். 10. இவ்வளவு கொடியவன் அமிர்த கலசம் பேதிக்க, உயிரிழக்க, அவன் ஜீவன் ஜோதியாய்க் கிளம்ப, அதை இழுத்துத் தன்னிதயத்தில் லயிப்பித்து ஒப்பற்ற இடமளித்துக் காத்த.

---

98. என்வினை எரிக்காவிடில்—வெட்கம்!

எரிகுலத் தாஷண்முகா, எரிகண் விழித்து
எரித்தான் நின்தந்தை, புரமெரித்தும் எரிதாக
மடங்காது, ரதிஇழக்க மதனையும்

எரித்தான், சடைதரித்தான், உமையாள்கா தல்தணலால்
எரியக் கண்டும், உருமாறி தென்திசைவீற்
றுத்,தட்சிணா மூர்த்தமாய்த் தோன்றி,அங்கும்

எரிதொழில் விடுத்தா னில்லை, மாயை
எரிக்கஞானத் தீயைவிடுத் தான்,நின் தாயும்,பதி
விரதம்பூண் சதிக்குள் நின்று,விடன்

எரிக்கும் சக்தித்தண லாய்த்தகிக்கச், சிதறிய
எரிபொறியாற் பிணைந்தகந்தா நின்குலக்கு ணம்எரி
தொழில், வெட்கம்என் வினைஎரிக் காவிடில்,கா.

---

99. வினையா வெல்வது?

வினைவெல்வதா முருகா, வினையா வெல்வது?
ஆறுமுகம் பார்த்திருக் கப்பன் னிருகை
பாணம் தரித்திருக் கக்கொடும்

வினைவெல்வதா முருகா, வினையா வெல்வது?
தாரகன் வதைத்த வேல்தாங்கி, அதில் நாட்டிட
சக்திசிறி நிற்கப் பாழும்

வினைவெல்வதா முருகா, வினையா வெல்வது?
எரிகண் விழியான் விடுத்துச் சிதறியபொறி
யாற்பிணைந்த, உடல்தகித் தும்நிற்க,

வினைவெல்வதா முருகா, வினையா வெல்வது?
நின்கருணை காத்து நிற்கப் பேதை
திருவடி எட்டாதழி வதாசொல்.

---

100. திருமால் மருகன்

மறைவொழிக்கும் மணியான் முருகன், மலைவிடுத்துவந்
தான்இதயம், புரமெரித்த புலித்தோ லுடையான்

பிறையணிந்தோன் குமரன்,புலன் வழிதடுத்துப் பரம்கொடுத்
தணைந்தான் என்னைக், கதிகலங்கி விழித்தோர்

மறைவடைந்த மனதில் ஒளியால்சுக மளித்தான்,
திருமால் மருகன்,தினை வனவள்ளித் திருஅழகன்,

பிறைஒளி வெட்கக் களமகன்ற பரங்குன்றத்[1]
தான்,கன முயர்ந்தவினை பொடித்தான். வேறின்றி[2].

---

1. திருப்பரங்குன்றம் வாழ்பவன்.
2. பிரிதொன்றில்லாது, ஜீவப்ரம்ம ஐக்கியத்தை விளக்கி.

---

101. சுந்தரவேல் அபயா

நல்லா ரிணையும்[1] நற்புகழ் அருணகிரி[2]
நாதா, நீயல்லா லெனைவிடுக்க வேறுளரோ,
சூரன் சிதைத்த வேல்மயிலா,

---

1. நல்லார் அண்டும். 2. ஒப்பற்ற திருப்புகழ் பொழிந்த அருண கிரியின் நாதா.

பொல்லா ரிணைந்து,[8] நின்பெயர்[4] நினையாப்
புகழ்மறந்த[5] நலனடையாப் பாமர ரும்,சர
வணபவ வென்றொரு முறை,நாவால்

சொல்லாமல்[6] சொல்ல, சுகமளித்துக் காக்கும்
சிவகுமரா, அருளுருவா, நின்கருணை
கரைக்கா வினைஎன் செய்தேன்,

நில்லாது[7] பிணைந்து[8] நிலைகொள் ளா,இன்ப
நினைவறு[9] மியோகத்[10] தில்,சுணங் காதே
அழிப்பாய்,[11] சுந்தரவேல்[12] அபயா[13]

---

3. தீயர் முருகனை அண்டி. 4. முருகன் நாமங்களை ஜெபிக்கா 5. உன் கலியாண குணங்களை மறந்த. 6. மனமொருமை யின்றி வாயால் மட்டும் கூவ. 7. தாமதிக்காது. 8. கூடி. 9. எண்ணங்கள் உதிக்காத. 10. சமாதியில். 11. நிராகார சமாதியில். 12. அழகான மங்களகரமான செயலையே செய்யும் வேல் கொண்ட. 13. அபய மளிப்பவனே.

---

102. கனவிலும் கட்டிக்கா

என்னை விட்டகலாது, கட்டிப் பிடித்து,
எனதுளத் தில்மோன முத்திட்டு, நீவிடுத்த
மாயை மயக்கித் துரத்த,

தன்னை விட்டகன்ற சேயை, ஏங்கித்
தாய்தேடிச் சென்று, பற்றி இழுத்து
அணைந்து,கூ டுவதுபோல் முருகா,யான்

உன்னைவிட் டகன்றால், தடுத்தாட் கொள்வாய்,
உள்ளத்தே ஏட்டுச்சுமை தரிக்காப் பேதை,
நின்அரும் பேர்புகழ் பொழியா,

என்னை விட்டுநீ அகன்றால், குகனே,
என்செய் வேன்,ஏ ழைக்கு தவுவார்வே
றில்லை கனவிலும் கட்டிக்கா.

---

3. வைராக்கியப் பதங்கள்.

---

103. பொற்றிருக் காவடி

கத்திக் கிரையாக ஆட்டிடைய ரோட்டிச்செல்ல,
கந்தா, வெட்டுண்டு வீழ்ந்திடும் அறியாப்
பேதை, மதியற்ற ஆடுகள்,

சுற்றிச் சென்றிடும் விந்தைபோல், ஐம்புலன்கள்,
சுகுமரா, வேகமாய் வீழ்த்தித் துரத்திட,
நோய்வெட்ட, நமனுலகிற் கெட்ட,

மொத்திப் புகுத்திடும் பாதைஎன் றேங்காது,
மோனகுரு வே,விரைந்திடும் மாந்தர் செப்பியும்
கேளார், வேல்மயிலா, நின்புகழ்

தொத்தித் திரிந்திடார், பால்அமுது புகுத்தாது,
தொந்திக்கண னிளையா,சிறு சுகமழித் தடைத்தபொற்
றிருக்கா வடிக்கருள் குகனே.

---

104. தஞ்சமென்று தவிக்கக்கிட்டுமா கெஞ்ச

ஊனுலகைப் பற்றி உயருல கெய்தாது
உமையா, பாழுலகிற் பலவினை போக்காது வெருண்டு,

கானுலகி லுன்னைக்கந் தாகந்தா எனக்கூவிக்
கூர்வினை யைமழுக்கி, விண்ணவர் வேண்டும் குமரா,

பேணுதலைப் பிடியாதுநின் பேர்புகழ் மறந்து
ஊர்உலகம் கரையாச் சுக்மெனத் துயிலருகச் செயலியற்றி

வீணுலகில் வேள்வி விட்டுமுடிவில் தரையில்
தாழ்ந்தபின்,அருள்,தஞ்சமென் றுதவிக்கக்கிட் டுமாகெஞ்ச

105. வீழ்த்துறவு வேண்டாம்

விலைகூறு மழுமாதர் வீழ்த்துறவு வேண்டேன்,
வீணனாய் வேல்மறந்து வாழுயிரும் வேண்டேன்,
மதமாம்பேய் பிடித்தமன

அலையொழிக்காச் செயலியற்றும் அகந்தை வேண்டேன்,
அழிசுக முயர்த்திப் பெருசுக மழிக்கும்
அதமருறவு வேண்டேன்

மலைபருத்த வினைகரையா வெறுவேள்வி வேண்டேன்
பொருள்பெருத்த வெளிமயக்கப் பகட்டுப் பூஜை
வேண்டேன் நின்னருள்

மலைவிடுத் தகன்ற, மண்வாழ்க்கை சுகமாமோ,
சுப்ரமண்யா, உன்திருவடி களித்தாட இதயச்
சிற்றம்பலத் தேவருவாய்.

1. பருத்த வினைமலை கரையா வெறும் வேள்வி.

---

106. மெய்யுறவு வேண்டும்—வேண்டாம்

மடையர் பொய்யுறவு

பொய்யர், பேயர், போத மற்ற
மனைவி மாந்தர் மயங்க நகைச்சொல்
வெட்கமிலா தளிக்கும் தியர்,

அய்யன் பேர்சொலா அரக்கர், கதிரவ
னெழுந்தும், கலங்கா துறங்கிக் கர்மம்
துறந்ததடியர், நாக்கைத் திட்டி,

மெய்யன் படைக்க, மாடுபோல் பொருளை
மேயும் மடையர், வயிறே வாழ்க்கை
யெனத்திரியும் வீணர் உறவு,

அய்யோ, ஒழியாதா ஆறுமுகா, சொல்லேன்!
முன்செய்த தீவினையோ, இரவு பகலா
யுனைத்துதிப் போருற வளிப்பாய்.

107. அழிவுடல் அழியட்டும்

அழியுடல் அழியட்டும், அழியா துன்கருணை[1]
அடைந்தால் போதும், ஆறிலும் நூறிலும்

அழிவென் றருளிய ஆன்றோர் பெரியார்
அகன்றும், அவர்வாக்க தகலாஉண் மையலவோ,

அழிக்கும் குளிர்ஜுரம் அனலிற்கிரை யாகுமுடல்,
தவத்தின் தணலால் ஒழிந்தால் இழிவோ,

அழிக்கும்[2] பரத்தை அழிசுகம், இதற்கு
அழியாது, நின்னருள்பெறும் தினத்திற்கழிப்[3] பாய்கந்தா.

---

1. அழியாத உன் கருணை.
2. பரத்தை அழிக்கும்.
3. தினத்திற்கு அழிப்பாய்—தினத்தைப் பெறுவதற்காக அழிப்பாய்.

---

108. தொம்பர நாக்கைக் கட்டினாரில்லை

வம்பரின் நாக்கு வாட்டமாக எட்டுக்கல்
நீளமாம், உலகைக் கட்டி இழுத்துக்
கொட்டத் திலிருத்தி விடுமா,மிவர் இதற்களிக்கும்

தெம்பை, எனதய்யன் தேவர் சேனைக்
கதிபதியான், திருமா மலையன் துதிக்கிட்
டறியார், குட்டிக் கலகம் கட்டிடுவர்,

சொம்பை விற்றுச் சோம்பலாய்த் தின்று,வம்பர்
சபைகூட்டி வானவர் சபைக் குயர்வாம்,
சிந்தித்து நிந்தித்து அழித்திடுவர் குடியை,

கம்பர் இழித்த கூனிசபை கோமளனைக்[1]
காட்டிற் புகுத்தும், தொம்பர நாக்கைக்[2]
கட்டி னாரில்லை, வேண்டா மிவருறவு!

---

1. ராமபிரானை.
2. உத்தமோத்தமருக்கும் விபரீதம் விளைக்கும் இந்த வம்பை.

109. சதியடிக்கும் மனதாசை

கதிரவன் ஏழுகடல் குளித்தெழுந்தான், காற்றுப்போல்
வாரம் விரைந்து சென்றது, பிறையும்
ஓயா துருகி வளர்ந்து,

மதியற்ற சதியின்[1] மாறும் குணம்போல்
நிலையற்று நீடிக்கக், கார்மேகங் காலம்பொழிந்
துசெல்ல, மலரும் நறுமணம்,

ரதிமதன்போல் கண்ணன் ராதை களிக்கும்,
வசந்தம் வந்துவாடி, எரிக்கும் வேனிலுக்
கிடம் கொடுத்தும் குமரா

சதியடிக்[2] கும்மன தாசை சாகாது
வளரும் விந்தைக் கென்செய் வேன்முடிப்பாய்
இதையும், குமரா குகனே.

---

1. மனைவி.
2. கொட்டமடிக்கும்.

---

110. பணமோக்க விரியுமோ வயிற

பணத்தைப் பிடித்துப் புதைத்தால் பயனென்ன,
பணத்தைப் பற்றிப் பாரிற்பணி இயற்றப்பல
னுண்டு,ஐம் புலன்கள் உயர்த்தப்

பணத்தைப் பிடித்தால் பயனில் லையே,
பேரறிவைப் பிடிக்கக் கழித்தால் சுகமுறுவீர்,
வேலன் பேரின்பச் சுனையை,

பணத்தைப் பிடித்துப் பெயரைப் பழித்துப்
பெருமையடிப் போர்க்கருளான், கனமாம் வினைவித்தைப்
பொடித்து முளையா தழிக்கப்,

பணத்தைப் பிடித்துப், புகழைப் பற்றிய[1]
பெரியார்வா ழப்,பசித்த பேதையர்க் களிப்பீர்,
பணமொக்க விரியுமோ[2] வயிறு.

---

1. ஈசனடியார்கள்.
2. பணம் அதிகரித்தால் உண்டு அனுபவிப்பதும் கூட உயருமா? நற் செயலுக்குதவுமட்டே பணச் சுகம்; உதவாது புதைக்கப்பட்டால் அம்மட்டிற்கு இவன் அதிகம் பெற்றும் அதைப் பெருதவனுவான்.

---

111. எது பேரழகு?

பணம்பெரி தாமுருகா குணமா, பேரழகெது,
துக்கத்தா மசரஜம் விட்டுச், சத்வம்
படிந்த, தயைதுதி பணிநற்

குணமற்ற பணப்பாரம், பிறக்கும் குழியிற்
புதைக்கும் வினைப்பாரமே, எட்டுப் படியால்[1]
கிட்டும், அகத்தழகற் றஉடலின்,

பணச்செருக் களிக்கும் அணிகலம் பருத்த
சதைமினுக் கெல்லாம்,எரி ஜதைக்களிக்கும் பிணத்தழகே,
முகத்தழகா முக்திக் கெடுப்பு,

கணமும் கழலா துதிபற்றக், கிட்டுமுளத்
தழகற்ருல், காய்ந்த[2]புறத் தழகு,வழிக் குதவா,
விடர்களிக் கும்தோ லழகே.

---

1. அட்டாங்க யோகத்தில் கிட்டும்.
2. துதியால் உளம் கரையும் ஈரப்பசையின்றிக் காய்ந்த.

---

112. மருகனே ஸ்திரம்

எல்லாம் தோற்றம் மக்களே, எதுதிரம்
உரைப்பீர், பெண்டுபிள்ளைத் தோற்றம், பொருள்வீடு நிலம்.

எல்லாம் தோற்றமே, மறைபொருள் எனதய்யன்
ஒருரு அகன்று பலவாய்மா யப்புவியிற் காணும்

எல்லாம் தோற்ற மே,நிழல், எங்கும்
எல்லாம்நா டகமேடை நடனமே, வலுத்தசேனை[1]விடுத்து,

எல்லாம் தோற்றம்,நொடி யில்கரையும்' என்றுணர்ந்
தநரன்,[2] கண்ணனை யேபற் றினன்,மரு[3]கனேதிரம்.

---

1. துரியோதனன் கண்ணனுடைய சேனை பலமே பெரிதென்று இறுமாப்பில் பற்றி ஒதுக்கிய கண்ணனையே காண்டீவன் ஸ்திரப் பொருளென்று பற்றினது.
2. அர்ஜுனன்.
3. அவன் மருகன் குமரன்.

---

113. உருபற்றித்திரிவதா, சீ—விடு!

எத்தனை ஜென்மங்கள் பெண்தொட்டாய், மனமே,
எத்தனையோ ஜென்மங்கள் அதுவெந்து சாம்பலாகக்
கண்டாய், கசக்கிய கூர்முலை கட்டியணைந்
தமுண்டம்

அத்தனையும், அனலுக்கிரை யானதலவா, முத்திட்ட
அதரம், உருட்டிப்பிடித் ததொடை, சுழிந்தாழ்ந்த
நீர்க்குழி, நீராவி போல்மறைய, நீண்டஎலும்பும்
ஓடுமாய்,

அத்தனையும் பொறுக்க வில்லையா, எனதென்று
அணைந்து, இராப்பகலாய்க் காத்துப்பட் டாடைசுற்றிப்
பாடமோத, மகனென் றழைத்ததுவும் மறையக்
கண்டாய்,

பித்தனாய், பேரின்பஉன் மத்தனாய்ப், பாழான
பற்றறுந்த சுத்தனாய், துறவுபூண்ட பிரணவனின்
பக்தனாய்ப்,பிறப் பிறப்பைஅறுக் காதுஉரு,பற் றித்தி[1]ரிவதா?
சீவிடு!

---

1. பெண்டு பிள்ளை சுற்றமெனும் நாம உருக் கொண்ட அழியும் பிரபஞ்சத்தில் பாசத்தால் கட்டுண்டு வாழ்வதா.

114. பேரின்ப சுகமும் உமதே

புகுந்ததில் புகுந்து, பற்றியதைப் பற்றி,
பாழும் விடமாதரை வெட்கமின்றி வேண்டி,
அத்தனையு மழித்து,

புகுதவும்[1] இடமற் றலைந்து மற்றகம்[2]
புகவே, சொறிகொண்ட நாயெனத் துரத்திட,
மிகுந்திடும் வாழ்க்கையும்

தகுதியாமோ, பகுத்தறி விற்கெடுக் குமா,பிறர்
தாழ்ந்த ழிவதைக் கண்டுடன் கற்றிட,[3]
உணர்ச்சி இலையா,

புகுதலும்[4] விடுதலற்ற,[5] பரதனின் முதல்வனும்
பரமனின் மருகனைப்பற் றப்,பேரின்
பசுகமும் உமதே.

---

1. நுழையவும், தங்கவும்.
2. பிறர் வீட்டில், தெரிந்தவர் சுற்றத்தார் வீட்டில்.
3. பிறர் கெட்டழிவதைக் கண்டு பாடம் கற்று, நல்வாழ்க்கை பற்ற.
4. கருக்குழி புகுதலும், அடிக்கடி பிறப்பதும்.
5. உடல் விடுவது, இறப்பது இல்லாத.

---

115. புலனழித்துச் சுகமடைவீர்

புலன்வழி[1] பிடித்தகன் று,காலன் வரும்வழி[2]
புதைந்து நிற்கச்,சிறு சுகஅகழ் சுவர்மேல்திகைத்[3]
தோட,அதில் நழுவக்கொடும் கருக்குழி[4] விழுந்தழிந்—
தார்முருகா,

---

1. கெட்ட ஐம்புலன்கள் தூண்டிய வழியே சென்று நல்வழி விட்டகன்று.

2. இறப்பைவிட்ப் பிறிதொரு எல்லை இல்லாதிருக்க.

3. சிற்றின்ப வேகத்தால் பகுத்தறிவையும் இழந்து வெறி கொண்டு அதையே நாடிச்செல்ல.

4. மோசம் செய்யும் சிற்றின்பம் இழிக்க, ஆசாபாசம் அடங்காது அதைத்திர்க்கப், பின்னும் பிறவி எடுக்கத் தூண்ட, பிறந்து பிறந்து ஆன்ம அறிவை இழந்தார்.

நலனடைந் தனரா, பெண்டு மக்கள்,
நடுநடுங் கும்தாபத் தணலில் வேகக்,
கதிகலங்கிப் புலனொடுங்கி விழித்துநின்று, ரிதுவோ—
சுகம்தரும்

பலன்பெரிய உயர்வழி, நற்குமரன் மறந்த
பேதைகாள், விழித்தெழும்[5] போதம்பெரு சுகம்அடுத்து[6]
நின்றழைக் குதே,பரம் மறந்தழிந் துழலவிதி[7]—
வசமாமோ,

புலன்புகும் மனம்அழியச் சரண்புகும்![8] இதயம்
புதைத்தா றெழுத்தை, திருஉருவைக் கடிதெ
ழுப்பிப், பேரறி வில்புல னழித்துச்—
சுகமடைவீர்.

---

5. உண்மைச் சுகத்திற்கு, ஆன்மநிலைக்கு விழிக்கச் செய்யும் அறிவு, ஞானம்.

6. நெருங்கி தன்னுள் நின்று, தன்னை அடையத் தூண்டுகிறதே.

7. பரத்தை, முக்தியை, மறக்கத்தான் வேண்டுமென்ற தலை விதியுமுண்டா.

8. ஐம்புலன்களிலேயே புகுந்து ஓடித்திரியும் மனதை அழிக்கச் சரணாகதி அடையுங்கள்.

---

116. திரும்பிப் பிறப்பதா!

ஓடுதே[1] காலம், பாழும் எண்ணம்[2]
ஓயாது இன்னும்[3] மாய்க்குதே, முருகையா,
சுந்தர வேலா,

---

1. வாழ்வில் காலம், மாதம், வருஷமென்றோடுதே.

2. சமாதி பெறுவதற்காக எண்ணங்கள் நில்லாமல்.

3. தீவிர யோகம் நெடுங்காலம் பயின்றும்.

ஓடுதே பின்னும் இதயம்,[4] நினைவருக[5]
ஓயாது, உயிரளிக் குதேபுலன்[6] கெடுக்க,
குருபரனே குமரா,

ஆடுதே உள்ளும் புறமும்,[7] மோனம்[8]
அயர்ந்து நில்லா மூச்சும் நடக்குதே
பாழுலகில் பட்டுழல,[9]

ஓடுதே உவந்தளித்த[10] ஆயுள், ஐயஹோ,
ஒன்றில்[11] அழியாது,[12] திரும்பப் பிறப்பதா,
ஆழ்த்துவாய் இக்கணமே![13]

---

4. இதயம் நிற்றலே சமாதிக்கு அறிகுறியாம்—ஆதலால் இதயம் நிற்காமல் ஓடுதே என்ற வருத்தம்.

5. எண்ணங்கள் அருகி ஒழிய, சமாதியில் இதயநடை நின்று விடாது.

6. இந்திரியங்கள் கெட்டு ஆசைகொண்டு பூர்த்திக்க, ஒத்தாசையாக, இதயம் நடந்து சக்தி கொடுக்கிறதே.

7. உஸ்வாச நிஸ்வாசமாக.

8. மோனத்தில், சமாதியில் ஆழ்ந்து நில்லாத மூச்சு.

9. கொடிய உலகில் கஷ்டத்திற்குள்ளாக்க, ஸ்வாசம் நடந்து வெளி முகப்படுத்துதே.

10. பேரறிவாம் அதனில் கலந்து, அழியக் கொடுத்த வயது.

11. இரண்டற்ற ஒன்றான பிரமத்தில்.

12. நிராகார சமாதியில் "நான்" என்ற அகம் அழியாது.

13. சமாதியில் இப்பொழுதே நிறுத்தி விடு.

---

117. விடும் புலன் வாழ்க்கை!

பொங்கும் திரைகட லோடி எங்கும் போத[1]
இன்பப் பொருளாய் நிற்கும் தெம்புத்[2]
தினைவள்ளிக் கிழவன் மறந்து, பகட்டும் பொன்னைக்

---

1. அறிவாயும் இன்பப்பொருளாயும் நிலைக்கும்.

2. பசியாற்றி உடல்தெம்பு (சக்தி) பெறத் தினைதின்று வள்ளியை மணக்கக் கிழவேடம் பூண்ட முருகனை.

கங்குகரை இன்றித் திரட்டிச், சிற்றின்பக் காதல்[3]
கூடி, உடலழித்[4] துழன்றி ழந்து,
விடமாதர் வெறுத்து விரட்டச், சொட்டை[5] யாகி
[ஊன்

மங்கக்,[6] காத்த விழந்த மருண்ட[7] மனைவி
மக்கள் மண்ணில் உருளப், பஞ்சடைந்த[8]
கண்கள் காணக், கதிகலங்கி, ஐயஹோஎன் றலறவோ,
[ஒளி,

மங்கா மதிபூண்ட, பொன்னம் பலத்தோன்[9] முருகன்
உடலளித்[10] தா,னுயிர் கொடுத்தான்,[11] உய்யும்
உயர்நிலைக்[13] குலைவைக்[14] காதீர், விடும்புலன் வாழ்க்கை[15].

---

3. சிற்றின்பக் காதலை சுகிக்கத் தருபவர்களுடன் பிணைந்து.
4. சரீரம் நோயால் அழிய, விலக்கப் பலவிதமாய்த் திரிந்து செல்வம் செருக்கெல்லா மிழந்து.
5. எச்செயலிற்கும் உதவாதவனாகி.
6. உடல், சக்தி குன்ற.
7. காப்பாரற்று பயந்த மனைவி மக்கள்.
8. பார்வை குன்றிய கண்கள் இக்கோரக் காட்சியைக் கண்டு.
9. சிவனுக்குப் பிரியனான முருகன்—(பொன்னம்பலத்தோனுடைய முருகன்).
10. விசித்திரக் கருவியாக உடலைக் கொடுத்தான்.
11. சென்மம் கொடுத்தான்.
12. பிறப்பிறப்புத் துக்கத்திலிருந்து காக்கக் கூடிய.
13. பரநிலைக்கு.
14. பரநிலையை அழித்துக் கொள்ளாதீர்.
15. ஐம்புலன்களுக் கடிமையான சிறுசுக வாழ்க்கையை விட்டு விடுங்கள்.

---

118. தன்னிற் சுகமென அறிவார்

பெண்ணிற் சுகமெனப் பிணைந்து நின்றார்,
பேரின்பப் பொன்னம் பலத்தான் புதல்வன்
பிரணவன் மறந்து,

கண்ணிற்[1] சுகமெனக் கருதிக் குன்றும்
குணமற்[2] ேறார்,கண்[3] ணிற்கழகைக்கண்டு
களித்து நின்றார்,

மண்ணில், பொன்னிற் சுகமெனத் தேடி,
மருகன் முருகன் துதிபிடித்தோர்க் கருள்செல்வம்
மறந்து நின்றார்,

எண்ணற் றசென்ம மெடுத்துப் பட்டபின்[4]
என்றோ,[5] இவர்,[6]தன் னிற்சுக[7] மெனஅறி
வார்,தயா பரனே,

---

1. கண்களால் கண்டு சந்தோஷிக்க எண்ணி.

2. சத்தற்ற, நற்குணமற்ற.

3. வெளிக் கண்களுக்கு மட்டும் தோலழகுப்பகட்டைக் கண்டு.

4. மனதைப் பரவசிக்காத கண்ணிற்கு மட்டும் அழகுத் தோற்றத்தை, நிலையற்ற பொய்ச் சுகங்களைத் தொடர்ந்து பற்றி, திருப்தியடையாது, வருந்திப் பல சென்மங்கள் எடுத்துக் கஷ்டங்கள் பட்டபின்.

5. எந்த சென்மத்திலோ எப்பொழுதோ.

6. அவித்தையால் சிறுசுகத்தில் மயங்கியவர்.

7. தான் என்ற ஆன்மாவே சுகப்பொருள், பிறிதொரு வெளிப்பொருள் சுகப்பொருளல்ல, என்று ஞானம் பெற்று அறிவார்.

4. ஞானப் பெருக்கு.

---

119. உவந்தளிப்பாய் பரநிலையை

ஏட்டுச்சுமை தாங்கி எட்டிப் பிடியார் திருஉள்ளம்,
முருகா, கட்டைச் சுமைதாங்கிக் கல்லாமிவர்

மேட்டுத்தரை நீர்நில்லா இடமாம் இவரிதயம் அன்பு
துதிவெள் ளத்திற் கணையிடார் யோகத்தால்

வீட்டைப்பிடிக்[1] காது திருவடி வலுவால், உலகஓட்டைச்
சல்லடையில் பிடித்திழி வார்சிறு சுகத்தை

காட்டுத் தீயாய்க் கந்தா நீவினை எரிக்க[2]
ஓட்டையும் உடைத்தே உவந்தளிப்பாய் பரநிலையை.

---

1. முக்தியைப் பெறாது. 2. மிகுதியான அல்ப சிறுசுக ஆசையை யும்.

---

120. உடல் மறந்து புகழ் பொழிந்தால்

மனமலமகற் றுதுடல்மல மகற்ற மருகன் மெய்யுறவு
மலையள வுயர்ந்த துன்பப் பனிமலை கரைக்கும்,

கனலொளி கிட்டாதே, கந்தன் வெளிபணி[1] வுக்கியை
வானே, பொருள்பறி இசைக்கனு[2] கானே, இழிக்கும்

கனவாம் கலிசுகம் களிக்க, இருமுருகன் பெருசுகம்
கிட்டாதே, ஐயா! ஆணைமடு அழிசுகம் பிடித்த

அனல்வினை யழிக்காப் பிறவியெடுப் பாரோ, ஆறு
முகன்,உடல் மறந்து புகழ்பொழிந்[3] தால்,வரு வானே.

---

1. கர்ம ஞானேந்திரிய, நமஸ்கார, பூஜை உபசாரங்களுக்கு.
2. பொருளைப் பறிக்கும் பாடகர் (பக்தி நாமருசி அகன்ற) சங்கீதத்திற்கெல்லாம் நெருங்கமாட்டான்.
3. மெய்மறந்து, ஆறுமுகனுடைய திருப்புகழில் ஈடுபட்டால்.

121. சுத்த மோனியாய்ச் சுகத்தில்

சக்தியும் சிவனும், சச்சிதானந் தப்பொருளாய்
சிந்தை களிக்கச்,[1] செத்த செகத்தைச்
சுகமெனக் கருதேன்,

சக்திவேல் வீசிச் சூரனைச் சிதைத்த,
சின்மயானந் தபொருளே, ஆயிரம் இதழைக்[2]
குண்டலி சக்தியெட்ட,

பக்தியை மீறிப் பரம்பொருளில் கரைய,
தேனொழுகும் நின்பகட்[3] டுருவில், ஷண்முகா,
களிப்ப தியல்போ!

பக்கமேல் கீழற்ற பரப்ரம்ம[4] நின்னறிவில்,
பிறப்பிறப் பற்றுச்சுத்த மோனியாய்ச், சுகத்தில்
நிற்ற லருள்வாய்.

---

1. சிந்தையைக் களிக்கச் செய்ய.
2. கபாலத்தில் யோகப் பார்வைக் கெட்டும் ஆயிர இதழ்த் தாமரையை.
3. நின் அழகான உருக்கொண்ட நிலையில்.
4. பரப்ரம்மமான.

---

122. அகமோட்டை யடிப்பாய்

பழனி கண்டேன் பழனிமா மலையா,
திருப்பழனி இதயக்குகை யி,லிருக்கக்[1] கண்டேன்
ஓடித் தேடும்உயர் குன்றப்

பழனி, புவிச்செயல்[2] பற்றிக் கலங்கா
திருத்த, அகச்செய[3] லடங்க, நின்பிரணவ[4]
வடிவுருவால் உருஅழிந்த[5] மோனஉளப்[6]

---

1. உலகில் இருக்கும் பழனிமலை.
2. பிரார்த்தனைகள் செலுத்தி மனதைச் சாந்தி செய்ய.
3. உளமாருட்டம், மன எண்ணங்கள்.
4. பிரணவத் தியான ஜெப உரு மகிமையால்.
5. நாம ரூபம் அற்ற.
6. சமாதி பெற்ற, உடல் பதிந்த, இதயம் (ஆத்மஸ்தானம்)

பழனி, தூய பேரின்ப வெட்ட
வெளியாமே, மயிரகற் றும்வெளி மொட்டைப்
பணிபெரிதோ,[7] ஆசைக்கே சமகற்றி,[8]

அழகா மகமொட்டை[9] அடிப்பாய் அருளேவடி
வாம்வடிவே அருளாய் இருளொழித்தாய், திரிந்து[10]
பற்றத் தலமில் லைகா!

---

7. பிரார்த்தனை செய்து வெளிமொட்டை யடித்து உனைச் சேவிப்பது பெரிதா.

8. ஆசை என்ற மயிரை நீக்கி.

9. ஆத்ம சௌந்தர்யமான உளத்தை மொட்டையாக்குவாய், நிராசையாய்த் துறவு அடையச் செய்வாய்.

10. வெளிஉலகில் ஓடித்தேடி உனைப்பற்ற இடமில்லை; நீ உளத்திலேயே நிற்கிறதை அறிந்து விட்டபடியால், உன்னைத் தேடிப் பிடிக்க, உலகத்தலங்களொன்றுமில்லாமல் போய்விட்டது.

---

123. தெய்வம் பலவென்றேனே சண்டை

எங்கெங்கோ பெய்யுமழை எங்கும் நில்லாது,
ஆழிநீர் சேர்ந்து, உருஅழிந்து கலப்பதுபோல்,
அன்புப் பெருக்கால்,

எங்கெங்கும் பொழிந்திடும்[1] எவ்வெவர் துதியும்,
இம்மதம் அம்மதமென,[2] சமம்[3]சம் மத[4]மற்று
இணைபிரிந்து தயங்கித்

தேங்காது,[5] வில்வளைத்துத் தொடுத்த அம்பெல்லாம்
குறிப்பில் பறந்தோடிப் பாய்வது போல்,ஒன்ருய்,
ஆனந்தப் பெருக்காய்,

இங்கும் எங்கும் இளைத்தோர் காக்கும்
எனதய்யன் முருகன்[6] எட்டுமய்யா, தெய்வம்பல
வென்றேனே சண்டை?

---

1. பொழியப்படும். 2. இம்மதத்தான் அம்மதத்தான் என்று 3. ஒரே சமமான பலன். 4. (சம்மத) ஈசனுடையபிரியம். 5. வெவ்வேறிடத்தில் நின்று விடாது. பலனற்றுப் போகாது, வெவ்வேறுள பலன்களுக்கிடம் கொடாது. 6. முருகனையும் காணும், ஒரே தெய்வத்தை.

124. தண்ணீர் பாயாது விளையும் பாசக்கதிர்கள்

ஓயாத எண்ணங்கள் ஒன்றின்பின் பலவாய்,
மாயாதே எழும்ப, உலகளந்தோன் மருகா,—
தண்ணீர்

பாயாது விளையுமிப் பாசக்[1] கதிர்கள்,
தீயாது வதைக்குமிம் மாயைதான் என்னே,—
குன்றின்மேல்

தேயாது[2] நின்று, தெவிட்டாத் திருவடித்
தினையளிக்கும் தேவர் சேனைக் கதிபதியா—
வேல்கொண்டு,

மாயாத சூரனின் மாறனாய்[3] வென்றாய்,
அலையற்ற ஆழியாய்[4] சிந்தையை[5] அழித்திடேன்—
கந்தவேலா.

---

1. ஆசாபாசத் தூண்டுதலால், உண்டாகும் எண்ணங்கள் மன மாறுதல்கள்,
2. மாறாது; இளமை, முதுமை, வளர்வு, தேய்வு அற்று.
3. சத்துருவாய் அல்லது அழித்தவனாய்.
4. எண்ணங்கள் என்ற அலை எழும்பாது, நிச்சல சித்சாகர மாய்.
5. சிந்தையிலுள்ள ஆசாபாசங்களை.

---

125. பரத்திலழிவது எக்காலம்

பிறந்து மிறந்தும் பிறந்து, பலஉருவம்
பெற்றும் ஓயாது, சிற்றின்பப் பயிரைத்
தெவிட்டாது மேய்ந்து,

பறந்து பதைத்துப், புவிச்செய லியற்றி,
நின்அழ குருவம் பற்றாது பட்டு,
வினைச்சுமை உயர்த்தாது,

துறந்து தண்டம்[1] கொண்டு, தூய நின் திருவடி
நினைந்து, பிரணவ உருஉயர் வால், நா
மஉரு[2] அழித்து,
இறந்து பிறக்கும் இகச்செய[3] லொழித்து,
முருகா, பரத்தி லழிவது[4] எக்காலம்,
கருணை மாமலையா.

1. சந்நியாசியாகி.
2. நாமரூப பாசத்தை அழித்து.
3. பயனை விரும்பிச் செயல் புரியாது.
4. இரண்டற்று ஒன்றேயாவது,

126. இதுவும் இவன் கருணை

துறவுத் தணல்மூட்டி, ஞானப்பால் காய்ச்சி,
துலங்காப் பேரின்பப் பசிக்களியா மடமாந்
தருக்கென் சொல்வேன், ஏஞான பண்டிதா,
துறவுத் தணலணைக்கும் சிற்றின்ப நீர்பெருக்கி,
துயர்கொடுக்கும் பிறப்பிறப் பென்ற, ஓயாப்
பசிக்கழி வதியல்போ, அய்யா! அகப்புறத்
துறவு உருவாய், கோவணம் கழிகொண்டு,
தண்டத்தான் நிற்க, துன்பறுக்கும் துதிபயந்து,
இகஇன்பப் பொருளுக் கிரந்தால், இம்முருகன்
துறவு மகிமை அறியாப் பேதைகள்,
தூயஇன்பம் பெறக்கானல் இகமொழிக் கக்கண்டித்
தால்கத ருதிர், இதுவும்இவன் கருணை.

127. அழியும் அகந்தை மாயை

வெளிப்புற[1] மெரித்து வெல்லுவதும் உளதோ
அகந்தை மாயை, ஷண்முகா, தோன்றும்
புரமெரித்தும்[2] தேடினுன் சத்குருவை, நின்தந்தை,

1. புறத்துறவு மட்டும் கொள்ளுவதால் (தோன்றும் பிரபஞ்சம் அகற்றி). 2. காணும் திரிபுரமெரித்தும் (அவ்வளவு சக்தி பெற்றிருந்தும்).

களிபுர[3] மெரிந்தும், கந்தா, புறத்துறவால்,
உருவற்ற நின் அறி வுருவை அறியா
தலைவதியல் பே,உளப் புரத்தில் ஒளிந்துநிற்கும்

வெளிஅகிலம்,[4] ஓங்கி வேரூன்றி அவித்தையில்
அடங்கியதே, மதனை[5] ரித்தென் னபயன்,
அழியாப் பாசப் பயிரழிக்க வந்தானே,

வெளிபுர[6] மெரித்து, வேண்டினோர்க் களிக்கத்
தோன்றினனே, தட்சிணா மூர்த்தனாய், ஞானசமா
திக்கல்லோ அழியும் அகந்தை மாயை.

---

3. இந்திரிய சந்தோஷம் கொடுக்கும் உலகம், 4. உலகப் பற்று. 5. காமவில் வளைக்கும் மதன் உடலழிந்தும், காமம் (மதன்) உளத்தில் தொக்கி நிற்கின்றது. 6. ஆகாயவெளியில் சஞ்சரித்த திரி புரம்.

---

128. வேண்டாம் விலங்கு வாழ்க்கை

துள்ளும் மனது புள்ளிமான் போலத்,
துள்ளிக் குதித்தோட, எனதய்யன் வள்ளிக்
கணவன் அருள்வெள்ளப் பெருக்கு கிட்டுமோ—ஒருநிலை

கொள்ளாக் குரங்கு, கொப்பிற்குக் கொப்பு,
குதித்தோ டுவதுபோல், கெட்ட ஐம்புலன்கள்
தொட்ட மனது, விட்டுவிட் டகலாது,—நின்று

அள்ளிக் கொடுக்கும் அன்பன் ஆறுமுகன்.
திடுவடி ஒட்டுமோ, பாடுபட் டும்முள்
ளைத்தின் றிடும்வெட் டுண்டு வெந்திட,—வறுங்

கள்ளுடன் கூட்டி மென்றிடக் கரைந்திடும்,
மதியற்ற ஆடுபோல், ஜென்மம் பயனின்றிப்
பறந்திடத்திரி வதா,வேண்டாம் விலங்கு—வாழ்க்கை.

129. அறிவற்ற வாழ்க்கை அடுக்குமா

உண்டு புரண்டு[1] நாவைத் திட்டி.
ஊரில் திரிந்து, மனம்நொந்து, நோய்கொண்டு
படுத்து, வாழ்வில் இவ்வி

ரண்டு[2]தான் கண்ட பலன்களா னல்,வயிறு
ரொப்பித் தின்று, திரியும் விலங்கிலும்,
மானி டன்வே ருவனோ,

கண்டு கந்தனைக் களித்து, அளிக்கும்[3]
காலனுக்கு வினைவித்தை அறுத்து, வேதத்
தணலில் முளைக்க வரிதாய்

விண்டு, வேக வைத்து, தயைதியாக
வள்ளல் பெருக்காய்த் துலங்கா, அறிவற்ற
வாழ்க்கை, அடுக்குமோ மயிலா.

---

1. உறங்கி. 2. உண்பதும் உறங்குவதும். 3. காலனுக்கு அளிக்கும் = பிறப்பிறப்பிற்குக் காரணமான.

130. அகத்துறவால் பற்றுங்கள்

அவரவர் வினைமூட்டை அவரவர் தாங்கிச்
செல்ல விதியே, எவரிதற் கென்று
வருவார்மனப் பாரமகற் றத்தெரியா மானிடரே!

அவரவர் வினைப்பயனை ஆறுமுகன் தூக்கிச்
செல்ல, ஐம்புல னடக்கி அடைந்திரா
சரணம், சுத்த சித்தத்துதி பிடியாது,

அவரவர் வினையவரை அழிக்க, ஆசைப்
பணியால் எட்டி நிறுத்திய எனதய்யன்,
மணியன் பேற்பழியா, உடல்பட் டாலென்ன,

அவரவர் வினையால் அழியா திருக்க,
வேல்மயிலன் நீட்டியகழி அகத்துறவால் பற்றுங்கள்,
பிறவாழி நீந்தும் பெருவழி யேஇது.

131. அருட் சுகம்

கனவில் கண்ட உலகம் நினைவில்
கழிவது போல, விழித்தநிலை யில்காணும்
உலகம், நினைவறுந்த[1]

மனதில் பொய்யே, குணமழிந்த[2] நிலையை
மாயன் மருகன் கொடுக்க, உடல்மறந்து
துதிபிடிப் பீரே,

கனவில் கிட்டும் கணசுகமே, உலகம்
கொடுக்கும் புலன்சுகம், குருவாம் குமரன்
குகனுல் துறவடைந்த

மனதில், சுழற்றும் அலையொழிந்த[3] நிலையால்
மருட்டும், கரைகடந்த இன்பக் கடலே,
அழியா அருள்சுகமாம்.

---

1. எண்ணங்களழிந்த.
2. ஆறுவகை வாசனைகளழிந்த.
3. சமாதி நிலையால்.

---

132. நீ அழியாப் பொருள்

எரியாத உடலுண்டா எங்கே பதையாத மனமேதோ,
உடலெரிந் தபின்மிகு தியாவதி லையா மனது

எரிந்தும் மிகுவதி யாதோ அதுவேநீ, அழியாப்
பொருள்எரிந் தும்பதைத் தும்தான் பேரன்பைப் பிடித்தார்[1],

தெரியாது பதறுவதேன், தேர்ந்து விழியாத மனதைஅழி,
மருகன் அருளால், வதைக்கும் ஆசைக் கனலையணை,

புரியாது மாயை,பெயர் புகழ்ந்து மருளாது விலக்க
விதியே, பாசம்வி டாதுதொடரும் அறிவால்அகன் றெழுவாய்.

---

1. பேரன்பைப் பிடித்தார், முமுக்ஷுக்கள்.

133. அழியான் குகனே

பணத்தில் பெருமை கொள்ளாதே, பாரகலக் கூடவரா
துணைவிடத் தனத்தில் பெருத்தவன் இருப்பான்ஒரு

கணத்தில் அழியும் இதுவே, குணத்தில் பெருமைகொள்
வாய்,கொடிய சினத்தை அறுக்கும்குண[1] மேகந்தன்

மணத்தில் கலக்கும், புகழ்,பின்[2] மாயப்பொருள் பிடியா மனம்
உயரஉனக்[3] கிடில்லை, வெறும் பிறவிக்

கிணற்றில் தள்ளும் இனத்தைக்,[4] குமரன் குணத்தைப் பொழிந்
துகழிப்பாய், அழியும்அகிலம்,அழியான் குகனே.

---

1. நற்குணமே.
2. புகழ்—முருகனைப் புகழ்.
3. பொருளில் பெருத்தார் எளிதில் கிடைப்பார். மனமுயர்ந் தோருக்குச் சமமானவர் அதிகம் இரார்.
4. சுற்றத்தாரை தியரை.

---

134. ஏது வினை?

ஊழ்வினையோ, உளத்தே நிற்கும் உண்மைப்
பொருள் அறிவு ருவைவிட்டு, வீணுலகில் அழிவுருவம்—பற்றுவது,

ஊழ்வினையோ, சத்துச் சித்தாம் உலகளந்தோன்
மருகன்,சுக அறிவாய் இனிக்க,அரைக் கணம்புலன்சுகம்—ருசிப்பது,

ஊழ்வினையோ, விளங்காஇம் மடச்செயல், உய்யும்வழி
யா,பார்எனும் பதரைப்[1] பற்றி, வித்துச் சொத்தை[2]—இழப்பதும்.

---

1. பரம்பொருளை மூடிய மாய உலக உமி.
2. நெல் உமிக்குள் விளங்கும் பரவித்து (அரிசி).

ஊழ்வினையோ, தூயஇன் பச்சுனை உமையாள்
குமரன் மறந்தகூத்தே[3] வினைபொடிக்கும் முருகன்பற்ற—ஏதுவினை[4]

3. இது, இன்னிலை குமரனை மறந்ததால் வந்ததே.

4. முருகனைப்பற்ற, மனம் வினையால் கலங்காததால், வினைப்பயனை அனுபவிப்பதில்லை.

---

135. வேண்டாம் 'விடுத்த' அகந்தை

எல்லாம் கொடுத்தும் ஏதும் காணவில்லை
என்ற ஏக்கம், மிகப் பொல்லாத எண்ணமப்பா

எல்லாம் கொடுத்தேன் என்ற ஒன்றே
அகந்தை அழிய, ஜனகன் வாயில்நின் றான்சுகனும்[1]

எல்லாம் கொடுத்ததற்கு எதுவரவு செலவென்ற
வணிகத் தன்மை பொல்லாது,[2] அல்லவா,

சொல்லாமல் விடுத்த சோதியே, அறியா[3]
துகுகன், உளத்தே அளிக்கின்றான்,[4] விடாதேபிடி.

---

1. ஜனகன் உள் அழைக்காது வெளி நிறுத்தப்பட்ட சுகதேவர், பற்றெல்லாம் விட்டும், குருவாய் கோரப்பெற்ற ஜனகன், ஏனழைக்க வில்லை என்பதன் காரணம், அவர் 'எல்லாம் விட்டு வந்த சுகன் காத்திருக்கின்றான், என்று சொல்' என வாயிற்காப்போனை ஏவ, ஜனகன் "எல்லாம் விட்டேனென்ற அதை விடச் சொல்!" என்று விடை அனுப்ப, இதைக் கேட்ட பக்குவமான தீரன் சுகன், உடனே தடையை உணர்ந்து, அகந்தையை அறிவால் வெட்டி, ஞான சமாதி பெற்று, உயிரற்றது போல் நிற்க, ஜனகன் அகநுட்பால் தெரிந்து, கட்டித் தழுவி ஆட்கொள்ளுகிறான்.

2. முக்தி பெறுவதற்குத் தடையான மாயை வெல்லாது.

3. நீ அறியாது. 4. பக்தி பக்குவப் பலன் கொடுத்துக் கொண்டிருக்கின்றான்.

5. தலத்தாமரைகள்.

---

136. சுப்பிரமணியன் போற்றி (கதிர்காமம்)

உருவழித்தான்[1] எனதய்யன் ஊன்றிநின்ருன் அறிவாய்,
இதயம் அருளளித்துப் பொருளொழித்தான் பொன்மலையன்,
அருணகிரி புகழழகன்,

கருவழித்தான்[2] கந்தன் கருணையால் பிறக்கும்
வினைபொடித்துக், குடும்பச்சுமை விடுத்தான் சரணளித்துக்
குமரன், தன தெள்றழிக்கும்

இருளொழித்தான் இன்பக்கடல் இருமுருகன், துதிபிடிப்போர்
இணைபிரியான் இடையர் குலத்தோன் மருகன்,
சுந்தரனைக் கரையேற்றக்

குருஅளித்தான் கதிர்காமக் கருணை வள்ளல்,
குலமொழித்தான்[3] வெட்டவெளியில் நிட்டையால் சுட்டுவென்ருன்
சுப்ரமணியன், போற்றி.

1. நாமரூப பாசத்தை அழித்தான் மனதினின்றும்.
2. மறுபடி கருக்குழி புகாது காத்தான்.
3. குலப்பாசம், இனத்தார் ஆசை அகற்றினுன்.

---

137. இதயக் கூத்திடுவேன் (சுவாமிமலை)

இன்னல் அலைஒழிக்கும் ஈசன் குமரன்,
இன்பச்சுனை அளிக்கும் பொய்கைச் சரவணபவன்,
பையப் புகுந்திடும் பேரருள் உருவடிவன்,

துன்பப்பனி விலக்கும் தும்பிக்கைக் கரிமுகத்தோன்
தொந்திக்கண னிளையன், நம்பிப் பிடிப்போர்
நலனடையும்நற்சிப்பி முத்தழகன்,

இன்றும் என்றும் இதயக்கூத் திடுவன்
இருமுருகன், இல்லை யெனுதருளளிக்கும்
வஞ்சி மணந்தவள்ளிக் கிழவன், பொற்பாதன்,

பொன்னம் பலத்தான் போற்றிப் பிரணவம்
பெற்றஞான பண்டிதன், கலியில்கொஞ் சிக்குலாவ
மிஞ்சியசுவா மிமலைவா ழும்சுந்தர னே,போற்றி.

---

138. திருச்செந்தூரன்.

பிறவாழி[1] நீந்தாப் பெருஆழி கடக்க,
அருளாழிக் கருகே வீற்றிருக்கும் திருச்செந்
தூரா ஆறெழுத்து ஓடம்,

பிறவாழி நீந்துபெரு மரக்கல மாய்த்தவக்
காற்றால் பறந்து செல்ல, கருணையாம் உப்பை
உண்மைப் பேரின்ப இனிப்பாய்,

மறத்தற் கரிய மரக்காற் கிணற்றில்
வற்றாது அமைத்ததென்னே, சின்னஞ்சிறு வடிவழகா
வள்ளியை மணந்த பின்னுலாவி

உறங்காது, இன்னல் உதிர்த்தகற்ற, மாந்தரனுக்க்,
கடற்கரை வாசம் எட்டினையோ, வேறாழி
வேண்டேன், போதும்நின் னருளாழி.

---

1. அறத்திற்குமாறாய் அழிபொருளும் அதைச் சார்ந்த இன்பு மாகிப் பிறப்புக் கேதுவானவை.

---

6. தனது அல தனதோ?

139. மிருந்தாய் கந்தா.

அன்னை என்ற ஆணிவேர், கொஞ்சிக்
குலாவும் பாலப்பருவம்கழியுமுன், கணவன்
கொடுமையாலழிய,எனதய் யன்குமரன் கருணை,

அன்னையின் நேசம் அகலா மாயை
என்றறிந்தோ, அம்மா என்றழைத்து மடிமேல்
தலைசாய்த்துச் சலித்துப் பாசத்தி லிருத்துமுன்,

அன்னை அழித் துத்தானே அன்னையாய் நின்றான்,
மந்திர மோதாத் தந்தை யோவின்
தையாய்க் கசந்து, வெறுத்து, வஞ்சிக்க,

என்னை இடைவிடாதே ஏசி இல்லாள்
அம்புச்சொல் லாலிதயம் சுட்டெரிக்கச், சொற்கடங்கா
மக்கள் துறக்க, மிருந்தாய் கந்தா.

140. மருகன் விடுத்த மறைபொருள்.

என்னை அறிந் தாரில்லை, எனதய்யன் குகனே
குருவாய் வந்துள மறிந்தான் நின்றே, மறைபொருள்

என்னை அறி யாதறிந்து,[1] ஏனென்றுரை யாதுபற்றி
நிற்கக் கிருஷ்ணன்,[2] அவனடுத்து வந்துபடுத்த[3] ரங்கன்,

---

1. உலகோர் தெரிந்து கொள்ளாது என்றும் பொருள்படும்.
2. வெண்ணெய் தின்ற வாயனென்றும் பொருள்படும்.
3. தற்காலம் உயிர் பணி விட்டதுபோல் வெளித் தோற்றம் கொண்ட. பள்ளி கொண்ட பெருமாள் எனவும் பொருள்படும்.

என்னை அறியாது எல்லாம் கொடுத்துநின்
ருன், உளத்தே கட்டியிழுக் கும்அன்பின் சக்தியாரறிவார்,

என்னைச் சமுசாரி என்பார், தம்பணிக்
கேசன்மம் தந்த,தயா பரன்அறி வார்நான் யார்என்று.

---

141. என்னை விடுத்துக் கா.

இப்பணி[1] இயற்றத் தூண்ட இரண்டற்ற
ஒன்ரும் பிரணவா அப்பணி யானியற்ற
பிற்பயனுய் மோன[2] நிலையூன் ருது,

இப்பணி அப்பணி என்றேவ ஈசா
எப்பணி இயற்றியபின் பணிஅகன்ற பேச்சற்ற
ஆனந்த வெள்ளம் ஆழ்த்து வையோ,

சுப்பிர மணியா முருகா சுந்தர
வடிவா, எவர்எப் பணிசெய்யத் திரும்நின்[3]
மாயை, புலனிற் கழிந்த[4] மாந்தர்,

இப்பிறவி[5] வெறுத்துத் தூயபே ரின்பம்[6]
பற்ற இயன்ரு[7] லல்லால், பிறரியற்றப்[8]
பிணிதீ[9] ராதே, எனைவிடுத் துக்கா.[10]

---

1. உலகசேவை.

2. நிராகார சமாதியில். 3. சாமானிய மனிதர்கள் பணிசெய்து திருமா உலகக் குறைகள்; அறியாமை.

4. ஐம்புலன்களுக்கு அடிமையான மனிதர்.

5. ஆசாபாசம், அவற்ருல் உண்டாகும் பயனற்ற பிறவியும், விலங்கு வாழ்க்கையும் துறந்து.

6. தூய்மையான ஈசன் நாமத்தில் உள்ளன்புடன் ஆழ்ந்து இன்பத்தைப் பெற.

7. பக்தி யோகத்தில் ஈடுபட்டா லல்லாமல்.

8. எத்தனை நல்லார் இவர் முன்னேற வேண்டுமென்று இயன்ருலும்.

9. பிறப்பு, இறப்பு, துக்கம் என்ற பிணி.

10. இத்திராப் பணி இயற்றும் தொழிலிலிருந்தும் விடுத்து ஆன்ம சொரூபத்தில் ஆழ்த்து.

142. துட்டர் அணுகை தொலைவிலகற்ற.

அப்பனே, சுப்பிர மணியா, ஆலமுண்ட
சிவசக்திக் குமரா, சேவைக் கெட்டும்
சேவல் கொடியா,

செப்பற் கெட்டா சக்தி சிவனின்
குமரா, வினை தப்பித் திரிந்தும் பாச
பந்தம் விட்டு,

அப்பர் சுந்தரர் செப்பிய[1] ஆதிமூலன்
குருவே, மெய்யர்[2] துக்கம்[3] மீளத்
துதித்தும், கொடுமை

செப்பற் கரிதாய் திகைக்கச்[4] செய்யும்
துட்டர் அணுகை, தொலைவிலகற் றுதிருத்த
லழகோ, அமரா[5].

---

1. துதிமொழி இயற்றிய.
2. மெய்ப் பொருளைப் பற்றுகிறவர்.
3. துக்கமாம் பிறப்பிறப்பிலிருந்து காப்பாற்றக் கூவி நிற்க.
4. திகைக்கும்படியாகச் செய்யும் துஷ்டரின் சொல்ல முடியாத கொடுமையான சங்கத்தை.
5. மெய்ப் பொருளைப் பிடிக்கும் சாதுக்கள், பாசபந்தத்தை விட்டுச் சங்கற்பமின்றி வாழ்ந்து, பிறப்பிறப்புத் துக்கத்திலிருந்து காக்க, உனை அழைத்து நிற்க, கொடுமையாய் தப்பி விலக்கிக் கொள்ளத் தெரியாதபடி அணுகி நிற்கும் துட்டரை "உன் சித்தம் என்னவோ" என்று திகைக்கும்படியாகத் தொலைவுக்கு அகற்றி விரட்டாமலிருக்கும் காரணம் என்னவோ?

தன் முயற்சி துறந்த சாது, துஷ்டர் சகவாசம் தன்னைத் துன்புறுத்த "இதை விலக்காயோ" என்று முருகனிடம் கதறிக் கொள்ளுகிறார்.

7. யோகம்.

143. நீ எங்கிருந்தாலென்ன

எங்கிருந்தா லென்ன,என தய்யன்கும ரன்அங்கிங்
கெனாதபடி எங்கும் ஏகஒளியாய், நிர்க்குண
நிராகார ஆனந்த சாகரமாய் அமரத்

தங்கி உருவெடுத்துத் தாண்டவ மாடும்,
இதயச் சிற்றம்பலம் பதுமஓம்கா ரநாத
மெழுப்ப, உடலயர்ந்து சித்தமழிந் துமறைய,

பொங்கும் கருணைப்போ தமறியாப் பேதைபோல்,
கல்லடுக்கிக் கல்லடித்த உருவச்சிலைக் கலைவதழகோ,
கந்தன், குமரன், வள்ளல் முருகன்,

மங்காது அருட்சோதி மாசில்லா மாணிக்கப்
பொருளாய், இதயகுகை நடுவே விளங்க,
ஆழ்ந்துகளித் திருப்பாய், நீஎங்கிருந் தாலென்ன?

144. இறக்கா வித்தை கிட்டும்

உறங்குவதா, இறப்பல்லவோ உறக்கம், கந்தன்
கதிரவன் ஒளிக்க, ஆசைப் போர்வைக்
குள்ளடங் குவதா,

குறங்காம்[1] மனதைக் குகனின் பெயரால்
இதயக் குகையி லடக்கி,மாயக் கோட்டை
பொடித்துலாவ வாரும்,

பிறவாக் குளிகை பிறந்திறக் கும்துன்
பப்பனி விலக்கும் குமரன் பேரருட்
சுகத்தைப் பெறுவீர்

---

1. எதுகை நோக்கி வல்லினமாயிற்று.

இறவா வித்தை இவனிடம் கிட்டும்
தந்தைக் களித்தான் பிரணவம் உலகிற்குயர்
பொருளிவன் அடைவீர்.

---

145. யோகக் கோவிலே உனது.

கோவில் கட்டுவா ருளர்குளந் தொடு
வாருளர், வினைவெட் டுவாரிலையே,[1] கந்தா,கல்
மேல்கல்ல டுக்கிப்பொருட்[2]

கோவில் கட்டி உனைஎட்டக் கோமளனே
இயலுமா, முப்பந்தம் பிணைந்த, நாப்பந்த[3]
மிட்ட, மோனஉடற்

கோவில்[4] கட்டவாழ்ந் திருக்கும்,அக் கோட்டைக்
குள்தோன்றி நிற்கும், தூய கருணைப்
பெருக்கே, கல்லிணைத்த

கோவில் கட்டி என்னபயன் ?[5] கோவர்த்தனக்
குடைபிடித்தோன் மருகா, ஞானம்வாழ் யோகக்[6]
கோவிலே உனது.

---

1. பொருள்பணி எளிதாம். தீக்குணம் அழிக்கும் பணி அரிதாம்.

2. உலகம் புகழ் பெருமைக்காகக் கட்டும் ஆடம்பரக் கோவில்.

3. உட்டியாணம் முதலிய முப்பந்தங்களுடன் நா நுனியைக் கிட்டித்த பல்லில் தாக்கி குண்டலியை எழுப்பிய மோன.

4. யமநியமாதி தேறி சமாதி பயிலும் உடற் கோவிலே பெரிதாம். அவ்வாறு கட்டியதே அவன் வாழ் மனை என்ற பொருளாம்.

5. திரிகரண சுத்தி பயிலாது, பிரேம பக்திப் பணியாக அமையாத (ஆன்ம உடற் கோவில் மறந்து) டம்ப வெளிக்கோவில் கட்டி என்ன பயன்?

6. அறிவுடன் பக்தி (ஜீவாத்மா பரமாத்மாவின்மேல் கொள்ளும் பக்தி) யோகம் இயற்றும் பக்தர் உடலே.

---

146. என்னைம் அழித்துக்கா.

ஆழாழி கரையுடைந் தகிலம் அழிந்தா
லென்ன குமரா, ஈரே ழுலகம்,
கதிவிட்டுப் பொடிந்தேஉதிர்ந் தாலென்ன,

ஏழாறு இருளொழியா ஜென்மம் எடுத்த
லேந்தா லென்ன, குருபரனே, ஓராறு
எழுத்தொரு தரம்உளம் பிடித்தெழாப்[1]

பாழான மனதிற் பதறிப் பிறந்திறக்க,[2]
ஓயா தழித்திடும்[3] நில்லாப் படும் நினைவின்[4]
கொடுமைக் கிடுளதோ, முருகா?

ஆழாழி வற்றும்,வற் றுஇவ்வினை ஆழிக்
கென்செய் வேன்,ஒன் றன்பின் ஒன்றா
றுமெண் ணம்[5] அழித் துக்கா.

---

1. ஆழ்ந்து ஒருமைப்பட்டு முருகனைப் பிடித்து உயராத.

2. உண்மையாக இறத்தலுக்கு முன், பயத்தாலும் பாசத்தாலும் மனதில் செத்துப்பின் தேர்ச்சி யடையும்.

3. கஷ்டப்படுத்தும்.

4. எண்ணங்களின்.

5. ஊழ்வினையால் தாண்டப்பட்டுச் சுரந்தெழும் விபரீத எண்ணங்களை.

---

147. எட்டுச் சுமைக் கெட்டா ஞானம்.

என்செய லால்பிடிக்க இயலவில்லை சமாதி[1]
ஏகுமரா! உன்கருணை யாவதில் எனைநிறுத்
திக்கா கந்தா! இனிப்படுத்தப்[2]

---

1. சவிகல்ப நிர்விகல்ப சமாதி.

2. இனிமேல் துன்பம் தர.

பின்செய்த[3] தீவினை யாதொன் றுமில்லை
பிரணவா! பின்னும்பிறந் திறக்கப்பொழு[4] துமில்லை
ஊழ்வினை[5] ஏதுமில்லை என்னப்பா !

முன்செய்த தீவினையோ,[6] குருவாய்த் தடுத்தாண்ட
முருகா ! நின்புகழ்காட்[7] டுத்தியில் ஒருபிடி
சாம்பலாய் வெந்தழியக்[8] குகனே !

பின்னும் இந்தப் படிசார்ந்த வாழ்வில்,
பாமரனைப் புலன்வாழ்க் கைக்கீதே[9] லழகோ ?
ஏட்டுச்சுமை[10] யால்கிட்டா தேஞானம் !

---

3. இச்சென்மம் எடுத்தபின் செய்த.

4. மெத்த அவசரமாகி விட்டது பேரின்பம் பெற.

5. அனுபவிக்க வேண்டிய ஊழ்வினை.

6. தீ வினையானது. 7. நின்புகழாகிய காட்டுத் தீயில். 8. மேல் குறித்த தீ வினையானது அழிய.

9. கெட்ட ஐம்புலன் வாழ்க்கைக்கு அடிமையாக்குதல் லழகோ.

10. சமாதி செய்தால்தான் அனுபவத்தால் ஞானம் சித்திக்கும். ஆகையால் கடினமான அவசியமான சமாதியை வேண்டுவது.

8. பொது.

148. இன்பக் காவலின் றழிவர்.

என்செய லாமோ எனதய்ய, இயன்ற நன்செய லெல்லா
முன்செய லூன்பெயர் புகழதுவே உண்மை, இதனை யுணரார்
'மன்னனி யான்,மா செல்வந்தன், மன்னுறு வே'னெனப் பறைமடையர்,[1]
துன்புற் றுவிழ்ந் தே,கால தூதர் வரினே மின்றழிவர்.[2]

1. வீண் பறை அறையும் மடையர்.
2. வரின்+ஏம்+இன்று+அழிவர்=வந்தால் இன்பக் காவலின்றி அழிவர்.

149. வன் நெஞ்சைப் பொடி.

வன்னெஞ்சைப் படைத்தாய், வந்தே வானவர்காத்
திட்டவிண் குமரா,
கன்னெஞ்சைப் பிடித்தென் செய்வேன், கதறிக்கண்
டுன்னைப் பற்ற,
என்னெஞ்சைப் பொடித்துன்க ருணையால், எந்தையே
நீகரைத்தால், குகனே,
இன்னெஞ்சைப் படைத்தஉன் குற்றம் இக்காலங்[1]
கழியு,மென்[2] தயக்கம்?

1. கருணையால் என் கல் நெஞ்சைக் கரைத்தும்.
2. என் கன்னெஞ்சைப் பொடிக்க இன்னும் தயக்கமென்ன.

150. வள்ளல் மருகனே கா.

வம்பர் சொல்லிற் குமயரேன், வாத வீணர்க்கு மிழியேன்.
எம்பெரு மானிழி சும்பரை எற்றித், தனதற் றுன்றுள்,
தெம்புயர் புகழ்பொழி அடியார், தேன்மொழிக் கடிமை யுரையென்?
கம்பன் புகழந்த கல்லைப் பெண்செய் தேவன்மருக னேகா.

151. முற்றும் துறந்தால் வெட்கமேது

முட்டக் குளித்தால் கூதலேது? முற்றும்
துறந்தால் வெட்கமேது?
சுட்டழி கட்டைக்கு மொட்டை யடித்தும்
சோம்பற் கட்டிலேனோ?
விட்டபின், தட்டியெ ழுப்பெட் டுப்படி
விட்டால், பயனென்ன?[1]
எட்டிப் பிடித்துன் திருவடி, இழியாது,[2]
சிதையா துகட்டிக்கா.

1. புறத்துறவு பூண்டும் பயனென்ன?
2. விட்டு நீங்காது.

152. பாதம் பற்ருக் குறை.

தட்டி எழுப்பும் தந்தைகுரு சாமி திருவடி எட்டியபின்
கட்டமென். 'விழிப்புற் றுய்'யென்று காட்டிய கல்விக்[1]
குழைப்பதல்லால்,[2]
சட்டதிட் டப்பேச் சதனுலே, சார்பே ரின்பப் பேறு,
பட்டும் அழிவது பற்றருப் பாடம் பாதம்பற் ருக்குறையே.[3]

1, 2. ஞானம்பெற, தியானசமாதி உழைப்பை ஏற்பதல்லாது.
3. உண்மையில், அனுபவத்திற்காகும் உழைப்பால், குருநாதன் பாதத்தை பற்ருததால், வெளி வேஷப் பற்றுதலா லுண்டாகும் குறை.

153. கற்றும் மறவேன்.

சற்றும் சலியேன்,[1] முற்றும் சத்தமிட்[2]டாரைத் துறப்பேன்
கற்றும்[3] மறவேன், நின்றே காணும்[4] சுத்தர் தொட்டேன்[5]
மற்றும் பிறவேன்,[6] சுட்டு மடியும் உடலைப் பற்றேன்[7]
மற்றென்,[8] எட்டுப் படியை[9] மறந்தும், சுற்றும்[10] நினைவேன்[11]

1. உலகத் துன்பங்களால் மனம் சலிக்கமாட்டேன். 2. வீண் ஏட்டுச் சுமைப் பிரசங்கிகளை. 3. உண்மை நிலையைக் காட்டும் பாடத்தைக் கற்றும். 4. ஆன்ம சொரூபத்தைக் கண்டு அதில் நிற்கும். 5. அண்டினேன். 6. திரும்பிப் பிறக்கும் வழிக்குடன் படமாட்டேன். 7. உடற் பாசமேன். 8. இன்னும் என்ன இருக்கிறது. 9. அஷ்டாங்க யோகத்தை. 10. ஒருமையின்றி ஓயாது சுற்றும். 11. எண்ணங்களெதற்கு, எண்ணங்களறுந்த சமாதியில் நில்[illegible]து.

154. இவனுறவில் கொள்ளையாகுதே உளம்

புள்ளித் தோலுடையான், பூதங்கள் போற்றும்
கங்கைமதி சிரமேற்றான்,
அள்ளித் தருமஞ்சல், வெள்ளிக்கிரி வேந்தன்,
அரனரின் நற்குமரன்,
வள்ளிக் கிழவனுவந் த,வள்ளற்
பெருக்கிவனைக் கட்டித் தழுவத்,
துள்ளிக் குதிக்குதென் றன் தூயமனம், எதற்கோ
உருவிலா ஞானநிலை?

---

155. பேரன்பில் புதை

ஓயாது பொன்தேடி ஓழியா இச்சுமைகரைக்க[1]
மாயாத வினையாது மருகா செய்தேன், நீ அறியத்
தாயார்தன் கருப்பையினைத் தணந்த நாள்முதல் தவிப்பேனை,
பேயாய்ப்பற் றுமிச்சுமையைத் தாங்கிப், பேரன்பில்புதை.

1. குடும்பச் சுமையின் பொருப்பைத் தவிர்ப்பதற்காக உழைக்க.

---

156. நாமக் கனம் கொண்ட நங்கூரம்

காமப் புயற்காற்றுச் சித்தக்கட லலையெழுப்
பிக்கந்தா விசுதே,யுன்
நாமக் கனம்கொண்ட நங்கூரம், வாழ்க்கை
ஓடம்கவிழ்க் காதுகாக்க,
வாமன் பெருமாளின் மருகா, நீ வந்து
போட்டிடுவாய், பயமாகுதே,
காமம் கவிழ்க்கவோ பற்றினே னுன் கருணை,
இக்காற்றை யழித்துக்கா!

---

157. கெட்டழியேனினி

எக்கொடும் செயலுமியற் ற,வறியா எனைக்காக்க
இட்டமில்லை யாயின்,
பக்கென் றணைத்திடிப் பாமரன்னு யிர்விளக்கை,
பின்னும்பிறந் திறந்தொழியா

துக்கத் தில்பட்டுழ லவோ,தாமச ரஜோகுண
வாழ்க்கையிது, கெட்டழியேன்,
தக்கன் குண்டம்குதி தயாபரி தனயனே
கன்னெஞ்சுனக் கேனோகா.

---

158. விட்டிடான் விந்தையருள்

எத்தைச் செய்தாலென் எனதய்யன் குமரன் காத்து நிற்கப்
பத்துச் சிரத்தானை யழித்துமே பரம்சேர்த் தோன்மரு கனிவன்,
செத்துப் பிறக்குமிச் செகத்தில்வினை பற்றித்திரிந் தாலு, மேழை
கத்திக் கூவியுளம் கரைந்தழுதால், அகற்றிடான் சக்தி வேலன்.

---

159. அரைக்கணம் அலையொழித்தயரார்

அரைக்கணம் அலையொழித்[1] தயரார்[2] ஆறுமுகா,
அருட்சுக[3] ருசிஅறி யாரே,
கரைத்து வினைப்பிறப் பறுத்துக் கரைசேரக்,
குறுக்குவழி வேறுமுளதோ?[4]
நரைக்கும்[5] வரைகலை பிடித்தழுதும்,[6] நலக்குமொளி[7]
பெருத்த சுகமிலையாம்,[8]
உரைத்தனர்[9] பெருந்தவர்,[10] அறுவினை தீர்த்[11] துயர்
நிலையது பெறவ றியீரோ?

---

1. மாறிக்கொண்டே யிருக்கும் சித்தத்தின் அலை. 2. யோகத்தில் நிலைக்காதவர். 3. பேரின்பசுகத்தை. 4. தியானசமாதி யோஹத்தைத் தவிர. 5. தலைமயிர் நரைக்கும்வரை; மூப்படையும் வரை 6. ஏட்டுக் கல்வியாய், சாஸ்திரங்களை, அனுபவமின்றிப் படித்துக் கஷ்டப்படும் 7. நித்திய அறிவுப்பிரகாச. 8. கிடைக்காதாம். 9, 10. யோகத்தவப் பெரியார் கூறியுள்ளார்கள். 11. காமக்ரோதாதி ஆறு வினைகளை அழித்து. 12. யோக மோன நிலை. 13. இவ்வுண்மை அறியீரோ.

160. அருளழகா முருகா

அகத்துறவு பூண்ட அருளழகா முருகா
இகப்புறமும்[1] கண்டு இழிபொருட்கோ[2] ருவரோ
மிகப்பெருந்த வப்பயனே மிதித்தழிமீ[3] தமற
அகப்புறத் துறவளிக்கும் ஆறுமுகா போற்றி.

---

1. உன் ஆடையாபரணுதி கொண்ட உலகத்தான் போல் காணும் செயற்கை உருவத்தை.
2. உலகப் பொருளாகிய தனம் மக்கட்பேறு, பெண், சுகம்.
3. ஊழ்வினை மீதமில்லா தழிய.

---

161. வித்தைப்பொடிக்கும் வித்தை ஆறு

1. எத்தைப் பற்றி என்ன எம்பிரானே குமரா?
சொத்தைத் தொட்டுச் சுகத்தைக் கண்டேனே குகனே?
அத்தை இத்தைப் பற்றி அறியேன்யான் அய்யா!
வித்தைப்[1] பொடிக்கும் வித்தை[2] தந்தருள்வாய் கணமே!

2. எனக்குந்தன் நினைவில்லை ஏனோ வந்தாய் குகனே?
தனக்கென்றே இயற்றுதலை தடுத்தாட் கொண்ட பரனே!
உனக்கெதற்கோ என்மேலே உருக்கம் தவமே அறியேன்
மனக்குணங்கள் அறித்துய்த்த மால்மருகா கார்த்தி கேயா!

3. நீருடன் பால்போல நினைவழிக்கும் சிறுசுகம் கலந்தும்
வேருடன் வினையழித்து வேறுடலே புகுந்திடா யென்ருய்,
நாறுடல் பாசங்கள் நான்மறக்க நாதனே செய்தாய்,
[3]நீருடன் வேறுகாணும் திருவள்ளிக் கணவனே பான்மை!

4. என்னறிவாய், என்னுளமாய், என்னுடலாய், என்னுயிராய்
நிற்குமென் குருகுஹனே;
என்னுலகாய், என்னுறவாய், என்பொருளாய், என்சுகமாய்,
பரவுமென் கந்தவேலே;
என்துறவாய், என்தவமாய், என்பயனாய், என்மயமாய்,
காணுமென் சித்துருவே,
என்னுறவை, என்சொல்லை, என்கதியைப் பெற்றஎன்னுள்
பக்தரைக்காப் பதுனதையே!

---

1. வினைவித்தை 2. யோக வித்தை, சமாதியை
3. வள்ளிக்கணவா வேறுகாணும் பான்மையை உடனே தீர்.

5. துறந்த[1] உள்ளத்தே, தூயன் துக்கம் அழிந்து நிற்க,
மறந்தே இவ்வுண்மை, மருகன் மாவருள் இதயன்,[2]
திறக்கா[3] இகப்பணியில்[4], தேடித்திரியும் மாயை என்னே
பறவை காத்தசிவன் பாலன், பிரேம பக்திக் கேவருவான்

6. பால்மணம் மாருப் பாலகனுய்ப் பாலொழுக வாயில்,
கால்வலி பாராது கானகங் கடந்தே, கனவில்
நால்வய துருவாய், நானழுகத் துடைக்க[5] வந்த,
மால்திரு மருகா முருகா, மறையா துளத்தெழுவா!

---

162. ஆடிக்கிருத்திகை பா ஆறு.

1. மனப்பால் குடித்திருந்தேன் மாய்ந்திழியா மோனம் தருவா
யென்றே,
இனம்பால் பாசம், இகவாசை யெல்லா மகற்றி நின்றும்,
ஸ்தனப்பால் உமையெனக் கன்றே யருளியும், சுந்தரனேக் கந்தா!
தினம்பால் போதம் பருகத் தாரா தேய்ப்பதோ நீதி?

2. சினம்மறு வினையகன்ற சித்தர் சுகமே
மனவலே சுழற்றி மயக்காமா மருந்தே
இனம்பொருள் இகமென்ற இருளகற்றும் ஒளியே
கனத்தவ மென்செய்வேன்; கருணையால் குகாகா.

3. அத்தனேயும் படைத்து அருளொளியால் அணைந்து காக்கும்
அய்யனே,
விட்டிடா தெனேத்தினும் வினைப்பாரம் கழிக்கா விந்தை
யென்னே?
மெத்தளனேக் கொஞ்சி மெய்யுலக மகற்றிப் பொய்யுலகுள்
பிறப்பித்தாய்,
சுத்தனென நம்பினேன், சுப்ர மணியா, விடுத்தெனேப்
புதைமோனம்!

4. கூடி உன்னேக் குழைஹஇதயம் கூத்திட்டுத் திரிவேன்!
நாடிஉன்னே நாடெல்லாம் நடந்துவா தாலழியேன்!
மோடிசெய்யும் கோபிகண்ணன் மால்மருகா, தேடுவதேன்!
ஆடிநிற்கச் சித்தத்துள் ஆறுமுகா அலேந்திடேனே!

---

1. பற்றில்லாத, துறவடைந்த. 2. இதயனே. 3. ஞானக் கண்ணேத் திறக்காத. 4. பெயர் புகழ் தரும் உலகப்பொருளே ஆதார மான செயல்களால்.
5. கண்ணீர் துடைக்க.

5. அந்தனை யுமகற்றி அகத்துற வளிக்க,
எத்தனை, இன்னும் எத்தனைநாள் காத்திருப்பேன்?
பக்தனை, சுந்தரன், பாமரனைப் பரம்சேர்க்க,
இத்தனை மோடியோ,என் இன்னிசைக் கந்தவேலே?

6. ஆடிக்ருத் திஇன்றடி பணிந்தளித் தேனிப்பா ஆறு மாலை;
பாடிப் புகழை உலகப் பாடறிக்கத் தேடிநின்றே னுன்னை;
கோடிப் பணிசெய்தும், கோவணத் துறவற்ருர் காணுக்
கோமளனே
விடிவில்லை, உன்னடி விடே போதும், காவடியு மற்றேன்கா!

---

163. சுந்தரக் கந்தா னுபூதி.

1. கந்தனுய் வந்தவா, காலமாய் நிற்பவா,
எந்தனை [1]ஆண்டவள் ஏவிய பாலனே,
சுந்தரன் கண்டுமே சொக்கிடும் மெய்ச்சுகா,
சிந்தனை யற்றதோர் சித்தனுய்ச் செய்தையே

2. பக்தியும் ஞானமும், பற்றிலார் பற்றிடும்
சக்திநல் யோகமும் சச்சிதா னந்தமும்,
முக்தியுன் பாதமே, முக்தன்நா னறிந்தனே ;
எத்தனை ஜென்மங்க ளெடுப்பினும் மறந்திடேன் !

3. வற்றிடா ஊற்றதாய் வளர்ந்திடும் அன்பதாம்
பற்றினேன் உந்தனை பற்றிலா தாக்கினுய் ;
எத்திசை திரும்பியும் எங்குமே நிற்கிருய்,
சுற்றமும் சொத்துநீ சோதியே வானவா !

4. நற்றவர் நல்லுளர் நாடிடும் எந்தையே,
எற்றவம் செய்திடா தேங்கிநான் கதறவே,
கற்றவர் கண்டிடாக் கந்தனுய் வந்தையே;
உற்றவர் பொய்ப்பொருள், உன்னடி பெறுவரோ !

5. சித்திகள் பற்றிடேன் சித்தனே சித்சுகா ;
மொத்தியும் பாசமே, மூலனே வந்தையே !
மெத்தநான் கெஞ்சுறேன் மெய்யனே எங்குகா,
சுத்தனுய்ச் செய்தபின் சுற்றிடும் பிறவியேன் ?

---

1. ஆதி சக்தி.

6. விற்றெனைத் தின்றிடும் வினைரிச் சுற்றமோ,
சொத்தெனப் பற்றிடும் சூதுள மக்களோ,
அற்றுடல் காலனு மணைந்திட, அஞ்சலே!
பற்றிடச் செய்வரோ பரமதைக் கந்தனே?

7. எற்றவம் செய்துமே ஏங்கியே கதறிடார்,
பொற்றிருத் தூளியைப் போதனே பற்றிடார்!
சிற்றுருக் கந்தனே சிந்தையைக் கொன்றவா,
உற்றவா, மறந்திடா துடனருள் பெருநிலே!

8. விற்பவ ரழுகுடல் விலைமகள் பாசமேன்?
சொத்தெலா மிழந்துமே சுகமதைக் காண்பரோ?
சொற்றிற வாதமும் ஜோதியில் கலக்குமோ?
கற்றிடேன்! பற்றிுல் கந்தனைப் போதுமே!

9. தக்கனைக் கொன்றமா தந்தையின் குருபரா,
சொக்கனை மோனமாய்ச் சொக்கிடச் செய்தநீ
மக்கெனைக் காப்பது மாகடும் பாரமோ
சிக்கிடா துலகினில் செய்தருள் கந்தனே

10. சுற்றிடும் சிறுசுகச் சுற்றமும் கழியவே,
முத்திடு முந்தனை மோனமாம் பெருசுகம்,
பற்றிடக் கந்தனே, பாமரன் பிறவியில்
சுற்றிடா திக்கணம் சொக்கிட அருள்புரி!

11. நன்னிலை பொன்னிலை நல்லடி உந்தனின்;
நன்னிலை பொன்மகள் நாடிட ஆகுமோ?
என்னிலை, என்றுமே ஏங்கிடா துணைப்பெற
உன்னிலை, [1]கலந்ததில் ஊன்றிடு கந்தனே!

12. [2]வந்ததும் [3]போனதும் வாடிநான் பட்டதும்,
வந்தனை மறந்ததால் வதைந்ததும் போதுமே!
உந்தனின் பொன்னடி ஒன்றினில் ஒட்டிடு,
நிந்தனை செய்பவர் நினைந்திடா தெந்தனை!

13. அழகா, அருளே, அமரா, அழநான்
எழுவா யெனதுள், எரிய வினைகள்,
கழலா தமரக் களியில் கணமே,
உழலா துலகில், உயர்வா மறிவில்.

---

1. உன் நல்லடியில், என்னிலையும் உன் நிலையும் கலந்து, உன் நல்லடியில் ஊன்றிடச் செய்வாய்.

2. 3. பிறந்ததும், இறந்ததும்.

14. உருளும் பனிபோல் உலகில் வினைமேல்
உருளத் திரள உயரம் பருமன்,
உருளும் மலைபோல் உணர்வு மழிய
உருளே, [1]னருளே [2]உணர்வை மருகா

15. நீயே உறவும், நீயே உணர்வும்,
நீயே இருளும், நீயே ஒளியும்,
நீயே சிறிதும், நீயே பெரிதும்,
நீயே சிவமும், நீயே குஹனே !

16. நீயே நோயும், நீயே பண்பும்
நீயே கலக்கம் நீயே தெளிவும்
நீயே வினையும் நீயே பலனும்
நீயே தவமும் நீயே முருகா !

17. நீயே அருளும் நீயே துறவும்
நீயே இயல்பும் நீயே மறுப்பும்
நீயே சிலையும் நீயே மறைவும்
நீயே நினைவும் நீயே பரனே !

18. நீயே உடலும் நீயே புலனும்
நீயே மனமும் நீயே மதியும்
நீயே தனதும் நீயே சித்தம்
நீயே ஜீவன் நீயே ஆத்மா !

19. கடலாய்த் தரையாய்க் கனலாய்க் கருணைச்
சுடராய்க், [3]கருவாய்ச், சுகமாய்க், [4]குணமுள்
உடலாய் உருவாய் உலகாய் மலரின்
மடலாய் அமரும் மருகா அருள்வாய் !

20. சிறுவாய் யாருய் சிலையின் னழகாய்,
குருவாய் குலமாய் குணமூன் றலதாய்,
உருவாய் [5]மயில்மேல், [6]உயர்வா யமர்வோய்
[7]பெருவாய் மாயை [8]பேணு [9]தமைப்பாய்

---

1. அருள்செய்வாயா. 2. பேரறிவை.
3. கருப்பை ; கருப்பிண்டமாய். 4. முக்குணங்கள் நிறைந்துள்ள.
5. மயில்மேல் உருக்கொண்டு. 6. உயர் நற்குணம் விலக்கி.
7. பெரியவாயையுடைய, எல்லாவற்றையும் விழுங்கக்கூடிய மாயைக்கு.
8. கீழ்ப்படியாது. 9. வாழ்வை நடத்திவைப்பாய்.

21. இழியேன் இனியே இனித்தே இகத்தை ;
கழியேன் காலம் களித்தே கலைகள் ;
பழியேன் பிறரைப் பகரேன் நோக ;
விழியேன் கந்தா வீணர் முகத்தில் !

22. பழிஏ னென்மேல் பற்றப் [1]பெண்ணை ;
[2]கழியாம் துறவைக் கொடுத்தே காக்க
விழியாம் கருணை விழித்தே விலக்க,
[3]சுழிப்போய் மறந்தால், சொல்லே [4]கந்தா !

23. பழனிவாழ் ஆண்டியாய் பரமதைப் பெற்றிட
எழ,துற வதேவழி எனநிற் குமென்குஹா,
கொழகொழப் பற்றுளக் கோழையாம் சிந்தையால்,
வழவழ தவமிலா வார்த்தையால், காண்பரோ ?

24. திருப்பரம் குன்றவா திருமணக் கோலனே,
மருபிறப் பற்றுநான் மருவியே உன்சுகம்,
கருவிழி மாதரால் கலங்கிடா துயர்த்தியே,
உருவிலாச் சமாதியில் ஊன்றச்செய் ஷண்முகா !

25. திருச்செந் தூரா, திருமால் மருகா,
பருத்துப் பாழாய்ப் படுத்தும் வினைகள் ;
வெறுத்துத் தகிக்க வேலை உதவே ;
அறுத்தாய் அசுரர் [5]அழித்தலோ கடுமை ?

26. திருத்தணி யிலேனுடன் தணித்தனை நின்தணல்,
அரித்திவை எரிபட அறுவினை மிகுந்திட ;
கருத்தெதோ, சுந்தரன் கருப்புகுந் தழியவோ,
திருத்தணி தணிந்தனை திருசிகர் வாசனே ?

27. சுவாமி மலைநில் சுவாமி நாதா,
குவாவென் றலறும் குழந்தை எனக்கும்
அவா[6],ஏன் அபயம் அளிக்கக் காண்கிலேன் ;
சிவன்தான் நாதன்[7] சிவமே[8] தேடினனோ ?

---

1. பெண்சுகத்தை. 2. துறவு என்னும் கழியை 3. ஜீவர்களுக்கு தலைவிதி விதிப்பவனே. 4. என்மேல் பழி ஏன் சொல் கந்தா.
5. என்வினைகளை அழிப்பதா.
6. இஷ்டமான அபயம் ஏன் நீ அளிக்கக் காண்கிலேன்
7. நாதனை (குருநாதனை) தேடினனோ.
8. ஹே சிவமே, மங்களப் பொருளே, (மற்றவர் குருநாதனைத் தேட வில்லையா ?)

28. கதிர்காமப் பரம்பொருளே, கலைகல்வி பற்றுத,
விதியறியா என்னை வினையகற்றி யான்மீள,
எதிர்க்கும்வல் மாயையை, ஏகனேநின் சதானந்த
மதிக்கெட்டா மாநிலையி லாழ்த்தியுடன் மாய்த்திடே.

29. சித்சுகம் தான்மெய் ; சித்த மிதிலே,
பொன்சுகம் பெண்ணும் பொய்யென் றறிந்து,
நற்சுகர் நந்தி நாதன் குருவே,
இச்சுகம் வேறென் றலையா தாழ்த்து !

30. அருண கிரியை அடுத்துநீ ஆண்டதும்,
கருணை யென்னும் காக்குமுன் குணமது,
'சுறு! சுறு!' வென்றே சுந்தரன் மூழ்கவே
தருண மிலாது, தரையதாய் வறண்டதோ ?

31. வருணன் விடுக்கும் மழையோ, தகுதி
தருணம் பாரா தயைத்தாரை யுனது?
வருண னளிப்பான் வானுயர் தவமியற்ற,
கருணை யுன்மழைக் கில்லையே யிப்பான்மை !

32. அனுபூதி இயற்ற அறிவே தெனக்கே;
மனுவிது, " நீஎனை மறந்தையோ! செய்வதென் ? "
எனும்பயம் தூண்ட, ஏவினேன் அறிவாய் !
அனுபூதி அருண கிரியாள்[1] குஹா, கா!

33 மந்தனே யான்வெறும் மருண்டதோர் பித்தனே,
எந்தனைப் பழிப்பவர் ஏசுவோர் அறிவரோ !
கந்தனே உந்தனைக் கண்டதை அறிவரோ!
நிந்தனை பூஷணை நின்நிலை யொட்டுமோ ?

34. வானவர் காத்த ஐயனே வேலவா ;
கானலிச் சுகமிதைக் களிப்பதா லென்பயன் ?
கானலென் றறிந்திவர் களிப்பதின் காட்சிபார்;
தானதை சிதைத்துநீ தந்திடே துறவகம் !

35. எதுவுமென் செயலோ ஏது மற்றால் ;
பதுமை போலே பரன்நீ யாட்ட,
புதுவினை மூட்டை புதைக்கும் பாரம்,
எதுவும் குவியா;எச்செய லியற்றிடினென் ?

---

1. அருணகிரியை யாளும்

12 DEC 1955

36. கரைந்துளம் கதறுறேன் கந்தனே ; அறிவைக்
கரைக்குமிவ் வாழ்விது போதுமே? பேரினிக்
கரைசேர்த் திடு! இகக் குழிபுதைப் பதும்விதி
வரைவது முன்தொழில் ; சித்தம் போல்செய் !

164. குகசரணம் நான்கு

1. உருவென உடவென, உயிரென உன்னை நினைந்தேன்,
உருவிலா சுகம்தனில் உலகெலாம் மறத்தல்யான் என்றோ?
கருணையில் கடலெனும் கடம்பனின் திருவாளா, உலகில்
சிறுவனும் சுந்தரன் காத்திட நினைவில்லை சொல்லே?

2. உடலுடைந் துளமுடைந் திகமுடைந் தாலென்ன? அந்தோ
சுடரொளி யுனதருள் விழுத்தலைச் சகியேனே மருகா!
இடமெலா மிகமிதில் இனமதால் வாடுறேன்ஏ சுந்தரா
உடனெனை உருவிலா சமாதியில் புதைத்திடேவே லாயுதா!

3. சுத்தித் திரைமொத்திப் புடைசுற்றக் கடலையா[1]!
கத்திச் சிறையிட்டுப் பொருள்கொட்டக் கூவுதையே,
வெட்டிப் புதைசுட் டுத்திரி இகமையா
மெத்தத் திகைசித்தம் தெளிவெட்ட அருள்குகனே!

4. கூப்பிநில் கையுனது, கூவிடும் குரலுனது ;
நாப்பொழிப் புகழுனது, நானெனும் தன்மையும்,
காப்பதாம் வேலுமிகக் கலக்கம றிப்பதுமே!
மாப்பொன்னு மெனதல்ல மனதறிய எதைத்தருவேன்!

1. ஐயா சுற்றக் கடலைப் புடை.

165. நிராகார குறைப் பா ஆறு

1. அன்புருவாய் அருளுருவாய் ஆனந்த மயமாய் அறிவாய்
தெம்புயர்வாய் தேனமுதாய்த் தேடற் கெட்டாச் சுடராய்
பண்புருவாய் பராபரமாய் பாரில் சுந்தரனின் ஜோதியாய்
நின்றிருப்போய் போற்றிபோற்றி நிராகார என்ஞான பண்டிதா

2. ஆரறிவாய் அவைதனையாள் பேரறிவாய் சித்தமாய்
சின்மயமாய், அண்டங்கள்
காரணமாய், கன்னெஞ்சோர் காலனாய் இக்காலனை
வென்றுநில்மா காலமதாய்

வீரஉளம் புகுந்தாலும் விண்முதலாய், சித்தரின்
சிதாகாஸ சித்சுகமாய்த்
தீரஅகத் துறவாய்க்காண் திஞ்சுவையே சுந்தரன்
சரவணனே போற்றிபோற்றி.

3. ஓம்கார நாதமாய் ஓம்காரம் பிறந்தஅச்
சச்சிதானந் தப்பரமாய்
ஹ்ரீங்கார மொலிக்குமாம் ஹ்ருதய
கமலத்தில் தாரணைசெய் பரம்பொருளாய்
வாங்மனதிற் கெட்டாத வாயுஐந்து பூதங்கள்
பிறப்பிடமாய், அண்டங்கள்
தாங்கிநிற்கும் சுந்தரன்றன் தஞ்சமதாய் விளங்குமென்
குஹகுருவே சரணம்

4. என்குருவாய் ஏகாந்த மோன எல்லையில்
கருணைச் சாகரமாய்
தன்நிலையாய் தஞ்சமளி தயைப்பொருளாய்
தகரவித்தை அருள்ஆதி உளவமுதாய்
என்நிலையும் சொல்லுமெட்டா மறையும் ஏதென்
றுணர்த்தச்சக் தியிலதாய்
அன்புளத்தே ஆட்கொண் டாறறிவை ஆளுமா
றட்சரனே அபயம்

5. பவமாய் பவப்பொருளாய் பாவமாய்
பாவா தித மெய்ப்பொருளாய்த்
தவமாய் தவமெட்டாப் பேரொளியாய்த்
தாந்த்ரீக யோக எல்லையாய்ச்
சிவமாய் சிவஞான போதமாய்ச் சித்அசித்
பேதா பேதமாய்
நவரஸமாய் நரரின்நல் நாயகமாய்
நிற்கும் குஹகுரு பரனேகா !

6. முக்குணமாய் மூலமாய் முக்குண லீலா
விநோத விலாஸமாய்
அக்குணங்கள் பிறப்பித்த காமக் குரோத
ஆறு வினையதாய்

எக்குணமும் எட்டா எல்லை இல்லா
ஏகாந்த போதமாய்
நற்குணமாய் மங்களமாய் நலனருள்
சக்திச் சுகமாய்க்காண் வேலேகா!

166. குஹ ஒளிப்பா ஆறு

1. ஒளிகொடுத்தாய் உள்ளத்தில் ஒலிவிடுத்தாய் ஓம்கார நாதமாய்
களிகொடுத்தாய் பிறந்திறக்கும் கருதடுத்தாய் கார்மேகக் கந்தனே.
பளித்திட்டாய் வானெல்லாம் பராபரவா னந்தசின் மயமாய்,
அளித்திட்ட சுந்தரநின் அக்கரத்திற் கெப்பூஜை செய்வெனோ!

2. எடுத்தாய் சுந்தரச் சிப்பியை எல்லைஇல் இகக்கடல் குளித்து,
எடுத்தே அச்சிப்பி யுள்துடித்த ஜீவத் துளியை முத்தாக்கி,
தொடுத்துன் றொளிரும் மெய்ச்சுகத் துரியக் கிரீடத்தில் அணிந்தாய்
படுத்தும் ஊழ்வினை சுற்றம் பார்த்தே சிரிக்கிறேன்; அருளென்னே!

3. அன்னையாய் அணைந்தோய், அருள்விடுக்க இருகண் ணொருவாய்போ
தாதென்றோ
பன்னிருகண் ணாறுவாய் கொண்டாய்; பக்தரின் வினைபொடிக்கத்
தோளிரண்டு,
எண்ணியோநீ, காணுதென் றப்பலதோள், என்மயிலா கொண்டாய்;
சிவசிவமே!
என்குஹனே குருபரனே கருணைநின் எதற்கென்றுளம் கரைவேன்,
அயர்ந்தேன்கா!

4. பாவரைந்தோர் வரைந்தே நின்றார், பாடிநின் புகழாழி கடக்கவில்லை!
காவலனே, கருணைமா மலையே காக்குமிதன் சிகரேறி
எட்டியோர் யார்!
ஏவநீஅச் சக்திவேலை எவ்வினை எக்குணம் எரியாது நின்றதையே!
ஆவலெந்தன், அருளழகா, அந்நிரா காரமாழப், பூர்த்திசெய்யே!

5. நீதிலான் பாமரன் என்புகழ் ஏற்றையே, நிதெரித்தாள் பவனே!
ஓதிலான் குணமற்றோன் சுந்தரன் ஓம்காரம் கடக்கச் செய்தையே!
மாதிருவர், சுத்தம் துறவென்போர், மருவிநிற்கும் மாதவன்
மால்மருகா,
ஏதிழைத்தா லென்,குஹனே, எனக்கே நிதன்பலன்கள், என்னுள்நீ
புகுந்தாட்ட

6. காத்தலற்றேன் போற்ற லற்றேன் கருணையின்றிக் கலக்கும்சுற்
றத்தினின்றே,
ஏய்த்தலற்ற, ஏங்கிக்க தறுவோர் எவரென்றும் பாராத
ணைந்தாள்வோய்,
மாய்த்திழிக்கும் மாமோக மாயைதான் மருகனே; நீகாக்க
என்செய்யும்?
வாய்த்திட்டாய், வருகவென் றழைக்காஇவ் வேதியனின் சத்பரமாய்;
என்னே!

167 யானும் குஹனும்

1. முறண்பா டுனக்கேன் மூடனிச் சுந்தரன்மேல்?
அறமே உருவா, அறியாது யானுரைத்தால்,
துறவை அளித்துத் தூயனுக் காதென்னே;
வரமாட் டேனென்றால் வாழ்வதெங் கனம்குஹனே?

2. தரணியாள் தயாபரனு தரணியின் தூளியென்மேல்,
வரமரு ளாதுளம் வாழாது சினந்திருத்தல்?
அரசனே! அடிமைக்கே ஆதரவு வேறேது?
பரமனே மறகுற்றம், பதைக்குதென் னுள்ளம்;கா!

3. உள்ளத் திருவழகிற் கொக்குமோ உளமுருகா துளத்தே
கடிந்துநிற்றல்?
அள்ளித் தருமா அருளாழி அல்லநீ என்றுரை பார்ப்போம்?என்
வள்ளித் தாயிடம் முறையிட்டு வனம்தினைப் புனம்ஏகு வோம்!பின்பு
துள்ளிக் காக்குமுன் கருணையும் துயரடையும் தொழிலின்றி!
எச்சரிக்கை!

4. அழஅழச் செய்யும் அநியாயக் கொடுமை இம்மக் களுக்கு,
உழன்று வதைந்து உழைக்கும்யான் ஒருமைஇழந்
தொருகால் சினந்தால்;
பழமாம் முக்திதந் தாட்கொள்ளும் பரசாந்திக் களஞ்சியமே நீயும்,
இழந்தே பொறுமை ஈகை மறந்தால், எஞ்சுவேன் யாரிடம்?

5. நொந்து, இறந்து, நுழைந்து கருபல நொடிப்பொழுதும் சுகமின்றி;
வெந்து வெவ்வேறு வினைவாட்ட, வேறுகதி இன்றிவாடிச் சுந்தரனும்
என்றும் பணியாது, எத்தவமும் செய்யாது, ஏகனே, நின்கருணை
ஒன்றே உய்விக்கு மென்றிருக்கக், குருபரா,
இதைத்தடுத்த லும்தகுமோ?

6. சிந்தித்தேன் பயன்ஐயே; சினத்திலும் காப்பதுன்
தொழிலென் றறிந்தேன்;
சிந்தனையில் சமாதியேன் தரவில்லை பழநிகண்டும்
என்றுதானே சினந்தேன்!
மந்தன்யான் முரடன், மன்றுடும் வழியறியான்,
நம்பிக்கை அற்றேன்
உன்தாளில் ஒருக்காலு மகலாதே ஊன்றச்செய்,
மற்றவைஉன் சித்தம்!

மூன்றும் பாகம்

அன்புடன் ஏற்றுவோர், அன்பைப் பெறுவாரே
அன்பிற் குரியோன் குகன்*

---

*குகனை.

அக்ஷரக் கோவை.

[1]**அக்ஷரக் குமரன் அருளை அவன்றன்**
[2]**அக்ஷரம் பிடித்து** [3]**அடை..**

---

1. அக்ஷரமாம்—அழியாதவனும்.
2. அவனக்ஷரம், எழுத்தை.
3. பெறு (அழியாக் குமரனின் அருளை அவனக்ஷரம் ஜெபித்துப் பெறு).

ராகமாலிகை—தாளம் ரூபகம்

1 அரனுரின்ற குமரா
2 ஆறுர் முகமுள முருகா
3 இரங்கிக் காக்கும் இளையா
4 ஈகை உளத்தா மயிலா
5 உளத்தை உருக்கும் உமையா
6 ஊனை ஒழிக்கும் உருவே
7 என்று வருவாய் கந்தா
8 ஏங்கிச் சிதைந்தே னருளே
9 ஐம்புலனழிக்கும் அரசே
10 ஒன்ருய் விளங்கும் ஆறே
11 ஓலம் ஒழிக்கும் அபயா
12 ஔடதம் புவியில் பரனே
13 கண்ணன் மருகன் குமரன்
14 காலன் ஒழிப்பான் வேலன்
15 கிரியில் துலங்கும் ப்ரணவன்
16 கீரன் துதித்த முருகன்
17 குன்றில் வாழும் மயிலன்
18 கூவக் கொடுப்பான் கருணை
19 கெஞ்சக் கிட்டும் தஞ்சம்
10 கேளீர் குமரன் துதியை
11 கைலையங் கிரியான் தனயன்
12 கொன்ருன் அசுரரை மயிலன்
13 கோரப் பிணியை அழிப்பான்
14 கௌவிக் காப்பான் கந்தன்
15 சத்துச் சித்தாம் சிறுவன்
16 சாலம் அழிக்கும் சித்தன்
17 சிவனின் குருவாம் குமரன்
18 சீறும் சினத்தைச் சிதைப்பான்
19 சுப்பன் இருப்பான் பழநி
30 சூலன் குமரன் பாலன்
31 செம்பொன் நிறத்தான் கந்தன்
32 சேவற் கொடியான் வேலன்
33 சைவப் பொருளாம் இளையன்
34 சொக்கும் அழகன் மலையன்
35 சோகம் தொலைப்பான் மருகன்
36 சௌந்தர வள்ளிக் கணவன்
37 ஞானம் அளிக்கும் ஒளியான்
38 டம்பம் அழிக்கும் பிம்பன்
39 தட்டி எழுப்பும் ப்ரணவன்
40 தாண்டவ மாடித் தனயன்
41 திரமாய்[1] அமைந்த மூலன்
42 தீனர் தஞ்சம் மணியன்
43 துதிக்கத் தீர்ப்பான் துன்பம்
44 தூயோர் துதிக்கும் தூயன்
45 தெவிட்டாத் தேனும்முருகன்
46 தேடற் கெட்டாத் தவமாம்
47 தைவச் சிறுவன் சுப்பன்
48 தொந்திக் கணனின் இளையோன்
49 தோத்திரப் பிரியன் மருகன்
50 நலமாம் குமரன் நட்பு
51 நாடிப் பிடிப்பீர் குகனை
52 நின்றும் காப்பான் முருகன்
53 நீந்தத் தருவான் கருணை
54 நுட்பம் குகனின் குணமாம்
55 நூலால் அடையீர் இவனை
56 நெற்றிக் கண்ணன் தனயன்
57 நேயரைக் காப்பான் குமரன்
58 நையப் புடைப்பான் நமனை
59 நொந்தோர் மருந்தாம் மருகன்
60 நோற்றுப் பிடிப்பார் பெண்கள்
61 பரமன் படைத்த ப்ரணவா
62 பாசம் போக்கும் நேசா
63 பிடித்தற் கெளிய பொருளே
64 பீடை யொழிக்கும் பரமா

---

1. ஸ்திரமாய்.

65 புரமே எரித்தோன் மகனே
66 பூதகி யழித்தோன் மருகா
67 பெரியோர் போற்றும் கந்தா
68 பேரால் கிட்டும் அமுதே
69 பையப் புகுதும் வேலா
70 பொய்கையில் பிறந்த பாலா
71 போகம் அழிக்கும் மணியா
72 பௌர்ணமி முகத்தாய் வரு [வாய்
73 மயில்வா கனனே முருகன்
74 மாரனை விரட்டும் மயிலன்
75 மிதமே விதியா[1] வமுதாம்
76 மீட்கும் கப்பல் குமரன்
77 முத்தி அளிக்கும் ப்ரணவன்
78 மூலப் பொருளாம் இளையன்
79 மெய்யைப்[2] பொய்க்கும் [மெய்யன்
80 மேலோர் துதிக்கும் மணியன்
81 மைந்தன் சிவனின் மலையன்
82 மொழிந்து அடைவீர் குகனை
83 மோகம் எரிக்கும் மருகன்
84 மௌனம் ஞானம் வேலன்
85 யமனை வெல்லும் நாமன்
86 யதிகள் பிரியன் குமரன்
87 யானை மகளின்[3] கணவன்
88 யாகம் தியாகம் நேயன்
89 ரமிக்கக்[4] கிட்டும் மூர்த்தம்
90 ரதியின் மதன்பழி அழகன்
91 ராஜர்க் கதிபதி மணியன்
92 ராதையின் காதலன் மருகன்
93 ரொப்பித் தருவான் கருணை
94 ரோஜா மலராம் இதயன்
95 லிங்கப் பொருளின் குமரன்
96 லீலைகள் புரிந்தான் பாலன்
97 வள்ளிக் கணவன் மயிலன்
98 வானோர் சேனைத் தலைவன்
99 வியாசர் விழைந்த கந்தன்
100 விளக்க இயலா முருகன்
101 வீணர்க் கெட்டா சோதி
102 வீசுவன் வேலைக் காக்க
103 வெல்வான் வினையை வேலன்
104 வெள்ளப்பெருக்காம் கருணை
105 வையகம் வாழ்த்தும் மலையன்
106 மலைமேல் வாழும் மயிலன்
107 வந்தாள் என்னைக் குமரா
108 சுந்தர முருகா பணிந்தேன்.

---

1. விதிக்கப்படாத.
2. சரீரம் பொய்யென உணர்த்தி அதன் ஆசையை ஒழிக்கும்.
3. ஐராவதம் பெற்ற தெய்வ யானையின் கணவா.
4. ஆனந்தமாய் அனுபவிக்க.

நான்காம் பாகம்

அஞ்சல் திரட்டு.

ராகமாலிகை—தாளம் ரூபகம்

தஞ்ச மெனத்தாள் பணியத் தருவானே
[1]அஞ்சல் மருளுவதேன் நீ:

---

1. அஞ்சாதே என்றும் தாங்குதலை.

1	அருளா முருகா	சரணம்	16	அகம்[1] தருவோய்	சரணம்
3	அறுவினை அழிவே	,,	17	கதிர்காம வருளே	,,
3	ஆறுமு கத்தா	,,	18	கந்தா கருணை	,,
4	ஆறெழுத் துருவா	,,	19	கற்கக் காணாய்	,,
5	இன்பக் கடலே	,,	20	கற்கல மணிந்தோய்	,,
6	ஈசன் குமரா	,,	21	காந்தி முகத்தா	,,
7	உளத்தின் அமுதே	,,	22	காவடிப் பிரியா	,,
8	ஊன்றும் உறவே	,,	23	கிரியான் குகனே	,,
9	எந்தன் உமையா	,,	24	கீரர் இறைவா	,,
10	எட்டுக் குடியா	,,	25	குன்றுப் பொருளே	,,
11	ஏகப் பொருளே	,,	26	கூத்தன் மகனே	,,
12	ஐம்புல னழிவே	,,	27	கெஞ்சத் தருவாய்	,,
13	ஒப்பறு மழகா	,,	28	கேடழி தவமே	,,
14	ஓம்கார வடிவா	,,	29	கைலைக் குமரா	,,
15	ஔடதப் பரமே	,,	30	கோபத் தழிவே	,,

---

1. உள்ளத்தில் ஊற்றெழும் அன்பினை.

31	கோலா கலனே	சரணம்
32	கௌரீ தனயா	,,
33	சங்கரிப் பிரியா	,,
34	சத்துச் சித்தா	,,
35	சாஸ்வத சுகமே	,,
36	சித்தத் தெம்பே	,,
37	சீலா நாதா	,,
38	சுப்பிர மணியா	,,
39	சுகப்பெருங் கடலே	,,
40	சுத்தர் சித்தமே	,,
41	சூரன் சிதைத்தோய்	,,
42	சூலன் குருவே	,,
43	செந்தமிழ் இறைவா	,,
44	சேவற் கொடியா	,,
45	சைவப் பையா	,,
46	சொக்கும் இனிப்பே	,,
47	சோதிச் சாகரா	,,
48	சௌந்தர்ய வடிவா	,,
49	ஞான பண்டிதா	,,
50	டம்பக் கழிவே	,,
51	தஞ்சப் பொருளே	,,
52	தாமச அழிவே	,,
53	தினைவனக் கிழவா	,,
54	திருச்செந் தூரா	,,
55	திருத்தணி நாதா	,,
56	திருப்பரங் குன்றா	,,
57	தியர் காலா	,,
58	துக்கக் கரைவே	,,
59	தூயர் நேயா	,,
60	தெம்புயர் தோழா	,,
61	தேன்புகழ் தேவா	,,
62	தையற்[1] சிறுவா	,,
63	தொண்டர் சுகமே	,,
64	தோத்திரப் பிரியா	,,
65	தௌவல்[2] அழிப்பாய்	,,
66	நல்லோர் காப்பே	,,
67	நாதப் பொருளே	,,
68	நித்தியப் பண்பே	,,
69	நீதித் திரட்டே	,,
70	நுட்பப் பொருளே	சரணம்
71	நூதன வடிவா	,,
72	நேயா கந்தா	,,
73	நோனார்க் கரியாய்[3]	,,
74	ப்ரணவப் போதா	,,
75	பழனிப் பெரியா	,,
76	பால குருவே	,,
77	பித்தன் களிப்பே	,,
78	பிறப்பறும் அறிவே	,,
79	பீதிக் கழிவே	,,
80	புங்கவர் காத்தாய்	,,
81	பூரணப் பொருளே	,,
82	பெய்வோய் அருள்மழை	,,
83	பேத மறுப்போய்	,,
84	போதப் பெருமான்	,,
85	பௌர்ணமி வதனா	,,
86	மலைவாழ் பரமா	,,
87	மயில்வா கனனே	,,
88	மாவருள் நிதியே	,,
89	மின்னல் ஒளியா	,,
90	மீனாள் குமரா	,,
91	முன்பின் அற்றோய்	,,
92	முக்குண நீதா	,,
93	மூர்த்தி கருணா	,,
94	மெய்யுற வொளியே	,,
95	மேலோர் தலைவா	,,
96	மோகன முருகா	,,
97	மௌனச் சுகமே	,,
98	ராக்ஷஸர் அழிவே	,,
99	ரூபா வரூபா	,,
100	லாவண்ய முகத்தோய்	,,
101	வள்ளிக் கிழவா	,,
101	வாதர் வெறுப்பே	,,
103	வீரா சூரா	,,
104	வெற்றிவேல் மணியா	,,
105	வேதியர் காப்பே	,,
106	வேங்கடன் மருகா	,,
107	வையகத் திலகா	,,
108	சுந்தர இறைவா	,,

1. தையல் நாயகி. 2. கேடு. 3. தவமிலார்க்குக் கிட்டாதவனே

ஐந்தாம் பாகம்

கீர்த்தனங்கள்

துதியே கலியில் துறக்க வழியே
மதியே மறவா திரு.

சைவச் சமயமும் கிட்டுமா, கிட்டவே
தைவச் சிறுவனைத் தேடு.

கீர்த்தனம்.

ராகம்—பந்துவராளி. தாளம்—ஆதி.

பல்லவி

குருபரனே குகனே குமர

அநுபல்லவி

குகைவாசக் கோமளனே இதய
இருளழிக்கும் ஒளிக்கடலே குரு

சரணம்

புரமெரித்த சிவனின் சிதற்பொறி[1]
பிறைந்த ஆறுமுகனே ப்ரணவ
வடிவழகன் அழித்தானே
மாயை சுந்தர தீரனே குரு

1. சிதறு பொறி என்பது மருவியது.

2. ராகம்—மாயாமாளவ கௌளம். தாளம்—ஜம்பை.

அருணகிரி அருளிதயம் அபயமருள் அணை முருகன்
தருணமிதே தயைவிளக்க[1] தடித்தவினை தனைப்பொடித்து
மறைபொருளாம் மதியமுதாம் மருளிதய[2] மலரொளியாம்
பிறைசடையன் சதிஉமையாள் பவம்விடுக்கும் சிறுகுமரன்
திருக்கடலில் துயில்புரியும் தரித்தகதை திருமருகன்[3]
உருக்கடலை[4] உளத்தழித்து உவந்தளிப்பான் உயர்நிலையை
தினைப்புனத்தில் தடுத்தணைந்தான்[5] திருமலையன் திருமருகன்
சுனைவிடுத்த[6] தினைவாயச் சுந்தரனே போற்றிபோற்றி.

---

1. தயை யளிக்க. 2. உலக இன்னலால் மருண்ட. 3. திருமால் மருகன். 4. நாம ரூபமான துன்ப ஜகக்கடலை 5. வள்ளியை வலுவில் மணந்தான். 6. ஊழ்வினைச் சுனை தவிர்த்த.

---

3. ராகம்—ராகமாலிகை. தாளம்—ஜம்பை.

[மோகனம்]

பொருளழித்த[1] சிவகுமரன் அருளொளியால் இருளொழித்தான்[2]
விரைந்தளிப்பான் கடல்வரதன்[3] திருமருகன் பெருசுகத்தை
கலைமகளின் உயர்கணவன் கமலவிதி அளிசிலன்
அபயமென்ற கரிவிடுத்த[4] அவன்மருகன் கரம்மறவான்[5]

[அட்டாணா]

வேல்விடுத்தான் சூரன்சிதைத்தான் வள்ளிமணந்தான் புனம்திரிந்து
வேதம்விளக்கும் ப்ரணவுருவம் வினைபொசுக்கும் பருமலையன்
பரம்கொடுப்பான் இகம்தடுப்பான்[6] பதறுமன வின்னலழிப்பான்
சுரம்விடுப்பான்[7] பவக்கடலின் சுந்தரனும் போற்றிபோற்றி.

---

1. உலகப்பொருளின் மேலுள்ள ஆசையை. 2. அவித்தை (அஞ்ஞான) இருளை அழித்தான். 3. திருப்பாற்கடல் வரதராஜப்பெருமாள். 4. யானையை முதலைவாயிலிருந்து விடுவித்த. 5. அபயகரத்தை அளிக்க மறவான். 6. இகசுகத்தால் இழியாது தடுப்பான். 7. சம்சாரக் கடலின் தாபசுரத்திலிருந்து விடுவிப்பான்.

4. கந்தன் தந்தை ஆட

ராகம்—ராகமாலிகை. தாளம்—ரூபகம்

தத்தோம் தகிர்தோ மென்று தாண்டவம் ஆண்டவன் ஆட
சத்திப் பெருமான் ஆட சடைமுடி சுத்தன் ஆட
சித்தர் பக்தர் பாடச் சிதம்பர அம்பலன் ஆட
சித்தக் களியா லாட சித்தத் துறவா யாட
சுத்திய பாம்பும் ஆட சூலம் தரித்தோ னாட
சுத்தர் சுகமாய் ஆட சூழ்வினை எரித்தோ னாட
பத்திய அறிவா யிதயம் பன்னக மணிந்தோ னாட
பித்தப் பெரியான் ஆட பிறைஒளி முடியா னாட
மத்தைக் கடைந்தோர் திகைக்க மாவொளி கைலையன் ஆட
மெத்தக் களியா லாட மெய்யர் உருகப் பாட
கந்தன் தந்தை ஆட காலன் மாரன் ஆட
தொந்திக் கணபதி பார்க்க தோற்புலி உடையா னாட
அண்டம் பிண்டம் காக்கும் ஆனந்த வெள்ளம் ஆட
கண்டார் வினையும் கரைய கங்கை கொண்டா னாட
அஞ்சேன் அஞ்சேன் உலகில் ஆலம் உண்டோன் பணிந்தேன்
தஞ்சப் பெருமான் சரணம் சுந்தர சிவனே சரணம்.

---

5. குகன் கொடுத்த குருநாதன்.

ராகம்—ராகமாலிகை. தாளம்—ரூபகம்

சத்குரு நாதா சரணம் சத்குரு நாதா சரணம்
அத்புத மெய்யா சரணம் ஆனந்த கிரியே சரணம்
ஒளியே வழியே சரணம் ஓரறி வுறவே சரணம்
களியே மதியே சரணம் கலையே பெரியா சரணம்

[வசனம்]

என்றுனைக் கண்டேனோ அன்று புவியாழிக் கரைகண்டேன்
என்றுனைப் பணிந்தேனோ அன்று ஆறிருள் அழித்தேனையா

கரைத்தாய் கோபம் சரணம் காமம் எரித்தாய் சரணம்
மறைத்தாய் உலகைச் சரணம் மாவருள் நிதியே சரணம்
கழித்தாய் லோபம் சரணம் கந்தன் அளித்தாய் சரணம்
அழித்தாய் மதத்தை சரணம் அன்னை பிடித்தோய் சரணம்

[வசனம்]

பவமொழித்தாய் அருள்விடுத்துப் பாசக்கதிரறுத்தாய் பரம்கொடுத்து
எனை அடுத்தாய் ஆட்கொண்டாய் ஏதுமறியான் மீண்டுகின்றேன்

மோகம் துறந்தாய் சரணம் — மோனப் பொருளே சரணம்
போகத் துறவே சரணம் — பொடித்தாய் மத்சரம் சரணம்
சிவப்ர காசா சரணம் — சித்தர் அரசே சரணம்
பவப்ர காசா சரணம் — பக்தர் போதா சரணம்

[வசனம்]

சிவப்ரகாச ஆனந்தகிரிநாதா குகைப்ரகாச கருணைகிரிநாதா
தவப்ரகாச இதயகிரிநாதா தத்ப்ரகாச ஆன்மகிரிநாதா

சித்துரு நாதா சரணம் — சின்மய சீலா சரணம்
மற்றுரு[1] அழிவே சரணம் — மங்கள உயர்வே சரணம்
சித்தத் தெம்பே சரணம் — சிறுசுக நாசா சரணம்
சத்குரு நாதா சரணம் — சுந்தர குருவே சரணம்

---

1. சித்துரு அல்லாத

---

6. வள்ளிக் கிழவன் என்ற மெட்டு

தாளம்—ஆதி

பள்ளிசெல்லும் பாலன் போலே — பட்டுத்துணி கட்டி நின்று
பற்றறுத்து வந்தா...... — னடி...கிளியே.........
மால்மருகன் வேல்...... — பிடித்து...........

தேனும்தினை தேடித் தின்று — தேவர்கூட்டம் காக்கவென்று[1]
தெம்பளிக்கத் தந்தா...... — னடி...கிளியே.........
தேடிக்கிட்டா மோனச்...... — சுவை...........

சத்துச்சித்தாம் சுத்த னிவன் — சாலம்பெரு மாயச் சீலன்
மொத்திப் புடைப்பா...... — னடி...கிளியே.........
அத்துவிதம் தத்தும்...... — வழி...........

கற்றுக்[2]கத்திக்[3] காணு ரிவன் — கதறிக்கூவிப்[4] பிடித்தல் வழி
சுற்றிப்பற்ற[5] இயலா...... — தடி...கிளியே.........
சுத்தசித்த[6] சத்திப்...... — பொருள்...........

---

1. அசுரரை வென்று. 2. வேதாந்தக் கல்வியால் மட்டும். 3. பிரசங்கங்கள் செய்து, பஜனைகள் செய்து. 4. உளம் கரைந்து ப்ரேமரசத்தால் இவனைப் பெற அழுது. 5. தலயாத்திரைகளில் திரிந்து பிடிக்க. 6. பரிசுத்தமான சித்தத்திற்கு எட்டும். 7. அபார சக்திக் காதாரமான.

7. தக்ஷிணா மூர்த்தம்.

ராகம்—மோகனம். தாளம்—ஆதி.

பல்லவி

வேர்வினை[1] யின்றழிப்பாய் வேதப்பொருளே யருளேநாதா
பேர்இலா சோதித்திறமே போதக்குருவே முதல்வா......

அநுபல்லவி

காரிருள் கானக............ பொய்யொளிக் காமப்பேய்கள்
சிறிகின்றிருட்டிற் சிதைக்க பேரறிவொளியால் வென்றாய்
(வேர்வினை)

சரணம்

காமினிகாஞ்சனம் காலனுக் களிக்கும் பொருளாம்
காமிதப்[2] பேரின்பம்மழி[3] பேதையர் பற்றுமிருளாம்
மாயையில் மாண்டரு ளின்மையால் அலைந்திழிய
சேயைப்பே ரொளியில்லழித்தாய் தென்திசை மூர்த்திக்குருவே.
(வேர்வினை)

---

1. வினைவேர். 2. அடையவேண்டுமென்று இச்சித்த.
3. அழிக்கும்.

8. ராகம்—ராகமாலிகை தாளம்—ஆதி.

1. பற்றித் திரை கடலதி பண்ணைப் பெற வெனமதி
விற்றுத் தன மிகதிரள் விந்தைச் சுக மெதுமிலா
பற்றும் மின மகவெலா பந்தச் சுடபர நிலைஇழந் தாரே

வசன நடை:—அதி(க) பண்ணைப் பெறவென மதி(த்து) திரைகடல் பற்றி (பிடித்து, ஓடித்திரிந்து) விற்று (வியாபாரம் செய்து) தனத்திரள் மிக (பற்றி) விந்தைச் (புதுமை, பெரிதான) சுக மெது(வும்) மி(ல்)லா(து) (தனத்தை) பற்றும் (பிடுங்கும்) மின (இனத்தார்) ம(க்)க(ள்) வெலா(ரும்) பந்தச் (பந்தத்தால்) சுடபரநிலை (யை) இழந்தாரே!

2. பற்றிப் பெயர் புகழதி பண்ணைத் தரு மென, குகை
வித்தைக் கென குருகுகன் விண்ணர்த் தவ நினைவிலா
'இத்தை விடு' வெனபடர் தொத்தித் துரத்திட பரமிழந்
தாரே.

வசன நடை:—பெயர் புகழ் அதி(கமான) பண்ணைத்தரு மெ(ன்று) னப்பற்றிக், குகைவித்தைக் (தியான சமாதி யோகத்திற்) கெ(ன்று)ன (பெற வேண்டி) தவவிண்ணர் குருகுக(னுடைய)ன், நினை 'விலா(து) 'இத்தை (உலகை) விடு' வெ(ன்று)ன(யம) படர் தொத்தித்துரத்திட, பரமிழந்தாரே.

3. கட்டிச் சுருள் சுமைகலை கத்திப்படித் திருள்பகல்
எட்டுப் படி மறந்திவர் எட்டும் சுக மிலாதுயர்
பட்டுச் சிவ மகனடி பற்றிப் பெரும்சுக வழிஇழந்
தாரே.

வசன நடை:—கலை(ச்) (கல்விச்) சுமை(ச்) சுருள் (ஓலை) கட்டி (திரட்டி) இருள் (இரவு) பகல் கத்திப்படித்(து), எட்டுப்படி (சாக்ஷாத்காரமளிக்கும் அட்டாங்க யோகத்தை) இவர் மறந்(து) எட்டும் (பெறக் கூடிய) சுக மி(ல்)லா(து), துயர்பட்டுச், சிவ மகனடி பற்றிப் பெரும் (குமரனடி பற்றுவதால் கிடைக்கக்கூடிய) (பேரின்பச்) சுகவழி(யை) இழந்தாரே.

4. மொத்திப் புடை அறுவினை சுந்தர னருளவன்குகன்
நித்தம் பிடித் தெழு குகை நித்தக் கடன் பணி இவன்
சத்துச் சுக வெளிதனில் சித்தத் துறவுற பரமுறு வீரே.

வசன நடை:—அறுவினை (காமக்ரோதாதி) மொத்திப் புடை(த்து) நித்தக்கடன் பணி (நித்தியமான, சாஸ்வதமான, பிரதிபலன் எதிர்பாராத சேவை) (யென்று) மெத்தக்களி உரு(க் கொண்ட) குகன் இவ(னை)ன் நித்தம் (அநுதினமும்) குகை (யில்) (இதயத்தில்) பிடித்(து) (தரித்து) தொழு(ந்திடவே), சித்தத்துறவுற, சத்துச்சுக வெளிதனில் (நிராகார சச்சிதானந்தத்தில்) பரம் (முக்தி) உறுவீரே.

9. ராகம்—ஓடம் தாளம்—ஆதி

1. உள்ளும் புறமுமாய் உமை ஈன்ற குமரன்—எள்ளு
மூக்கிலும் இணைந்திருப்பான் பாரீர்.
கள்ளம் கபடிலார் உள்ளத்தினுள்ளே—துள்ளிக்
குதித்திருப்பான் தூய சிறுபாலன்.

ஓட்டு ஐயா — வாழ்க்கை ஓடம்
காட்டித்திரை — அருள் காற்றிற்கென்றே

2. வாட்டமும் சாட்டமாய் வளர்ந்ததால் பயனிலை—
பூட்டிடு உடல் சக்தி வேல்மணி பணிக்கு
ஓட்டிடு ஓயாது ஓரெழுத்து ரதத்தை
நாட்டிடு அதனுளே உருவிலாக்குகனை

ஓட்டு ஐயா — வாழ்க்கை ஓடம்
காட்டித்திரை — அருள் காற்றிற்கென்றே

3. கந்தனைக் கண்டிடு கலிவினை வென்றிட — வந்தனை
பூஜையால் வந்திடானையனை
சிந்தையை அடக்கியே சித்தத்தில் தரிக்க — சுந்தரன்
ஜோதி சுகமதாய்க் காண்பீர்

ஓட்டு ஐயா — வாழ்க்கை ஓடம்
காட்டித் திரை — அருள் காற்றிற்கென்றே.

4. பக்திக்கே கிட்டும் பரந்தாமன் மருகன் — சித்திகளா
லெட்டீர் சுத்தமே பற்றும்
முக்திதரும் முதல்வன் முரண்டழுது பிடியும் —
தித்திக்கச் சிறுசுகம் திரை கடந்தும் கிட்டீர்.

ஓட்டு ஐயா — வாழ்க்கை ஓடம்
காட்டித்திரை — அருள் காற்றிற்கென்றே

5. சக்தி சிவபாலனை சாந்தி தர வேண்டு — விற்றிடும்
மக்கள் பெண் வினை பொருளைக்கேளாய்
அத்துவித சித்தனுக்கு அண்டமும் துரும்பாம் —
பற்றுதரி பாலனை பரம் வேண்டிப் பெறுவாய்

ஓட்டு ஐயா — வாழ்க்கை ஓடம்
காட்டித்திரை — அருள் காற்றிற் கென்றே.

6. தித்திக்கும் தினை தேனைத் தின்ற திருவாயன்—சித்திக்கும்
சிவ போதம் சிவகுருபற்ற
புத்திக்கும் எட்டான் புன்முறுவல் ப்ரணவன்
பற்றிடு "வாவென்று" புரண்டழுது கூவி

ஓட்டு ஐயா —வாழ்க்கை ஓடம்
காட்டித்திரை—அருள் காற்றிற்கென்றே

10. ராகம்: ராகமாலிகை: தாளம்: ஜம்பை

1. கெஞ்சிப் பிடி அடி உயர் கங்கைச் சடை தரிசிவன்
கொஞ்சித் திரி சிறுமகன் கொங்கைப் பெரு நகைமுக
வஞ்சித் தெரு விலிஇழி நங்கை யழி இவன்உளம் பெறுவாயே

2. நெஞ்சைத் துளை சுடுதுயர், நந்தன் பெரு களிஅரன்
தஞ்சக் குரு பரகுகன் விந்தைப் பொருள் சிறுமணி,
பஞ்சுப் பொதி இதைஅருள் பண்பைப் பெறு,நொடிஎரி, அணலாலே

3. துஞ்சுத் திகை அழுகுரல், துஷ்டப் பய மழிமுதல்,
நஞ்சுக் குழி விழுகரி, இஷ்டப் பெரு விடுகடல்
தஞ்சக் குறி மருமகன், தட்சத்திரு மகளொளி அடைவாயே

4. அஞ்சிக் குழி புதை பசி, அன்னைத் திரு வளிரமி,
பஞ்சத் திலு மருள் பந்தக் கொடு வினைநசி
மிஞ்சத் தரு சுந்தரனின் மின்னல் லொளி ரமகுரு படிந்தேனே

உரை

1. இறந்தே பிடிக்க இயலுவதான உயர் நிலை தரும் அடி (பாதம்) உடைய, கங்கையைச் சடையில் தரித்த சிவனார் கொஞ்சித் திரியும் சிற்றுரு மகனும் பெருத்த கொங்கையும், சிரித்த முகமும் கொண்டு வஞ்சிப்போர், வாழும் தெருவின் (வீதி, இடத்தில்) வாசியாய், தாழ்த்தும் நங்கையின் பாசத்தை அழிப்பவனுமாகிய இவனை, உளத்தில் தரிப்பாயே.

2. நெஞ்சைச் சுட்டுத் துளைக்கும் இத் துக்கத்தை, பஞ்சுப் பொதியை, (பண்பைத்தரும்) அருள் தணலாலே நொடிப் பொழுதில், எரிக்கும், நந்தனாரின் குன்றாக் களியான அரனின், தஞ்சமளிக்கும் குருபர இதயகுகை வாசனை) குகனை, விந்தைப் பொருள் (சிறுமணி) பால சுப்ரமண்யனின் அருட்பண்பைப் பெறு (அடை).

3. நஞ்சுக்குழி (முதலைவாயில்) விழுந்த, மரணத்திகையின் அழுகுரல் கொண்ட யானையை (இஷ்டத்துடன்) அன்புடன் விடுவித்த, துஷ்டர் பயமழிக்கும், (பெருகடல்) பெருமை மிகுந்த பாற்கடல் முதல்வனின், ஆதி மூலத்தின், தஞ்சக்குறி கொண்ட மருமகனை, தட்சனின் அழகு மிகுந்த மகளின் (தாட்சாயணியின்) ஒளியை (பிரகாச மகனை) அடைவாயே.

4. அன்னை திருவள்ளி ரமிக்கும், மின்னல் ஒளி (பிரகாச) உருக் கொண்ட, பசிக்குழியில் புதைந்து, அஞ்சிவாழும் பஞ்சத்திலும் (மிஞ்ச) உயிர் நிலைக்கக் கருணையளிக்கும் (தரும்), கொடு வினை (ஊழ்வினை) பந்தங்களை, நசிக்கும் உள்ளத்தையுடைய இவனுக்கு அடிமையானேன்.

11. ராகம் : ராகமாலிகை தாளம் : ஆதி

1. வஞ்சியா தெந்தனே வந்துளம் வென்றிடு
எஞ்சியே கொன்றிடும் என்வினை மாய்வா—
அஞ்சிடா நெஞ்சினுள் சுந்தரன் வந்தனை
கொஞ்சிடும் சக்தியின் கந்த வேலா.

2. வந்தனை அற்பரால் பெற்றுநீ எந்தையே
சிந்தனை ஆழ்ந்திடார்க் கருள்வையோ சொல்லிடு—
நந்தனு ரண்டியோன் நற்குகா பொன்மலை
மந்திரம் அற்றநான் மருவிய பாலா.

3, கொங்கையர் ஆசையைக் கொன்றிடா தெந்தனை—
பொங்கிடும் மாயையில் புதைப்பதோ நீதி
மங்கிடா வுன்னொளி மருகனே கலந்திட—
தங்கிடு எந்தனுள் தாண்டவன் குருபரா.

4. பந்தமாம் பற்றிவை பற்றிடா தென்மனம்—
கந்தனே தந்திடு காங்கையா துறவகம்
சிந்தனை நின்றிடும் சித்சுக மோனமாம்--
வென்றிட ஜென்மங்கள் வெட்டிடும் சமாதி.

மத்யமச்ருதி

12. ராகம் : செஞ்சுருட்டி ஏக தாளம்

சத்குருநாதனை—சம்புவின் பாலனை—சஞ்சலநாசனைக் கூவே ஹே

1. நித்யானந்தமே—நிர்மலபோதமே—நிச்சலகுகனே—வாவா
2. சுற்றும்திரிபுரம்—சுட்டேஎரித்த—சுத்தன்குமரனே—வாவா
3. மத்தாய் சுற்றிய—வாசுகிபாற்கடல்--மால்திருமருகனே--வாவா
4. உத்தமருள்ள—உண்மைக்களியே—உமையாள்பாலா—வாவா
5. மெத்தக்களிகொண்—டாடும்சுத்தர்—மேலோர் துணையே-வாவா
6. கற்கக்கல்வி—காணுக்கரும்பே--கரைந்தழக்காண்போய்—வாவா
7. எத்தனை ஜன்மம்—எடுத்தே வதைந்தேன்—ஏகாபோதும்-வாவா
8. இத்தனைகாலம்—ஏய்த்ததுபோதும் – இன்றேமோனம்—
[ஊன்றிநீகாவா.

---

13. ராகம்: சம்மி　　　　　　　　தாளம்: ஆதி

1. சின்மய னந்தனை சித்துரு நாதனை—சேவலைக்
கொடியாய்க் கொண்டவனை
'தன்'நிலைப் போதனைத் தஞ்சமளிப்போனைத்—தங்கிட
ஞானத்தில் பற்றிடுவாய்.

2. ஓம்கார ரூபனை சுந்தரன் கந்தனை—உலகத்தாய்
வள்ளியை மணந்தவனை
ஹ்ரீம்கார மொலிக்கும் இதயம் தரித்து-இன்னல்கள்
போக்கவே துதித்திடுவாய்

3. சஞ்சல நாசனை சக்தியின் வேலனை—சச்சிதா
னந்தனை ஷண்முகனை
தஞ்சமென் றண்டியே பழநி வாசனை—
தாள்திரு தந்திட வேண்டிடுவாய்.

4. ரஞ்சன மோகன ராதையின் காந்தன்—ராகவன்
கேசவன் மால்மருகா
அஞ்சிடும் அறுவினை அழித்திடென் றலறி—ஐயனின்
னருளில் சுகம் பெறுவாய்.

5. "வருக முருகா, வாழ்ந்திட என்னுள்ளம்,—வந்தனை
தவங்கள் செய்தறியேன்
உருகும் உள்ளத்தில் ஊன்றிடும் கருணை—உன"தென்
றேகூவி மெய்மறப்பாய்.

6. "ஜைல் கின்" மணி ஓசை பூஜை எதற்கு—நல்
சுவாமி மலை வாழ்வோன் நாடிடவே
பொன்னாசை பெண்ணாசை துறவதாம் பூஜைக்கே—பொங்கு
மருள்கடல் புதைத்திடுவான்

7. பண்டிதன் ஞானத்தில் பந்தத்தை முறிப்பான்—பாதமே
முக்தி பாலஸ் கந்தன்
கண்டிடு செந்தூரில் திருப்பரம் குன்றம்—கதிர்காம
உருவற்ற பேரறிவை.

8. வல்லமை பெற்றதோர் சூரனை வென்றபின்—வளராது
கோபம் அலைத்தானே திருத்தணி
சொல்லிற்கே எட்டான் அன்பிற்கே கிட்டுவான்—சொக்கனின்
குருபர சுப்ரமண்யன்.

14. பழனியான் விண்ணிசை

ராகம்: மாயமாளவ கௌளா அல்லது ராகமாலிகை

தாளம்: ஏகதாளம்

1. முருகா வருக முதல்வா எழுக
அருளா வருக அழகா எழுக
குருவே வருக குஹனே எழுக
உருவே வருக உளமே எழுக

2. இதயத் தாமரை இன்னிசை எழுப்பே
உதயக் கதிரவன் ஒளியாய் எழுவாய்
மதமத் தீவினை[1] மருகா[2] அழியே
மதனன் றெரித்தோன்[3] மாகுரு மயிலா

3. சிதரு உளமாய் சித்தம் தெளிய
பதரு மனதாய் பற்றியே அறிவை
அதரப் பூமலர் அமரா செய்யே
மதனே மலையா மணியா மறையே

4. சத்குரு சித்துரு சம்புப் பிரியா
தத்பொரு ளத்திரு தத்துவக் கடலே
மொத்திடு பொய்ச்சுக மோகப் பேயை
எத்திசை பேரினி எங்கும் நிறைவே

5. காமுகர் கபடக் காஞ்சனப் பேயர்
தீமுகர் நாஸ்திகத் தீச்சுடர் வம்பர்
நான்முகன் குட்டியே நடுங்கச் செய்தோய்
வாள்விழி காமமும் வாழ்ந்திடா தழியே

6. சுந்தர வேலா சொக்கன் மகனே
கந்தனே இடும்பன் கடம்பன் காத்தோய்
விந்தையாய் என்னுடன் வினையறுத் தாடிடும்
சிந்தையும் மழிந்தவச் சமாதியி லூன்றிடே

---

1. தீவினையை
2. மருகா = மால்மருகனான முருகனே
3. அன்று மன்மதனை எரித்த பரமனுக்கு

15: வள்ளிக்கிழவன் மெட்டு—தாளம்: ஆதி

ஆறுமுகன் வந்த பின்னர் அன்புச்சுனை உள்ளம் எழும்
ஆறுவினை[1] நில்லாத டி......... கிளியே
நாறுமுடல் பாசம் விடு........ கிளியே
ஏறு மயில் ஏறும் குகன் ஏங்கிச் சுந்தரன் வேண்டக் காக்கும்
தாறுமாருய் பிதற்றினுலும் கிளியே
சீறும் குணம் இல்லை யடி.........கிளியே
வேறுதெய்வம் பற்ருய் இனி வெள்ளக்கொடை[2] வேலன் விட்டு
சோறு பொன்னைக் கேளாய டி......... கிளியே
வேறு கரு[3] மாய்க்கத் துதி ....கிளியே
ஆறு கோவில்குளம் தேட அய்யன் பாராய் மெய்யே இது
பாரு உள்ளே யோகம் பற்றி கிளியே
வேறு வழி இல்லை யடி......... கிளியே

---

1. காமக்ரோத ஆறு தீவினைகள்.
2. வெள்ளப்ரவாகம்போல் கொடுப்பவன்
3. மறுபடி இன்னெரு கருவில் புகுந்து பிறப்பதை

---

16. பங்குனி உத்தரப் பண்பு

விளம்பகாலம்

ராகம்: மாய மாளவகௌளா தாளம்: ரூபகம்

1. பொய்க்கடல் கடக்க—பொய்யுல கொழிக்க—
போதனே சுந்தரா—தந்திடு ஞானம்
மெய்க்கடல் மிதக்க—மெய்யுனைப் பற்ற—
மேய்த்தவன் மாடுகள்—மருகனே அருள்புரி

2. அத்புதா பண்டிதா—ஆனந்த மெய்ச்சுகா—
அச்சக்தி வேலனே—அழைக்குறேன் வாவா
எத்தனே நானே—ஏதுமே அறிந்திலேன்
ஏகனே உனைப் பற்றும்—பித்தனுய் செய்திடே

3. ஆனந்தத் தாண்டவன்—ஆண்டஎன் பழனியா—
அருளுந்தன் எல்லை—அறிந்தவர் யாரோ
நானந்தக் கருணையால்—நசிந்திடா பாபங்கள்
நரகத்து மிலையென—நன்கறிந்தேனே

4. இந்திர தேவர்--இன்னல் அகற்ற
இகத்தினில் பிறந்தாய்—என்னேநின் கருணை
தந்திரம் மந்திரம்—தாங்கினல் போதுமோ
தாள் பற்றச் சுத்தம்—தாங்கிடா வரையில்

5. ஈசனே முருகனே—ஈகையே உளமானேய்
ஈன்றிடு சமாதி—எண்ணங்க ளழித்து
தாசனுன் சுந்தரன்—தாங்கிக்கா இகந்தனில்
தந்தையே அன்னையா—தஞ்சமே தஞ்சம்

6. உய்விக்க வந்தோய்—உலகங்கள் ஆள்வோய்
உயிரும் உடலும்—உள்ளமும் நீயே
தெய்வமே வள்ளி—தேவயானை பற்றி
தேவரைக் காத்த எவ்—சேவற் கொடியா

7. ஊதுராய் சங்கை—ஊன்றிடத் துறவில்
உள்ளமும் புறமும்—உனதாக்கி அருள
போதும் போதுமையே—புதைந்ததும் சூழிசுகம்
புத்தனே பண்டிதா—புதைகுறேன் நின்னடி

8. எந்தையே ஷண்முகா—ஏனினும் தாமதம்
ஏழையான் சுந்தரன்—என்னுள் வாவா
குண்டலம் கோவணம்—குழந்தையாய் உருக்கொண்டு
கொஞ்சுரா யழைத்துக்—கும்பிடா என்னை

9. ஏகனே நாதனே—எங்கெங்கும் நிறைந்தவா
எத்துதி விடுப்பேன்—ஏதுமே அறிகிலேன்
போகவே மாயை—புங்கவர் காணுஉனை
போதமாய் காண்கிறேன்--புதைந்தே வானந்தம்

10. ஐயம் திரிபுடி—அகற்றினய் அருளால்
ஐயனே பேதையான்—அதற்கெதைத் தருவேன்
பையனய் சின்மயா—னந்தனய் லோலனய்
பையவந் தெனை யாட்டும்—கைலயா பணிந்தேன்

11. ஒன்ருய்ப் பலவாய்—ஒருமையின் அறிவாய்
ஒலிஒளி கடந்தஎன்—ஓபர ப்ரம்மமே
நிற்குருய் என்னுள்—நிராகார மெய்யாய்
நினைவறுத் துளம்மேவி—நித்திய குஹனே

12. ஓய்கார பண்டிதா—ஓதினாய் சிவனுக்கு
ஓமென்ற அட்சரம்—உருவில் சிறுவனாகி
திம்தட தகிர்திமி—தித்திமி தத்தோம்
தில்லையாள் நடனனும்—திகைத்தனே களியால்

13. ஔவையார் பெரியார்—அறிவுயர் துறவர்
அறியலா முன்னடி—அறிவேனா நானே
கௌவி இம்மூடனை—காக்குமப் பூனைபோல்
காத்திடு கந்தா—கௌஸ்துபன் மருகா

14. அஃகம் தெளிந்தகல்—அறிவன் நானல்ல
அருளே நினன்—றறிந்தேன் போதும்
துக்கமு மில்லை—தூக்கமு மில்லை
துரியமும் கடக்க—சித்தம்போல் செய்கந்தா

15. கந்தனே வேலனே—கடம்பனே இடும்பனே
காந்தளன் கருணனே—கடிதுடன் வாவா

16. காத்திடும் பணியோனே—கார்த்தி கேயனே
காலனை அழிப்பவா—காமத்தை அழித்திடே

17. கின்னரர் மாதவர்—எட்டலா முன்னை
கிட்டினாய் எனக்கேன்—தவமிலாக் கோழை

18. கீரனும் புகழ்ந்தான்—கீதையோன் மருகா
கிணரிகம் வீழ்ந்தநான்—துதிப்பது மெங்கோ

19. குமரனே குருபரா—குஞ்சர முகத்தோனின்
குதித்தாடும் இளையோனே—குஹனே வாவா

20. கூப்பினான் கைகள்—குதிக்குறேன் களியால்
கூவியே முருகா—கோபிக்கா துளம்வா

21. கெட்டரே மாதரால்—கெட்டரே மாதர்கள்
கேடழி குஹாஉன்னை—கேட்காதே தஞ்சம்

22. கேட்குறார் வரங்கள்—கேட்காதுன் னருளை
கேட்டுமே பிறக்கிறார்—கெடுத்திட இகசுகம்

23. கைகளால் பன்னிரு—காக்குமக் கருணையை
கைலையான் மகனே—களிகொண் டெறிகுறாய்

24. கொண்டிடா திவ்வருள்—கோறிடா துன்சுகம்
குனிகுறார் பலதரம்—கோறியே புகழ்தனம்

25. கோறிடா தெந்தனை—குழ்பொருள் சிறுசுகம்
கூவிட உன்பெயர்—குகனே விதித்திடு

26. கௌரவத் தியரை—வேருடன் அழித்தஎன்
கௌஸ்துப தாரியின்—மருகனே சரணம்

27. நப்போல் வளைந்துந்தன்—அருளுக் கிணங்கியே
பொம்மையாய் ஆடிட—விதித்திடே வேலா

28. "நா"வரைந் தறியேன்—"கா"ஒலித் தறியேன்
"நா"என் "கா"என்—கண்டபின் குகா உனை

29. சஞ்சல மழிப்பவா—சம்புவின் குமாரனே
சலிக்கச் செய் இகசுகம்—சந்திர முகத்தோனே

30. சத்துச் சித்தனே—சரவண பவனே
சங்கரி களியனே—ஷண்முகா வாவா

31. சாதுக்கள் காவலா—சாமியின் நாதனே
சாஸ்திரம் ஒலித்திடும்—சுப்ரம் மண்யா

32. சாகா வரம்தா—பிறவா வரம்தா
சதா னந்தம்தா—சரண்சரண் கந்தனே

33. சித்திகள் வேண்டேன்—சித்தநின் னருள்தா
சித்தச் சுத்தமே—சித்பரம் குகனே

34. சினந்திடா தென்பிழை—சிரித்துடன் மறந்திடு
சின்மயா னந்தா—வள்ளியின் நாதா

35. சிவசிவ சுந்தர—சிதம்பர அம்பலன்
சித்தக் களியா—குருபர மணியா

36. சிந்தனை வெல்லுமச்—சித்பர மோனம்
சித்தனே ஷண்முகா—சிரித்தரு ளின்றே

37. சிலிர்க்குதென் மெய்யும்—ஒலிக்கஉன் குரலும்
சிந்தனை அழிகுது—சீலனே வேலனே

38. சித்தத்தை சொக்குது—சித்தஉன் சுகம்,என்
சித்தமும் உனதாக—சிதைவதேன் முருகா

39. சீறிடும் பாம்பை—மிதித்த அம்மயில்மேல்
சிதைக்கும் மறுவினை—சித்திவேல் கொண்டவா

40. சுற்றிடும் சிந்தையை—சுத்தத்தா லழித்து
சுகமுனைப் பெறஅருள்—சுப்ரம் மண்யனே

41. சுந்தரன் குஹனே—குஹனுளம் சுந்தரன்
சுந்தரா குஹனே—வேறென் றுளேனும்

42. சூரன் பதுமன்—சுத்தரின் நாசரை
சூதாலு மழித்தாய்—சூரனே மணியா

43. சூதிவர் வம்பரின்—சூடிக நெருப்பை
சுட்டுநீ காத்திடு—சுந்தர வேலா

44. செய்திடா தெத்தவம்—சேர்ந்தே னுன்னடி
செய்வதேன் குஹனே—என் செயலுனதாக

45. செய்யேன் வினைகள்—செய்யேன் பணிகள்
செய்வேன்புக ழொன்றே—சேர்ந்திட கந்தா

46. செப்பினேன் செய்என்றே—செயலுனைப் பற்றவே
செப்பியும் செவிடானார்—செய்வதென் முருகா

47. செத்தஇச் ஜகத்தை—ஜடமென் றுணரார்
செய்தலங் காரம்—சேவிக்கும் விந்தையார்

48. சேவற்கொடியா—செப்புவே னெங்கோ
சேவியார் சாமினை—மடமையை முருகா

49. சேர்ந்தேன் சேர்ந்தேன்—சேவித்தே உன்னடி
செயல்மன மழித்தாய்—சரவண பவனே

50. சைவனே குமரனே—சராசர நாதனே
சைவநின் கருணைக்கே—அடிமையா னடிமை

51. சொக்கன் திரிபுரம்—எரித்தவன் குமரா
சோதியர் வானவர்—சுகப்பெரு நிதியே

52. சோதித்தேன் சிந்தை—ஜோதியா யுனைக்கண்டேன்
சுகம்தரும் வேறெதும்—கண்டிலேன் கந்தா

53. சௌந்தர பாண்டிய—சுந்தரி மாதுரி
சுகக்களி குமரா—சுந்தரன் காவா

54. ஞானியாய் நிலைக்க—ஞான ஓபண்டிதா
ஞாதா ஞேயத்—திரிபுடி அழித்திடு

55. டங்காவை அடித்து—டமருவை ஒலித்து
டடபல ஓசையால்—எட்டிடார் குஹனே

56. தஞ்சம்நீ கந்தா—தந்தையும் நீயே
தாயாயும் அணைந்தருள்—தாண்டவன் குமரா

57. தண்டம்கை கொண்டாய்—வேலதைத் துறவனாய்
தயைக்கடல் பொங்கும்—பழனிமா மலையா

58. தாரகன் வதைக்க—குமரனாய் வந்த
தத்பரம் பொருளே—தயைஉந்தன் என்னே

59. தாவியே புலன்கிளை—தகிக்கும்இம் மனத்தை
தாண்டவே வினைக்கடல்—தகர்த்தழி மணியா

60. திகைக்குதே ஐயோ—தீஇகர் சேர்க்கை
தீதிதை என்றே—தினைப்புனு அழிப்பாய்

61. திருடிஞய் என்மனம்—திசைஎங்கும் காண்குருய்
திருட்டுஅக் கோகுலன்—தீதெரி மருகா

62, திரிந்தேன் உனைக்காண—தினம்பல தலங்கள்
திதிலா ருளத்துளே—திருகுஹா நின்ருய்

63. திண்டேன் இனிநான்—திருமுகம் மறைப்பதை
தீண்டினேன் உன்தாள்—தில்லையா குமரா

64. துதித்துனை என்றும்—துதிகளும் வரைந்து
துறவனுய் அயர—விதித்திடே மயிலா

65. தூண்டினுய் என்னை—இகம்பிற என்றே
தூயனே ஷண்முகா—மறத்தலேன் இப்போ

66. தென்திசைக் கோன்எனை—தேடியே வருமுன்
தேவாதி தேவா—கந்தனே வந்தருள்

67. தெக்ஷிண திக்கை—நோக்கிநில் மோன
தெக்ஷிண மூர்த்தனச்—சிவன்மகா சரணம்

68. தெவிட்டாத் தேனே—திஞ்சுவை நீரே
தெம்பளி அமுதே—தேவரின் தலைவா

69. தேவரேஎன் செய்தார்—தேவரே உனைப்பெற
தேவரீர் குஹாசொல்—ஏனெனை மறந்தீர்

70. தையலர் இருவராம்—துறவெனும் சுத்தரை
தைவனே மணியா—கொண்டாய் களியாய்

71. தொங்கும் மண்டலம்—தாவிநீ பாலனுய்
தாயனே ஆடினுய்—குஹ சக்தி என்னே

72. தோன்றிடு மிகப்பொருள்—தோன்றிடா தென்னுளம்
தோன்றிநீ முருகா—தூயதாய் செய்யே

73. நம்பினேர் தெய்வமே—நலனிலார் காலனே
நாரணன் மருகா—நமோ நமோ

74. நஞ்சுண்ட கண்டன்—நம்பிய சாமியே
நான்முகன் குட்டியோய்—நமோ நமோ

75. நானெனும் நீஎனும்—நலன்குறை பிளவை
நற்பெரு போதத்தால்—நசித்திடு ஐயனே

76. நாமமே நற்சுகம்—நற்சுகம் நாமமே
நாமம்நீ முக்தி—சுப்ரம் மண்யம்

77. நின்றார் வேள்வி—நினைவறத் துள்ளம்
நிற்பார் உன்னடி—நிராகார குகனே

78. நிர்மல சுமங்கள—நித்யா னந்தா
நிச்சல முருகா—நினைந்தேன் வாவா

79. நீரா யோடுதே—அருள்நீர் கண்ணில்
நினைந்துளம் கரைந்தால்—கதிர்காமப் பரனே

80. நுட்பமா யணுவில்—நூறும் அண்டங்கள்
நுழைந்தவை ஆள்வோய்—சக்தித் ஸ்கந்தா

81. நூல்களைப் படித்துமே—அறிந்தவர் யாரோ
நூதன மோகன—பலமுக உருவா

82. நெற்றிக் கண்ணால்—நெறி இலா ரழிப்பவன்
நற்கனல் பிறந்தனன்—அமரேசா குமரா

83. நேரு தென்றும்—நீமறந் திரிநில்
நெறிவழி காட்டும்—ஷண்முகா னந்தா

84. நைவே தனமாக—அறுவினை ஆசைகள்
நுட்பத்தில் படைத்தேன்—எற்றுக்கா மணியா

85. நொந்துளம் வெந்தெலாம்—நோவை அடைந்தேன்
நெருங்கிடா தகற்றையர்—விலக்கிடு கந்தா

86. நோற்பதென் நோம்பு—நூல்களை அறியான்
நொந்தே கதறுறேன்—தோன்றிடு முருகா

87. பற்றதால் பட்டேன்—பிறந்திறந் திகத்தில்
பற்றறு முருகா—பரசுகம் தந்தே

88. பந்தம் மனதே—பற்றே பந்தம்
பற்றுள மனததோ—பற்றிடும் குஹ உனை

89. பஞ்சம் கொடுமைகள்—பாரதை வாட்டுதே
பரசிவன் குமரா—படுத்திடா திவைஅழி

90. பாதம் தந்திடு—பக்திமை யூட்டிடு
பாலனே ஸ்கந்தா—பகரொணா ஒளியே

91. பார்த்து நிற்பது—படுவினை கடனை
பார்வதி சேயா—பங்கமன் னருளுக்கு

92. பித்தனைப் பேணிப்—பிணைந்துநான் உன்னடி
பித்தனின் குருபரா—பிழைத்திட அருளிடு

93. பீழை சதைகார்—பிணஉடல் பாசம்
பிரிந்துடன் ஓட—வேலனே விரைந்தருள்

94. புங்கவர் மெய்யே—புனிதரின் கனியே
புத்தனே கந்தனே—சரணம் சரணம்

95. புணையாய் துறவரு—பழனியின் ஆண்டியே
புவியிலே பக்தரும்—துறவா லுய்யவே

96. பெற்றதால் பொருள்புகழ்—பெருவரோ நின்னருள்
பெற்றால் துறவை—பெருவரே ஷண்முகா

97. பேறுதற் கெளிதே—பெற்றபின் சுத்தம்
பேய்மன தடங்கும்—பெறுவேன் குறைஉன்னை

98. பையனாய் வந்தாய்—பையவே புகுந்தாய்
பையா நானுனை—பிரியா திருந்திடு

99. பொன்மணி பாதா—பொன்னுடல் நாதா
பொய்யுலகி லென்னை—போற்றிகா கந்தா

100. போத மாயுன்னருள்—பொங்குதே யெங்கும்
புகைந்திதுள் கரைவதும் என்றோ மணியா

101. பௌர்ணமி கண்டேன்—புனிதநின் முகத்தில்
புகழுவே இயலுமோ—திருஒளி மலையா

102. மருகனே மயிலனே—மலர்ந்து உள்ளத்தா
மத்சரம் மதமும்—மாய்த்திடே முருகா

103. மாளா பிறவா—மாவருள் மருந்தை
மக்குறா வழங்கிடு—மாயையால் வாடுறேன்

104. மிதித்தழி வல்வினை—மீட்டிடு சுந்தரன்
மீனைவ் குமரா—முன்பின் அற்றவா

105. முத்திடு அழகனே—முருகனே காங்கேயா
முத்தணி பாலனாய்—போத்திளம் கண்கள்

106. யக்ஞம் தவங்கள்—யாதுமே அறியேன்
யதுகுலன் மருகா—கருணையால் காவா

107. விலையில்லா மாணிக்க—விண்ணொளி கனியே
வினைவிதி அழியே—வீரனே மணியா

108. ஷண்முக சுந்தரா—சச்சிதா னந்தா
சரவண பவனே—சரணம் சரணம்.

17. ராகம்—செஞ்சுருட்டி. தாளம்: ஜம்பை

1. அன்புச் சுகமலை இவன் அச்சம் ஒழிபயல்[1] மணி
சிந்தைப் பொருளொளிர் குகன் சித்தர் துறவிகக்களி
சுந்தர குருபர சிவம் எட்டிப்பிடி பிறைமுகன்
தவத்தாலே

2. துன்பப் பனிமலை கரை துட்டர் அழிதணல் நலன்
எந்தன் இருளொழி சுடர் எங்கும் நிறைஒளி பொருள்
கந்தன் சிவசதி மகன் காணப்பெறு உடன்பெரும்
தவத்தாலே

3. வந்தன் பிணையளி கிரி[2] வள்ளிச்சுகபதி, அரன்
தந்தப் பொறிபிணை உடல் தஞ்சத் திருவடி தரும்
இந்தப் பலமுக வறும்[3] ஈடற்றுரு பெறுநிலை[4] தவத்தாலே
4. எட்டுப் படிதினம் மறக் கெட்டாத் தவமிது பணிக்[5]
கிட்டாச் சுகத்துற[6] வுறக் கிட்டும் சரவண பவன்
பட்சத் துடனென துளம் பண்டைத் தவபயனதால்
புகுந்தானே

---

1. பாலன்
2. கிரியான் 3. ஆறுமுகன் 4. நீடித்து நிலைக்கும்
5. பணிக்குக் (கிட்டான்) தான தர்மாதி ஆடல் பாடலுக்கு மட்டும்
6. இந்திரிய சுக

---

18. யோகவேல்

ராகம்: புன்னாகவராளி தாளம்: ஆதி (துரிதநடை)

(லகு) பல்லவி (துரிதம்)

வேல்வேலே சக்திவேலே—சித்தத்துள்ளே முக்திக்கென்றே
வேல்வேலே முருகன்வேலே—ஆடுவேலே......

அநுபல்லவி

ஆடுவேலே சுந்தரன்—கொண்டாடும் வேலே
விடுவேலே உன்னை—வீசும் கந்தன் வேலே

சரணம்

நால்வயதுரு பால்மணச் சிறுவன்—நாகாபரணன் பற்றிய குருபரன்
கால் வலிபாராதோடி வந்த—கண்டிக் குகனை ஆடுவேலே
நால்திசை முக்குண அண்டசராசரம்—நான் முகன் படைக்கும்
அன்னை அடங்கிய
மால் திரு மருகன் எந்திகாத்த—மயிலுக்கை லன்யோகவேலே

ஆறும் பாகம்.

சுந்தரக் குறள்

முத்தி விளக்கம்.

நிச்சலனர்[1] நீள்நினைவில்[2] நின்றெழும் நீலகண்ட
நற்சிவனர் சேயோனீ நாடு.

1. கஞ்சலமற்றோருடைய. 2. நெடிது ஆழ்ந்த தியானத்தில்.

எந்த னிறைவன் ஏகம்ப நாதன்றன் குமரன்
வெந்த மனமாற்றி வெற்றி வேல்முருகன், வேண்ட,
கந்தன் காத்திடும் கருணை யுயர்குன்றிற் கரசன்,
சிந்தை யழித்துச் சிவமாக்கி யாண்டானே சோதி.

---

1. நீதி நெறி.

2. வாயாற் சுடுவன வாடாவே தீருமாம்
நோயாலே சுட்ட வடு.

3. இகழ்ந்தோர் உலகில் இழிவார், அரனைப்
புகழ்ந்தோர் இழியார் புரி.[1]

1. அரனைப்புகழ்.

4. அன்பும் அருளதுவும் ஆறுமுகன் தானளிக்க
இன்பம் பெறுவாய் எழு.

5. அரனை யறிந்தே, அறத்தால் உயரப்
பரனைப் பிடித்துப்[1] பணி.[2]

1. மனத்தில் பற்றி. 2. சரணடை.

6. என்னைப் பழித்தால் எனக்கேனோ கோபமது,
உன்னைப் பழிப்பதா ஓர்.[1]

1. ஆராய்ந்து சொல்.

7. அழிப்பார் அகிலம் அசுரர் அழிவார்
அழியார் அறிஞர் அறி.

8. அரனை மறந்தார் அறத்தை மறப்பார்.
புரமெரித் தோனுட் புகு.

9. நல்லா[1] ரிணையவே,[2] நட்பு[3] வழியதற்கு[4]
சொல்லாச்[5] சுகம்தருஞ்சோ தி.[6]

1. சாதுக்களின். 2. சங்கம் பெற. 3. அதனல் உண்டாகும் நேசம். 4. பரம்பெறும் வழிக்கு. 5. சொல்ல முடிதாத, அன்பு கடந்த 6. வழி விளக்கும், இருள் நீக்கும் ஜோதி.

10. பற்றுரு[1] பற்றிப் படுபவர்[2] பேதைகள்[5]
சுற்றும்[3] விலங்கிலும்,[4] கீழ்.

1. சிற்றின்பம் பொருள் உருவங்கள். 2, மனம் சிதறுபவர்கள், கஷடப்படுவோர். 5. பகுத்தறிவற்ற கீழோர் ஆவர். 3. உலகில் சுற்றித் திரியும். 4. மிருகத்தைக் காட்டிலும்.

11. பற்றுர்[1] பிடியார்[2] பரமும் சுகமதும்
பற்றுல்[3] சிதைந்தவர்[4] பார்.

1. பற்றுர் சுகம், 2. எட்டார் பரம். 3. ஆசையால். 4. அழிப் பட்டவர்.

12. அருள்பற்ற ஆடுமே ஆனந்தம், பாச
இருள்பற்ற ஏங்கும் உயிர்.

13. அழகுறின் உள்ளத் தழகுறு, நில்லா[1]
அழகே புறத்தழகு[2] தேர்.

1. நிலையற்ற, இன்பத்திற்கு இடமாகாத. 2. வெளித் தோற்ற அழகு, தோலழகு.

14. பொருள்திரண் டுற்றதாம் போதக்குறள்[1] வெண்பா
இருளகற்று[2] யாப்பல்ல[3] ஈது.

1. உயர் ஞானம், அறிவு ஊட்டும் குறள். 2. அருள் அளித்த அர்த்தப் பெருக்கால், இருளகற்றும் திறம் அகன்ற. 3, இலக்கணப் பெருமையல்ல.

---

2. மனம்.

15. ஓயாதே ஓடி, ஒழிக்குமாம் என்றுமே
மாயாது மாய்க்கும்[1] மனம்.

1. தானழியாது ஜீவனை அழிக்கும்.

16. இதயத்து நின்று சுகத்தைப் பெறவே
இதயத்தில் பாசத்தைக் கொல்லு

17. படியா தொழியா தழுத்தும் மனது
மடியா மதமாய் மாய்க்கும்.

18. மாந்தர் மனமது மாறி அழிக்குமே,
வேந்தர் மனது மது,

19. மாந்தர் மனமது மாறிப் பழிப்பதே,
சாந்தர் மனமது வேறு.

20. பாசம் படரப் படுவாய் மனமேநீ
மோசம் படுமுன் முனி.[1]

1. பாசத்தை வெறுத்தறு.

21. பற்றுள் மனது பரமெட் டிடத்தடை
பற்றற் றமனமதே பண்பு.

CONNEMARA ... 12 DEC 1955 MADRAS

3. பக்தி.

22. பதமே பெரிதாய்ப் பொழிவீர் பரனின்
விதமே தெரியா விடில்.

23. ஈசன் உருவம் இதயத்திற் பற்றவே
தாசரின் நேசம் தழுவு.

24. அரனார் அறிய அறமே புரிய
பரனார் பெயரையே பற்று.

25. கருணைதான் காக்கும், கலங்கிடா தேகதி,
கருணை பொடிக்கும் கரு.[1]

1. பிறவிக் குரிய வித்தை.

26. குமரன் குகனின் குணமே மொழிய
அமரர் இசைக்கு மரிது.

27. அழியும், பழியும்[1] அளகே சனுறவும்,
விழியும், வழியால் விடு.

1. பழிப்பும்.

28. முருகநீ முத்தி கொடாது மேய்க்க[1]
உருகா[2] உளமா உனது?

1. உலகில் இந்திரியங்களுக்கு அடிமையாக்கி ஆடுபோல் மேய்க்க.
2. முக்திகொடுக்க இசையாத கருணை யற்ற மனமா உனது.

29. வாயாடி வக்கீலும் வென்றான் வினையதைப்
பேயாடிச்[1] சேயன்[2] பிடித்து[3]

1. சிவனின். 2. குமரன் (முருகன்) 3. துதி பிடித்து.

30. பணத்தால் எதற்குப் பிணக்கு,[1] பண்பேறக்[2]
கணமும் விடாது கதறு.[3]

1. பணம் கிடைக்கவில்லை என்ற தாபம், வருத்தம். 2. சுக மடைய.
3. கடவுளை நினைத்துக் கதறு.

31. கண்ணும் கருத்தும்நீ காளிக் களித்திட்டு
மண்ணில் சுகம்பெறு, மாண்.[1]

1. மாட்சிமையடை.

32. குருவின்றிக் கோன்குகனைக்[1] காண்ப தரிதே !
எருவின்றி[2] ஆழ்ந்துநீ[3] உய்[4]

1. இதயகுகை வாசனை, ஆகார, நிராகார பிரணவஸ்வரூபனை-முருகனை. 2. நாமரூபப்ரபஞ்சம் திரும்பபடி. 3. குருபெற்று, சமாதியில் ஆழ்ந்து. 4. குகனைப்பற்றி முக்தியடை.

33. பலவாகப்[3] போகும்[4] பயன்தரும்[1] பக்தி[2]
பலன்பெறச்[5] சற்குருவைப்[6] பற்று.[7]

1. பேரின்பப் பலன் கொடுக்கும். 2. ப்ரேமரச பாவம். 3. பணி பூஜை கூத்து முதலிய வெளிச் செயல்களில். 4. 'பாவனை' ஒழுகி விடுகிறது ; குறைகிறது. 5. பக்தியால், சாரூப சாமீப சாயுஜ்யம் பெற. 6. மூர்த்தியை, நிரந்தர பக்தி யோகத்தால், ப்ரத்யக்ஷமாய் இதயத்தில் கண்டு களிப்பதற்கு வழி காட்டியான குருவை, 7. தேடிப்பிடி.

34. அருள்பெற[1] ஏதுவழி, அஃதருள்கோ[2] னின்றி ?
அருந்தவம்பு[3] ரிந்தே அடை.[4]

1. கடவுளைப் ப்ரத்யக்ஷமாய்க் காண. 2. கருணையால் இஷ்டத்தைப் பூர்த்திசெய்யும் குரு. 3. தீவிரமாய்த் தேடி, வேண்டி, நியம நிஷ்டைகள் செய்து, துதித்து. 4. பெறு (அப்பொழுதுதான் கிடைப்பான் அப்படித்தான் பெறமுடியும்).

35. விதித்ததை[1] மாற்ற[2] விழிப்பதேன்[1] வீணாய்,[3]
துதித்ததை மாற்றித் தொலை.

36. விதியைத் துதியால் விரைவிலே வெல்ல
மதியை[1] விரைவினில் மாய்.

1. மனதை.

37. விதியும் வினையுமே வீழ்த்திட, வெல்லுந்
துதியைத் துரிதம் பிடி.

38. ஈசன் அருளை இரந்தே அடையவும்
தாசன் துதியைப் பிடி.

39. துதியே கலியில் துறக்க வழியாம்,
மதியே பறவா திரு.

40. மனததின் கூத்து மனிதனை மாய்க்கும்,
எனப்பன்[1] துதியால் எரி.

1. என் அப்பன்.

41. இன்ப[6] மருந்தாகும்[7] ஈசன்[1] பெயரது[2]
துன்பப்[3] பிறவி[4] தொலைத்து[5]

42. கல்லும் கரையவே பக்தியாற் கத்திடக்
கந்தனா முள்கரை வான்.

43. கண்ணப்பன் காத்த பெரியப்பன் சூலன்றன்
விண்ணப்ப வேலனே வீடு.

44. பையப் புகுந்து டரம்தரு மச்சைவப்
பையனையே மெய்யுறப் பற்று.

---

4. வைராக்கியம்

---

45. விண்ணை விரும்பும் ஓவிராநீ மண்ணினில்
பெண்ணை மறந்து பெறு.

46. இழித்தவன் பிச்சைக் கிழிதேவன் அறம்நில்
விழித்தவன் பிச்சை விரும்பு

47. அழியும் அகில புவனம், காலம்[1]
கழிப்பதா ஆசையில் வெந்து

48. மெய்யதும் பொய்யேயாம் மெய்யை மறந்துநின்
றுய்யும் துதியே உயர்வு.

49. பொருள்கொடை[2] பூரிக்கா[1] போதந்தான்[1] அற்றால்
அருள்கொடை[5] பூரிக்கும் ஆய்.

4. நம்முடைய ஆசையை நிரப்பித் தீர்க்கா?

50. கொடுத்தல்[1] எடுத்தல்[2] குமரன் செயலே
விடுத்தலாம்[3] ஒன்றே விரும்பு.[4]

1. பொருளைக் கொடுப்பதும். 2. பொருளைப் பிடுங்கிக் கொள்வதும். 3. அகப்புறத்துறவு. 4. பெற முயலா 'எனது, நான் கொடுத்தேன், நான் எடுப்பேன்,' என்ற அகந்தை ஒவ்வாது. ஈசனே படைத்தழிக்கும் பலவானாதலால், இவை அவன் செயல், தனதொன்றுமில்லை. எனவே வைராக்கியம், அகப்புறத்துறவே விரும்பத்தக்கது. இதுவே தன் செயலென்று பெருமை கொள்ள இடம் கொடுக்கும்.

51. பொன்னைப் பிடித்தவர் பெண்ணைப் பிடிப்பாரே
பொன்னம்ப லர்பிடியார் காண்

52. இன்பக் கடலாவான் ஈசனே ஐம்புலனும்
துன்பக் கடலினைத் தாண்டு.

53. தந்தை மறைந்திடில்[1] தாய்நினைந் துள்ளத்துள்[2]
தந்தையொடு[3] தாயையும் தேடு.

1. இறந்தால். 2. மனதைத் தேற்றிக் கொண்டு பின் இதயத்திலே. 3. அப்பனும் அம்மையுமான கடவுளைத் தேடு.

54. தாய்மறைந்தால் தந்தை நினைந்தே இதயத்துள்
தாய்தந்தை யாவானைத் தேடு.

55. இருவரு[1] மேமறைந்தால்[2] கூட்ட றுக்க[3] இன்பக்
கருவறும்[4] ஒன்றிற்[5] கல.

1. உடலளித்த தாய்தந்தை இருவரும் இறந்தால், வெறுத்தால். 3. மிகுதியாகி மனதில் பற்றும் சுற்றத்தார் பாசமும் அறுக்க. 4. பிறப்பு அறும். 5. அறிவாய் இதயத்தில் விளங்கும் ஒருருவுடன் கடவுளுடன்.

56. பிறர்கொடுப்ப தில்லை பிறந்திறக்கா ஆறு[1]
புறம்துறந்[2] துள்ளம்[3] புகு.

1. முக்திநிலை. 2, புறத்தில், வெளியில் தோன்றும் பிரபஞ்சத்தைத் துறந்து, வெறுத்து—முற்றிலும் அகற்றி. 3. இதயத்திலேயே. இதயத்தில் தோன்றி நிற்கும் ஆத்மாவையே (விடாது).

57. சித்துரு[1] பற்றச் சிதறுது மனமும்,
மற்றுரு[2] பற்றிடின்[3] மாள்[4]

1. கடவுளின் சிதானந்த உருவம். 2. அழியும் உலகப்பொருளின் உருவம், பாசம். 3. பற்றினால், பாசத்தால் பிடித்தால். 4. அமரநிலை அடையாது, இறப்பதே முடிவு.

58. பதைக்கப் பதைக்கவே பாடுபட்டு பற்ற
வதைக்குஞ்சிற் றின்ப வழி.

59. சிதைந்தார்[3] இறந்தாரே[4] ஐம்புலன்[1] பற்றி[2]
வதைத்து[6] வினையை[5] வாழு[7]

60. பின்னரும் மண்ணில் பிறப்பா இறந்திறந்
தென்றும்[1] உனைப்பிடிக்க ஏது.[2]

1. சர்வதா இடைவடாது. 2. இறந்திறந்து பிறப்பது ஏது

61. மற்றுரு[1] வைஅழிக்க உள்ளத்தில் சோதியாய்
சித்துரு[2] நில்லாதா சொல்.

1. வேறு பாச உருவங்கள். 2. கடவுளுரு.

62. பற்றுரு வையகற்றிப் பாசம் அறுத்திட்டுச்
சித்துரு சிந்தையிற்[1] காண்.

1. சிந்தையில், உள்ளத்தில்.

63. வேண்டேனே[1] பெண்ணைக்[2] குமரனே தொட்டுதொட்டு
மாண்டேன்[3] எதற்கிம்[4] மதி.[5]

1. விரும்பமாட்டேன். 2. பெண்சுகத்தை. 3. அறிவிற்கு, பேரின்பத்திற்கு விழியாமனதால் பல சென்மங்கள் எடுத்து உடலழிந்தேன். 4, 5: மறுபடியும் பெண்சுகம் நாடும். மனம் எதற்கு.

64. பொன்னைநீ[3] பற்றின்[4] பொறுப்பது[1] மீறியே[2]
பொன்னுடலான் காணாய்[5] விழி.[6]

1. தன் குடும்பத்தைக் காக்கும் பொறுப்பிற்கு. 2. அதிகமாக. 3. திரவியத்தை. 4. சேகரித்தால். 5. பொன்னம்பலவனைக் காண மாட்டாய். 6. முமுக்ஷுவே பொன்னம்பலவனைக் தேடிப்போ. அவசியம் மீறி பணவேட்டை ஆடினுல் பணப்பாசம் பற்றிக் கொள்ளும் எச்சரிக்கையாயிரு.

65. மன்னனு மாபெரியான்? கந்தன் னடியார்க்கும்,
இன்னல் வரினுமே.இல்.

66. புறத்துறவைப்[1] பற்றும், புலனழிய உய்வீர்,
மறப்பதே[2] ஈன மதி.[3]

1. சந்நியாசம் வானப்ரஸ்தம் கொள்வதை. 2. இவ்வுண்மையை புறத்துறவின் அவஸ்யத்தை மறப்பது. 3. புத்தியீனம். ஈனமதியாகும்.

67. அகத்துற விற்கடிக்[1] கல்லாம்[2] புறமே*
அகத்துறவின் றேலஃ தடை§

* புறத்துறவு. § அகத்துறவு + இன்றேல் + அஃது + அடை. அகத்துறவில்லையாயின் புறத்துறவை அடைவாயாக.

1, 2: அடிப்படையான அஸ்திவாரக் கல்லாம்.

68. அடக்குக ஐம்புலன் ஆய்யன் அருளால்
மடக்கித்[1] தவத்தால்நீ[2] மாறு[3]

1. கால்மடக்கி, அசையாது ஓரிடம் உட்கார்ந்து. 2 ஈஸ்வரத் தியானத்தால் 3. போக வாழ்க்கையிலிருந்து பக்தி வாழ்க்கைக்கு மாறு.

69. கணச்சுகம்[4] ஐம்புலன்[3] கண்டோர்[6] களியார்[7]
பணச்சுகம்[1] பெண்சுகம்[2] உற்று.[5]

3. புலன் சுகம். 5. பற்றிப் பொருந்தி. 6. அருள் திருவடி கண்டவர்.

70. காவியைக்[3] கொள்வார்[4] கலங்காத[1] நெஞ்சர்தான்
பாவியர்[5] கொள்வார் வேஷம்.[6]

1. உலகப் பொருளால், இன்பங்களைக் கண்டு கலங்காத மயங்காத நெஞ்சுடைய தீரபுருஷர். 3, 4 : காவிபூண்டு சந்நியாசம் கொள்வார்; புறத்துறவும் பூண்பர். 5. போலிகள், சோப்பேறிகள். 6, 7 : தாமும், துறவிகள் போல் வேஷக்காவி தரித்து உலகை ஏமாற்றுவார்.

5. யோகம்

71. தெளிவாய்[1] தினமும் ஒளியின்[2] னுறவில்[3]
ஒளிவாய்க்[4] கலந்தே[5] அறி.[6]

1. சித்தத் தெளிவுடன். 2, 3 : பரம்பொருளில். 4, 5 : ஏகாந்த யோகத்தால் கூடி. 6. ஞானம் பெறு.

72. அகத்தே[3] விழிக்க[4] அழியும்[5] அகந்தை[6]
முகத்ததிற் கெட்டர் முகம்[2]

1. முகக்கண்களுக் கெட்டா. 2. ப்ரம்மஸ்வ ரூபத்திற்கு.
6. " அஹம்! " பாவத்தில் (சுத்த ஜீவத்தன்மையில்).

73. புகழ்தரும் பேச்சு[1] புகுத்தா பரத்தில்
இகமறும் யோகம்[2] இயற்று.[3]

1. பேச்சுத் திறமை. 2, 3 : வாசனைகள் க்ஷயத்தால் உண்டாகும் சமாதியைப் பயிலு.

74. பேச்சில்[1] பயனு பெயர்புகழ்[2] போக்குமா[3]
பேச்சில் சமாதி பெரிது.[4]

1. வித்தை பெருத்த பேச்சுத் திறத்தால். 2. உலகப்ரதாபம்.
3. பிறப்பிறப்பை விடுக்குமா. 4. பேச்சில்லாத மோனமளிக்கும்.

75. பேச்சால் புகழால் பெறுவதொன் றுமில்லை
மூச்சை அழித்து முயலு.

76. வழிக்குதவா வாக்கிவை வாதிக்க வெல்லா[1]
குழிவிடுக்கும்[2] யோகத்தில் கூடு.[3]

1. வினையையும், அவித்தையையும் வெல்லாவே. 2. அடுத்தடுத்துப் பிறக்க ஏற்படும் கருக்குழி தவிர்க்கும். 3. தியானசமாதியில் கல.

77. அகமாழ்ந்து பாராது[1] வேற்றுரு[2] பார்ப்போர்
சுகத்தைப்[3] பெறுவாரோ சொல்.

1. வெளிப்பார்வையை உள்திருப்பி அங்கு தியானம் செய்யாது. 2. வெளியிற் காணப்படும் உலகப் பொருள்களையே. 3 ஆன்ம சுகத்தை.

78. காவியால்[1] மொட்டையால்[2] கூட[3] இயலுமா[4]
காட்டுமே[5] யோகமது[6] காண்[7],

1. காவிதரித்து சந்நியாசியாவதால் மட்டும். 2. மொட்டை யடித்துத் துறவியாவதால் மட்டும். 3. பரம்பொருளில் லயமாக, கரைய, அதுவேயாக. 4. முடியுமா, 5. ஆன்மாவை பிரத்தியக்ஷ மாகக்காட்டும். 6. சமாதி நிரந்தரம் அப்யசித்தலானது. 7. அறி வாயாக.

79. மடம்புகுதல் போதுமா[1] மாயையை மாய்க்க
திடயோகந்[2] தீர்க்குமே தேர்.

1. மடம் ஆச்ரமம் புகுந்து விட்டால் மட்டும் போதுமா; இங்கு சென்றவுடன் எல்லை சேர்ந்ததாக மனப்பால் அருந்துகிறுர்கள். 2. இடைவிடாத, நழுவாத தியானசமாதி அப்பியாசம்.

80. அருள்வார்[1] பெரியார்[2] அருமை[3] குருவாம்[4]
இருளார்[5] ஆகார்[7] இவர்[6].

1. அருளளிப்பவர் ஆகிஅருள் நிறைந்தவர். 2. பேரின்பப் பெரி யார். 3. கருணைவாய்ந்த. 4. குருவாவர். 5. அஞ்ஞான இருள் நிறைந்தவர், கடவுளைக் காணுதவர். 6. இக்குருவாக. 7. ஆக யோக்கியதை அற்றவர்-மாயை இருளகலாத ப்ரம்ம அனுபவமற்ற வரைக் குருவாகக் கொள்ளக்கூடாது—என்ற எச்சரிக்கை.

81. நிட்டையின்றி[1] இன்பம்[2] நிலைக்காது[3] யோகத்தில்[4]
கட்டையாய்[5] நின்று[6] கல[7].

1. நிதித்தியாசனமின்றி. 2. பக்தி விசாரத்தால் கிட்டும்பலன், இன்பம். 3. நம்முடையதாகாது, சதா நிற்காது, 4. தியான சமாதி யில். 5. உடல் உணர்ச்சி இன்றி. 6. சமாதியில் புகுந்து, லயித்து. 7. பேரின்பத்துடன் கரைந்துவிடு. லயமாக—பின், அது பிரிவின்றி உன்னுடையதாகும்.

82. குருநாத னேகொடுப்பா னுன்மக் குவிவு[1]
குருபெற்றுக்[3] காட்டினுன்[4] கோன்[2]

1, மனம் குவிவு; யோகத்தில் ஈடுபடல். 2. பொன்னம்பலம் கூத்தாடும் சிவன். 3. குமரனை ப்ரணவ உபதேசத்திற்கு, குரு வாய் வேண்டி, அடைந்து. 4. குருவின் அவஸ்யத்தை, நரருக்குக் காட்டினுன். சிவனே, குருவை அவசியமென்று வேண்டினுல், நரர் பெற வேண்டு மென்பதில் சந்தேகமில்லை, குருவின்றி உயர்வில்லை எதுவும் சித்தியாகாது.

83. முற்றிய[1] யோகமே[2] முத்தி அளிக்குமாம்
கத்தி[4] மடத்தார்கா[3] ணுர்[5].

1. நிரந்தரம் பயின்று பழுத்த. 2. சவிகல்ப நிர்விகல்ப சமாதியே. 3. மடம், ஆச்ரமம் புகுந்தவர். 4. பிறரறியக் கூவிப் படிப்பதால், பிறருக்குப் பிரசங்கங்கள் செய்வதால். 5. ப்ரம்மத்தை அறியார்.

84. மடத்தில் புகுந்துமாய்[1] மாயையோ[2] கத்தால்[3]
இடத்திலே[5] இல்லையேல்[4] நில்[6].

1, 2, 3: மடத்தில் புகுந்ததும் தியானசமாதி பயின்று மாயையைக் கொல்லு. 4. இதற்குத் தேவையான, போதுமான, சக்தி, சுறுசுறுப்பு யோக்கியதை இல்லாவிடில். 5, 6: இருந்த இடத்திலே, மாயையுடன் குஸ்தி போட்டு, கர்மா இயற்றி, சித்த சுத்தி அடைய, வைராக்கியம் பெற நின்று விடு. பெண்டு பிள்ளை தாய் தந்தை விட்டு, வீணுய் ஓடி, அங்கு யோகமின்றி, சோம்பலில் காலம் கழிக்காதே.

85. மொட்டைக்கு[2] மயங்காது[3] மொத்தலற்ருல்[4] மாயைகாண்[1]
மொட்டைவெளி[5] யோகத்தால்[6] மொத்து[7]

2. மொட்டையடித்து சந்நியாசியும் துறவியும் ஆனுல் மட்டும் அதாவது புறத்துறவு அல்லது பரிவ்ராஜகஸ்திதியால் மட்டும். 3. மாயை ஏமாந்து ஜீவனை விட்டு விலகாது. 4. சத்தரிசனத்தால் கிட்டும் பலத்தால் உடைத்தெரியாவிடில். 5. நாமரூபமற்ற அகண்ட நிராகார 6. பிரம்மத்தியான சவிகல்ப நிர்விகல்ப சமாதி பயின்று, பிரம்ம சாக்ஷாத்கார பலத்தால். 7. உடைத்தெறி.

6. ஞானம்.

———o———

86. பேரின்பம் பெற்ற பெரியார் மனமது
வேறின்பம் வேண்டா ததாம்.

87. அழித்தல் அரிதாம் அறியார் மனது,
விழித்தலே[1] வெல்லும் வழி.

1. உண்மைக்கு விழித்தல் தான்,

88. வேதம் விதித்திடும் வெல்வழி யாதெனின்
பேதமறு போதமே பேண்,

89. எழுவாய் அறிவில் எழுவாய் மனமே,
விழுவாய் இருளால், விழி.

90. பிடிப்பவர் என்னைப்[1] பிடிப்பாரே தன்னை.[2]
மடிவோர்[3] பிடிப்பாரே மண்.[4]

1. ஈசனை. 2. ஆத்மாவை. 3. இறப்பில் உழலுபவர்.
4. உலகப் பொருள்கள்.

91. அவனின்றி[1] ஓரணுவும் ஆடா தறிவீர்
இவனின்[2] றிருளாம் இகம்.

1, 2, புறத்தும் அகத்தும் நிற்கும் ஈசன்.

92. குன்றாத[1] செல்வம் குமரன் கொடுத்திடக்
குன்றுமிச்[2] செல்வங்கோ ரார்.

1. குறையாத அருட்செல்வம் 2. நிலையற்ற பொருள் செல்வம்

93, படித்தவனும் மீறிப் பருங்கீதை தேர்ந்தோன்
இடித்தவனு பாழ்மனதை எண்.

94. படித்தால் புகழைப் பெற்றிட்டால் கிட்டா[1]
பொடித்து[3] மனதை[2] பெறு.[4]

1. ஞானமும் பரமும் கிட்டுமா. 2, 3. சம்சாரத்திற்குக் காரண மான மனதை அழித்து. 4. பரத்தைப் பெறு.

95. திக்குத் திசையறத் தித்திப்பாய்[1] நிற்குது[2]
திக்குத் தலமகற்றித்[3] தேடு.

1. ஆனந்தமாய். 2. கடவுள் இருக்கின்றது. 3. எல்லா இடத்திலும் எல்லாவற்றிலும் கடவுளைப் பார்,

96. விண்ணும் அணுகாது கர்மம்[1] பிடியாது
கண்ணுமே[2] காணாது காண்.[3]

1. செயலால் பிடித்து அறிய முடியாது. 2, புறக்கண்களால் காண முடியாது. 3. என்று தெரிந்து கொள். பரம்பிரமம் இவைக்கு மீறியது.

97. வினையைப் பொடித்து விரும்பித்[1] துதித்து
மனையைப்[2] பிடிக்கநீ மாறு.[3]

1. இன்பத்துடன், சிரத்தையாய். 2. முத்தியை. 3. பரவழி பிடிக்க, வாழ்க்கையை மாற்றிக்கொள்.

98. பற்றுரு[2] பற்றிடப்[1] பாபங்கொள் சிந்தைதான்
கற்றும்[3] கிடைக்காதே[4] காண்.[5]

2. ஆசாபாசக் காரண வஸ்துக்கள். 3. சாஸ்திரங்கள் படித்தும்.
4. பரமும் சுகவாழ்க்கையும் கிடைக்காது. 5. என்று அறி.

99. பற்றுரு[1] பற்றியே பாரில் திரிபவர்
சுற்றியும்[2] பற்றார் சுகம்[3]

1. ஆசைப் பொருளுருவங்கள். 2. ஆசை உருவங்களை நாடிச் சுற்றியும். 3. உண்மை நிலைத்த சுகத்தைப் பெறார்.

100. பேதம் அழிந்திடும்[1] போதப்[2] பொருளதை
பேதமற்[3] றான்றிப்[4] பெறு.

1. நீ நான், தத் த்வம் இல்லாதாகிடும். 2. அறிவான (ப்ரம மத்தை). 3. 'அஹம்' அழித்து. 4. நிராகார சமாதியில் நின்று.

101. ஒன்றாம்[1] இரண்டாம்[2] ஒளியும்[3] பலவாமே,[4]
இன்றாம்[5] உருவம் இதற்கு.

1. குணங்கள் கொண்ட ஒரு கடவுளாகவும். 2. சக்தி சிவனாகவும், புருஷப்ரகிருதியாகவும் 3. ஜோதி மயமான ப்ரம்மவஸ்து. 4. பல நாமரூபம் கொண்ட பிரபஞ்சமாகவும்; பக்தர்களுக்கென பல நாம ரூபங்கள் கொண்ட தெய்வங்களாகவும் பிரகாசிக்கின்றது. 5. அகண்டமாகி உருவற்றும் உள்ளது.

102. குமரனைக்[6] கேள்குரு[7] ஈய[5] பிறப்பில்[1]
அமரனாய்[2] ஆக[4] அயர்ந்து.[3]

1, 2. பிறப்பில்லாது இறப்பற்றவனாய். 3. நிராகார சமாதியில், (பிரம மத்துடன் கரைந்து) நழுவாது நின்று. 4. ப்ரம்மமாய் ஆக:

அத்வைதத்தை அடைய. 5. தகுந்த, சகஜத்தில் இருக்கும் குருவைக் கொடுக்க. 6. முருகனை. 7. வேண்டிக்கொள்.

103. எங்கிருந்[3] தாலென்[4] மனது[1] துறந்திடில்,[2]
தங்கியிருந்[5] தால்தான்[6] தயக்கு.[7]

1, 2; அகத்துறவு சித்தியாகிவிட்டால். 3, 4; காட்டில் இருந்தாலென்ன, மடத்தில் சந்நியாசியாகி இருந்தாலென்ன, வீட்டில் கிருகஸ்தன் பேர்ல் வாழ்ந்தாலென்ன. 5, 6. ஆசாபாசங்கள் உளத்தில் தங்கி இருந்தால்தானே, மிகுதியாகி நின்றால்தானே. 7. வீட்டிலிருக்கலாமா காட்டிலிருக்கலாமா, சந்நியாசியாகலாமா. கிருகஸ்தனாக இருக்கலாமா, என்ற கலக்கம், யோசனை ஏற்படும்.

104. துறவை அடைந்தபின் ஓட்டத்[1] தவஞ்செய்[2]
மறந்தால்[3] இழிவாய்[4] மதி.[5]

1. பிறப்பிறப்பைத் தொலைக்க, 2. ப்ரத்யக்ஷ ஆன்ம தரிசனம் பெற ப்ரமத்தியானம், சமாதி பயிலு. 3. தவத்தை மறந்தால்; இதைப் புறக்கணித்தால். 4. துறவு பூண்டும் ஈனஸ்திதி அடைவாய்; அத்துறவே வீணாகும். 5. இந்த உண்மையை மதிப்பாயாக ; கருதுவாயாக.

105. முத்தியைப் பற்ற முயலு. அழிந்திடும்
சித்திகள்[1] பற்ற[2] சிதைவு.[3]

1. அட்டமாசித்திகளை. 2. பிடித்துக் கொண்டாட 3. சிதைவாய்.

106. எத்தைப்[5] பிடிப்பதால்[6] என்னவாம்[7] முத்தியாம்[1]
சொத்ததைப்[2] பற்று[3] விடில்.[4]

1, 2; முத்திப் பொருளை, முத்திநிலையை 3, 4; கைப்பற்றுவிட்டால். 5, 6: வேறு எப்பொருள்களை, எவ்விஷயங்களை அடைவதால், பற்றிக்கொள்வதால். 7. என்ன பயன்.

107. அஞ்சா இதயர் அடைவார் அழிவிலா
மிஞ்சிடும்[1] போதம்[2] அறி.

1. நித்தியப் பொருளாய், எது அழிந்தும், இது அழிவிலா மிகுதியாகும். 2. ப்ரம்மத்தை.

108, மீட்கக் கதறுர் அடைவரா முத்திநீ
கேட்கப் பெறுவாய் களி.[1]

1, இன்பம், சுகம்.

——o——

பஜனை.

ராகம்: இஷ்டம் போல் மெட்டு - தாளம் - ஏகதாளம்

சுப்ரம் மண்யம் சுப்ரம் மண்யம்
சுப்ரம் மண்யம் சுப்ரம் மண்யம் } கோஷ்டி

1 சத்குரு நாதன் சஞ்சல நாசன்
அத்புத மெய்யன் சரவண பவனே—கோஷ்டி

2 நிச்சல போதன் நிர்மல சீலன்
நற்சிவ சேயன் சரவண பவனே—சத்

3 அய்யன் முருகன் அன்புயர் வடிவன்
மெய்யன் குமரன் சரவண பவனே—சத்

4 வள்ளிக் கிழவன் வானவர் தலைவன்
அள்ளித் தருவன் சரவண பவனே—சத்

5 குன்றின் குமரன் குன்று வழகன்
ஒன்ரும் ப்ரணவன் சரவண பவனே—சத்

6 சத்துச் சித்தன் சங்கரி பிரியன்
சித்தக் கள்ளன் சரவண பவனே—சத்

7 அப்பன் அம்மை சுப்பிர மணியன்
கப்பல் கருணை சரவண பவனே—சத்

8 நஞ்சாம் உலகை நெஞ்சில் வழித்தான்
துஞ்சொலி கேட்டுச் சரவண பவனே—சத்

9 அண்டம் ஈன்ற அன்னை சக்தியின்
அண்ணன் மருகன் சரவண பவனே—சத்

10 வென்ருன் சூரன் வேலன் மயிலன்
நின்ருன் உள்ளம் சரவண பவனே—சத்

11 கற்றும் காணுர் கற்பகக் குகனை
சுற்றியும் வீணுய் சரவண பவனே—சத்

12 பற்றழி வழியே பற்றிடும் வழியாம்
பொற்றிரு வடியான் சரவண பவனை—சத்

13 நற்ருெழில் புரியார் நன்ருய்ப் பணியார்
கத்தியும் எட்டார் சரவண பவனை—சத்

14 அன்றும் கண்டேன் இன்றும் கண்டேன்
என்றும் காண்பேன் சரவண பவனை—சத்

15 பந்தம் அறுக்கும் பண்பளி பாலன்
சுந்தர ஷண்முக சரவண பவனே

16 அஞ்சேன் அஞ்சேன் அஞ்சற் றிருவடி
கெஞ்சிப் பற்றிச் சரவண பவனை—சத்

சுப்ரம் மண்யம் சுப்ரம் மண்யம்
சுப்ரம் மண்யம் சுப்ரம் மண்யம்—கோஷ்டி

2. பஜனை

ராகம்—ராகமாலிகை: 'சாம்பசதாசிவ'—மெட்டு.
ஏகதாளம்

சுப்ரம் மண்யா
சுப்ரம் மண்யா
சுப்ரம் மண்யா
நமோ நமோ—சிவ (கோஷ்டி)

அரஹர சிவனின்
முரஹரி மருகா
அன்புரு பாலா
நமோ நமோ—சிவ (சுப்ரம்)

ஆசை பாசம்
ஈசா நேசா
அழிக்கும் முருகா
நமோ நமோ—சிவ (சுப்ரம்)

இந்திர தேவர்
சுந்தர குகனே
இன்பத் தலைவா
நமோ நமோ—சிவ (சுப்ரம்)

ஈகை உளத்தா
தோகை மயிலா
ஈயார் அழிவே
நமோ நமோ—சிவ (சுப்ரம்)

உய்வோர் மெய்யர்
அய்யா அமரா
ஊன்றும் உறவே
நமோ நமோ—சிவ (சுப்ரம்)

ஊன்று ரழிவே
சான்றோர் சரணு
உன்தன் திருவடி
நமோ நமோ—சிவ (சுப்ரம்)

எந்தன் கந்தா
வந்தருள் வேலா
எங்கே சென்றாய்
நமோ நமோ—சிவ (சுப்ரம்)

ஏகப் பொருளே
மோகம் பொடிவா
ஏனோ தயக்கம்
நமோ நமோ—சிவ (சுப்ரம்)

ஐயம் அகற்றி
நையப் புடைநீ
காமப் பேயை
நமோ நமோ—சிவ (சுப்ரம்)

ஒன்றே குன்று
என்றன் மணியா
ஓரெழுத் துருவா
நமோ நமோ—சிவ (சுப்ரம்)

ஓம்சிவ குருபர
திம் திமி நடனு
ஒப்பற் றுயர்வே
நமோ நமோ—சிவ (சுப்ரம்)

ஔவை அடியார்
மௌளியின் முருகா
மௌனர் பெரியார்
நமோ நமோ—சிவ (சுப்ரம்)

அஃதென் பலவோர்
எஃகாய் புடைப்போய்
இஃதென் றிறைவோர்
நமோ நமோ—சிவ (சுப்ரம்)

கங்கைச் சடையன்
தங்கைக் குமரா
கதைதர கிரிதரன்
நமோ நமோ—சிவ (சுப்ரம்)

நப்போல் வளைந்தே
தப்பும் துணையே
குப்புர பணியத்
நமோ நமோ—சிவ (சுப்ரம்)

சங்கடம் சங்கரன்
புங்கவ பூஜிதா
சித்துரு சம்புவின்
நமோ நமோ—சிவ (சுப்ரம்)

ஞானம் ஞேயம்
மோனத் தில்லழி
ஞாதா திரிபுடி
நமோ நமோ—சிவ (சுப்ரம்)

டங்கா டமார டம்பக் கூத்தர்
பங்கமே பெரியா நமோ நமோ—சிவ (சுப்ரம்)

'ண' முன் 'க' வை 'ன' பின் பிணைத்த
துதி 'கணன்' இளையா நமோ நமோ—சிவ (சுப்ரம்)

தஞ்சத் திருவடி தங்கக் குமரா
மிஞ்சத் தந்திடு நமோ நமோ—சிவ (சுப்ரம்)

நம்பா எட்டா நாஸ்திகர் நாசா
எம்பால் அருள்வா நமோ நமோ—சிவ (சுப்ரம்)

பந்தம் அறுக்கும் பாலா சிலா
எந்தை முருகா நமோ நமோ—சிவ (சுப்ரம்)

மத்சரம் மாய்க்கும் மாவொளி மணியா
தத்பொருள் நீயே நமோ நமோ—சிவ (சுப்ரம்)

யஞ்ஞம் செய்யா யாகம் இல்லன்
அஞ்ஞா னம்மழி நமோ நமோ—சிவ (சுப்ரம்)

ரவிகுல ராகவ ராமன் பெருமான்
தெவிட்டா மருகா நமோ நமோ—சிவ (சுப்ரம்)

லங்கைக் கோமான் லாகவ மாயழி
ரங்கன் உறவே நமோ நமோ—சிவ (சுப்ரம்)

வள்ளியின் நாதா வள்ளல் பெருக்கே
அள்ளித் தாவருள் நமோ நமோ—சிவ (சுப்ரம்)

'ழுழுழு' கொழுகொழு வழுவழ வம்பும்
பழிப்பும் அழிமதி நமோ நமோ—சிவ (சுப்ரம்)

'ளப்ளப்' என்றே நாய்போல் நக்கும்
இருட்சுகக் கழிவே நமோ நமோ—சிவ (சுப்ரம்)

'றறற' வெனவென் றறுப்பாய் போகம்
அறம்பொருள் இன்பா நமோ நமோ—சிவ (சுப்ரம்)

'னளண ந' 'ஹா' வெனும் அட்சரம் அறியாப்
பேதையர் காப்பே நமோ நமோ—சிவ (சுப்ரம்)

ஷண்முக சுந்தர ஷடாக்ஷரச் சிவமே
கண்ணின் மணியே நமோ நமோ—சிவ (சுப்ரம்)

ஹரிஹரி மாதவ முரளீ தரஹித
ஹரிஹரப் பிரியா நமோ நமோ—சிவ (சுப்ரம்)

க்ஷாத்திரம் தற்புகழ் பற்றும்மனமழி
தோத்திரத் தலமே நமோ நமோ—சிவ (சுப்ரம்)

ஜாலச் சூரன் | மாயை சிதைத்த
காலன் காலா | நமோ நமோ—சிவ (சுப்ரம்)
ஸகலஸு பூஷண | ஸமரஸ மங்கள
அகவொளி சின்மயா | நமோ நமோ—சிவ (சுப்ரம்)
சுப்ரம் மண்யா | சுப்ரம் மண்யா
சுப்ரம் மண்யா | நமோ நமோ—சிவ (கோஷ்டி)

---

3. பஜனை

—o—

ராகம்: இஷ்டம்போல் ஏகதாளம்

மணியா மணியா | மலர்ந்தே இதயம்
பணியே தெரியான் | பணிந்தேன் வாவா (கோஷ்டி)
தணியாத் தாபம் | தாண்டவன் சுந்தரா
பிணிபோல் வதைக்க | பிழையென் செய்தேன் (மணியா)
அணிகலம் டம்ப | ஆடைகள் பயனே
மணிகள் ஓசை | மயக்குமோ உன்னை (மணியா)
கிணிகிணி கிண்கிணி | குலுங்கும் சிலம்புகள்
மணியணி பாதா | மருகா தந்தருள் (மணியா)
துணிந்தே செய்த | துஷ்டச் செயல்களை
கனிந்தேன் நினைத்தே | காட்டிடு சமாதி (மணியா)
திணியத் தின்று | திட்டியே நாக்கை
பணிவதை மறந்த | பாழும் மனமழி (மணியா)
கணித்தார் ஜென்மக் | கணக்கில் துன்பம்
இனியே வேண்டாம் | ஈசா பிறவி (மணியா)
மணியும் நாளும் | மாதமும் ஓடுதே
மணியா உன்முக | மலர்காண் எப்போ (மணியா)
பேணிப் பெறவே | [1]பேரினி வாழ்வு
[2]சாணியாம் சிறுசுகம் | சாமியே வேண்டேன் (மணியா)

1. பேரினிப்பை (பேரின்பத்தை) பேணி (குமரன் பணி இயற்றி) பெறவே (பெறுவதற்காகவே) வாழ்வு ஏற்பட்டுள்ளது, 2. விலங்குகளின் மலம்.

4. பஜனை

ராகம்: மத்யமச்ருதியில் இஷ்டம்போல் தாளம்: ஏகதாளம்

ஆடிய பாதன் அம்பலவாணன்
நாடிய குருபரன் நற்சிவசுகமே (கோஷ்டி)

தேடிப்பிடியார் இதயத்துள்ளே
ஓடித்திரிந்தும் ஒன்றனைக்காணுர் (ஆடிய)

ஆடிக்கூடுவர் அழிசுக அழகியர்
பாடியும் மணியனை பாரார் சத்தியம் (ஆடிய)

வீடிவன் வேலன் வீணைப்பொருளை
நாடிப் பயனென் நற்சுகம் அழியும் (ஆடிய)

வாடி யலறிய வானவர் காத்தவன்
பாடிப் புகழைப் பற்றவே வருவான் (ஆடிய)

மாடிமேல் மாடி மலைதன வாழ்வும்
நாடிடும் யமனை நடுங்கச் செய்யா (ஆடிய)

தாடியும் சடையும் தடுக்கா தையா
காடிலும் பற்றும் கலக்கும் மனமே (ஆடிய)

ஓடிச்சி தைக்கும் ஓய்விலாச் சித்தம்
தேடிச் சரவணன் சுந்தரனழித்தான் (ஆடிய)

பஜனை 5.

ராகம்:—நொண்டிச்சிந்து தாளம்:—ஆதி

1 அகப்புறத் துறவாண்டி— அவன், இகப்பொருள்
அகற்றிட, வருவாண்டி — ....குகன் (கோஷ்டி)

2 தகத்தக ஒளியாண்டி — சுந்தரன் கதறிட
அகத்தினுள் புகுந்தாண்டி — ....குகன் (அக)

3 மறு பிறப் பறுப்பாண்டி — மாரன் அணுகாத
மருந்ததைத் தருவாண்டி — ....குகன் (அக)

4 கலைகளுக் கிரங்காண்டி — கந்தன் புகழ்ந்திட
அலை[2]களை யொழிப்பாண்டி — ....குகன் (அக)

5 கருணையில் கடலாண்டி — கரைந்தே கூவிட
உருப்பெற் றெழுவாண்டி — ....குகன் (அக)

6 சிறுபயல் மணியாண்டி — சிரித்தே இதயம்
அருள் கொண் டாடுவாண்டி— ....குகன் (அக)

7 திருத்தணி மலையாண்டி — தில்லை அம்பலன்
குருபர ப்ரண வாண்டி — ....குகன் (அக)

8 கதிர் காமப் பரனாண்டி — காம அறுவினை
மிதித்தழி சினத்தாண்டி — ....குகன் (அக)

(1) அனுபவ மற்ற வின் படிப்பிற்கு
(2) இன்னல் அலைகளை

பஜனை 6.

ராகம்:—தில்லான மெட்டு **தாளம் :—ஆதி**

1 சத்குருவாம்[1] சித்துருவன் — சாமி[2]தில்லாலே
பற்றுருக்[3]கண் அழித்துப்பாரு — சாமிதில்லாலே (கோஷ்டி)

2 அத்துவித சித்திப் பொருள் — சாமிதில்லாலே—ப்ரேம
பக்திக்குத்தா னகப்படுவான் — சாமிதில்லாலே (சத்குரு)

3 பற்றவெறும் வேஷக்காவி — சாமிதில்லாலே
மற்றதாடி பூஜை கண்டு — மயங்கான் தில்லாலே (சத்குரு)

4 சித்தத்துள்ளே சுத்திநிற்பான் — சாமிதில்லாலே
தொத்த மாசித் திகளெட்டும் — தோன்றுன் தில்லாலே (சத்குரு)

5 சித்தம் சுத்தி செய்து பற்று — சாமிதில்லாலே
கத்தி[1]ச் சும்மா கல்விகற்கக் — காணுய் தில்லாலே (சத்குரு)

6 முக்திஒன்றே வேண்டி நில்லு — சாமிதில்லாலே
மற்றப் பொருள் கெட்டழிக்கும் — மாயைதில்லாலே (சத்குரு)

7 பற்றிசுந்தரன் பாலனடி — சாமிதில்லாலே
பற்றயமன் வரும்முன்னே — பணிவாய் தில்லாலே (சத்குரு)

8 சுற்றித்தலம் ஆடி ஓடாய் — சாமிதில்லாலே
சுற்றும் சிந்தை அடக்கிக்காணு — சாமிதில்லாலே (சத்குரு)

1, 2, சாமிநாதன், ஸ்வாமி—சிவனுக்கு, குருநாதனை
3 உலகப் பொருள் ஆசாபாசத்தை அழித்து
4 கத்தி, பிரசங்கங்கள் செய்து, சாஸ்திரங்கள், தோத்திரங்களை உரக்கப் படித்து.
5 தாரண தியானத்தால் மனதை அடக்கி.

பஜனை 7.

ராகம்:—இஷ்டம்போல் தாளம்:—ஆதி

ஷண்முக நாதா சஞ்சலம் நசித்தே
சுந்தரா தந்திடு சுகப்பெரு சமாதி (கோஷ்டி)

1 தண்டைகள் குலுங்க தாண்டவ மாடிடும்
பண்டங்கள் மூலா பாசம் அழித்திடு (ஷண்முக)

2 பிண்டங்கள் கருக்குழி பிறந்தே சிதைந்தேன்
தண்டனை போதும் தகித்திடு ஊழ்வினை (ஷண்முக)

3 உண்டே உலகில் உறங்கும் மதியை
விண்டே யழித்து விழிக்கச்செய் அறிவில் (ஷண்முக)

4 மண்டலம் சுற்றியே மாசுகம் பெற்றரோ
கண்டிடா தாழ்த்திடு கந்தா யோகம் (ஷண்முக)

5 அண்டிடா தெந்தனை அழித்திடு வம்பரை
கண்டிடா தெங்கிலே காதைத் துளைக்குறுர் (ஷண்முக)

6 பண்பளி சாஸ்திரம் பலமாய் படித்தும்
விண்ணெளி எட்டார் வீணாய் வாழ்குறுர் (ஷண்முக)

7 மண்ணைத் துறந்து மதிமுக சுப்பனென்
கண்களைத் திறந்ததைக் கண்டிடார் வம்பர் (ஷண்முக)

8 தண்டமாய் ஜென்மம் தாங்கி வீண் பிறர்தொழில்
பண்புயர் திருவடி பற்றுர் மடமை யென் (ஷண்முக)

9 குண்டல கிரீடக் கோமள வதனஎன்
அண்டத்தாசை அடியோடழிப்பாய் (ஷண்முக)

---

12 DEC 1955
MADRAS

8. பஜனை.

ராகம் : புந்நாகவராளி. ஏகதாளம்.

1 வேல்முருகா வா என்முருகா வா
ஓமுருகா வா உளவமுதே வா (கோஷ்டி)

2 என் முருகா வா என் சாமீ வா
என் அப்பா வா என் அய்யா வா

3 கந்தப்பா வா கந்தய்யா வா
சின்னப்பா வா சிங்காரா வா

4 என் உடலே வா என் உயிரே வா
என்னுளமே வா குரு பரனே வா

5 சுந்தரனே வா சுப்ரமண்யாவா
வந்தாளு வா வளரொளியே வா

6 ஏகாந்தா வா ஏசாமி வா
கூருதே வா குஹநாதா வா

7 மந்திரமே வா மால் மருகா வா
வந்தணையே வா வாடுறேனே வா

8 ஆறுமுகா வா ஆறெழுத்தா வா
ஏறுமயிலா வா ஏன் மோடி வா

9 தாள் பணிந்தேன் வா தஞ்சம் தந்தே வா
நான் காண வா நற்குஹனே வா

10 வள்ளி நாதா வா வளர்பிறையே வா
துள்ளி யாடி வா துன் பழித்து வா

11 ஓடி வா உள்ளம் வா ஆடிவா குகனே வா
கந்தாவா குமராவா கருணை வா கணமே வா

12 முருகா வா மருகா வா முதலே வா அறிவே வா
அருகே வா அழகா வா அபயா வா அருளே வா

9. பஜனை.

ராகம் : சங்கராபரணம். தாளம் : ரூபகம்.

கந்தனே வேலனே வா கருணை நிதியே வா
சுந்தர ஷண்முகா வா சொக்கன் மகனே வா (கோஷ்டி)

1 எந்தன் கண்ணே வா ஏனோ மோடி வா
வந்துநீ அணையே வா வளருளம் முருகா வா

2	சிவனின் குகனே வா	சிந்தையின் சுகமே வா
	தவமே பயனே வா	தாண்டவன் குமரா வா
3	பாலக் கந்தா வா	பார்வதி செல்வா வா
	லோலச் சிறுவா வா	லோகம் காப்போய் வா
4	சேவல் கொடியா வா	செந்தமிழ் கடவுளே வா
	தேவர் தலைவா வா	தேன் மொழி தஞ்சமே வா
5	எட்டுக் குடியா வா	என்னுள் நிற்போய் வா
	துட்டுக் கிரங்கோய் வா	தூயருக்கருள்வோய் வா
6	சரவண பவனே வா	சஞ்சல நாசனே வா
	சரவணப் பொய்கையா வா	சத்சிதானந்தனே வா.

மங்களப் பேறு.

*ஒன்று[1] மில்லா[2] ததொன்ற[3] கண்ட ஒன்றிழிந்தே[4] சிதறக்[5]
"குன்றின்[6] மேல்பா" ரெனஉருக் கொண்ட கூத்தன் சதி[7] ஏவக்
கன்று[8] திளைத்த[9] கரவைப் பசுவை விட்ட, கன்றே[10] போல
நின்றுன் பால்மணம் மாறுப் பாலனுய், நிலைக்கெட்டா[11] வின்பன்.[12]

1, 2, 3: ஒரு விதமான உருவமும் அற்ற, ஒன்றுன, ப்ரம்ம வஸ்து. 4. நிராகாரமான ஒரு நிலையிலிருந்து இழிந்து. 5. நாமரூபப் ப்ரபஞ்சமாகப் பரவித்தோன்ற. 6. அச்சிருஷ்டியில் விளங்கிய குன்றின்மேல். 7. நாமரூபம் கொண்ட அன்னை ஆதி சக்தி. 8. கருஈன்ற கஷ்டத்தால் மனம் சளைக்காது. 9. உடல் இளைத்த, களைத்த. 10. பிறந்தவுடன் வீறு தோன்றி நிற்கும், அழகிய சிறு கன்று போல. 11. சாரூப சாமீப நிலைகளுக்கும் அதிகமான, சாயுஜ்யத்திற்கே கிட்டும். 12. பேரின்ப வஸ்து.

*முந்திய ஜென்மத்தில் நேர்ந்த ஆக்கியோன் பாக்கியம்.

இன்றும் என்றும் இன்பளிக்கும் ஈசன் குமரன்
அன்றே[1] கண்ட பலனுல் அவதரிக்க இதயம்
நின்றேன், நிராகார நிதியா மிவனைப் பற்றி
வென்றேன் வித்தை, மங்களமாய் வேண்டி வாழ்வீர்!

---

1. முன்ஜென்மத்தில். 2, 3: பிறப்பிறப்புக் காரணமான வினை வித்தை அழித்து வென்றேன்.

ஓம் தத் ஸத்.

அன்னையின் திருவடி மலர்கள்

ஆசிரியர் : **சுந்தரம்**

கந்தனை ஈன்ற அன்னை சக்தியின் புகழ். துக்கக்கடல் தாண்டி மிக்கச் சுகம் பெரும் உளமுருக்கும் அரும்பாடல்கள். வினை வெல்லும் அன்னையின் துதிகள். மனமுருகிக் கதறி, பக்திச் சுனைவிழ்ந்து மறவாதிருக்கப் பேரின்ப சுக சூழ்ச்சிகள். "கந்தன் புகழ்" மகிழ்ந்தவர்க்கு அவன் 'அன்னையின் திருவடி மலர்' மறக்கவே முடியாது.

பக்தி ஞான வைராக்கியத்திற்குதவும் அநேக குறள் வெண்பாக்களும் அடங்கியது. கவர்ச்சிக்கும் இரு மூவர்ணப் படங்கள்.

தினம் துதியுங்கள். வினை கழியுங்கள்.

விலை ரூ. 2-8-0 தபால் சொலவு அணா 8

குமரன் ஜனனம்

ஆசிரியர் : **சுந்தரம்**

கந்தன் பிறந்த திவ்ய சரிதம். தாக்ஷாயிணியின் முடிவிலிருந்து, தாரகன் வதம்வரை, ஒப்பற்ற செய்யுள் வசன நடையில் மனதைக் கவரச் செய்கின்றன. சிவனின் ஓயாச் சமாதி, தாரகனின் தவம், வரம், தேவர்களின் துன்பம், உமா ஜனனம், சிவனின் சேவை, மதன் தகனம், உமையின் பஞ்சாக்கினித் தவம், சிவன் வெறுத்து தக்ஷிணா மூர்த்தமாய் மாறுதல், அத்வைத போதம் செய்தல், தவத்திலிருந்து மீட்டி உமையை மணத்தல், சிவனின் ஸ்கலிதம், முருகன் பொய்கையில் பிறத்தல், கார்த்திகைப் பெண்கள், ஆறும் ஒன்ருகி, சக்தியினிடம் வளர்தல்—

தாரகன் வதம்வரை அருள் பிரவாக வாக்கால் வெளி வந்த இன்பச் சுவைத் திரட்டு. தமிழ் கலைக்கு ஒரு தெய்விக புதுத் தேனமுது.

THE YOGA PUBLISHING HOUSE,
1-A, Peyappa Garden, Tasker Town,
BANGALORE.

Printed at GIRINATH POWER PRESS, 11, St JOHN's ROAD, BANGALORE-1